# அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கை வரலாறு

- அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகமானது ஒரு வரலாற்று புஸ்தகமாகும்
- கருப்பொருள் வசனம் 1:8
- முக்கியமான வார்த்தை – நீங்கள் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்
  - அதிகாரம் 1-6 – எருசலேமிலும், யூதேயாவிலும்
  - அதிகாரம் 7-10 – சமாரியாவில்
  - அதிகாரம் 11-28 – உலகத்தின் முடிவுபரியந்தமும்
- முக்கிய நபர்கள்
  - அதிகாரம் 1-12 – பேதுரு
  - அதிகாரம் 13-28 – பவுல்
- முக்கிய அம்சம்
  - பரிசுத்தாவியின் வல்லமை – வசனம் பிரசங்கிக்கப்படுதல் - உபத்திரவம் - வளர்ச்சி

## A. அரசியல் பிண்ணனி

- நான்கு முக்கிய இராஜ்யங்கள்
  - பாபிலோன்
  - மேதியா, பெரிசியா
  - கிரேக்கம்
  - ரோம்
- பவுல் பிறந்து வளர்ந்தது ரோம இராஜ்யத்தின்போது, ஆனால் கிரேக்க மொழியின் ஆதிக்கம் இருந்தது.

### கிரேக்க சாம்ராஜ்யம்

1. பிலிப் மாசிடோனியா
   - மகா அலெக்ஸ்சாண்டரின் தந்தை. மாசிடோனியாவை கைப்பற்றியவர். தனது மகள் பெயரான தெசலேனிக்கேயா என்ற பெயரை அப்பகுதியின் ஓர் பட்டணத்தற்கு சூட்டினவர்.
   - இவர் கிரேக்க இராஜ்யத்தை ஆரம்பித்தாலும், அதை ஸ்திரப்படுத்தினது மகா அலெக்ஸ்சாண்டர்.
2. மகா அலெக்ஸ்சாண்டர்
   - 10 வருடம் ஆட்சி செய்து உலகின் பெரும்பாலான பகுதிகளை தன் வசமாக்கிகொண்டான்.
   - ஹலனேசேஷன் அதாவது கிரேக்கமொழி கற்றுகொள்வது அவனது ஆட்சி காலத்தில் கட்டாயமாக்கப்பட்டிருந்தது.
   - கொரிந்து கிரேக்க சாம்ராஜ்யத்தின் தலைநகரமானது.
   - கிமு 323 ல் மகா அலெக்ஸ்சாண்டர் இறந்தான்.
   - இவனது மரணத்திற்கு பின் இராஜ்யம் நான்கு பகுதிகளாக (தளபதிகள்) பிரிந்தது.
     - செலுக்கஸ் - மெசப்பொட்டோமியா
     - டாலமி – எகிப்து
     - லுசிமாகஸ் - ஆசியா மைனர்
     - கசாண்டர் - கிரிஸ்
   - இந்நான்கு தளபதிகளால் ரோமாபுரியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியவில்லை. காரணம் ரோமாபுரி வளர்ந்து உலகத்தின் மையமாக மாறினது.
   - செலுக்கஸ் மற்றும் டாலமி யூதர்கள் மத்தியில் வரவேற்ப்பை பெற்றிருந்தது. டாலமி பவுலின் ஊழியத்தில் முக்கிய பங்களித்துள்ளது.

ரோம சாம்ராஜ்யம்

1. ஜுலியஸ் சீஸர்
   - ரோம சாம்ராஜ்யத்தை நிருபியவர்
   - யூதமார்க்கத்தை சட்டபூர்வமாக அறிவித்தவர்
   - கிறிஸ்தவத்தை சட்டபூர்வமாக அறிவித்தது காண்ஸ்டான்டைன்
   - ரோமர்களுடைய எல்லா பட்டணங்களிலும் ஜெப ஆலயங்கள் கட்டப்பட்டன - இது பவுலின் ஊழியத்திற்கு மிக உதவியாக இருந்தது காரணம் எங்கெல்லாம் பவுல் சென்றானோ அங்கு ஜெபஆலயங்களுக்கு சென்று பிரசங்கித்தான்.
2. அகஸ்டர் சீஸர்
   - ஜுலியஸ் சீஸரின் தத்து பிள்ளை, யூதாவுக்கு ராஜாவாக இருந்தவன்.
   - கிறிஸ்து பிறந்தபோது முதன்முதல் மக்கள்தொகை கணக்கெடுப்பு எடுத்தவன் (லூக் 2:1)
   - ஏரோதுவும், இவனும் நண்பர்கள் மட்டுமல்ல ஒன்றாக படித்தவர்கள்.
   - அம்மா – யூதமார்க்கத்தை சேர்ந்தவள்: அப்பா – ஏதோமியன்
   - ஏரோது, இவனிடம் யூதர்கள் எருசலேமில் உள்ளவர்களுக்கு உதவ பணம் அனுப்பலாம் என கட்டளை பிறப்பிக்க சொன்னான் இதன் மூலம் ஏரோது வரிப்பணம் பெற்றுக்கொண்டான்.
   - பவுலுக்கு இது மிகவும் உதவியாக இருந்தது காரணம் எருசலேமில் உள்ள ஏழை விசுவாசிகளுக்கு பணம் சேகரித்தான்.
   - சேவகர்கள்: 20 வயதுக்கு மேற்ப்பட்ட திறமைபெற்றவர்கள் இராணுவத்தில் சேரவேண்டும் என கட்டளை பிறப்பித்தான். மட்டுமல்ல பிரச்சனை ஏற்படும் இடங்களில் சேவகர்கள் உடனே இருப்பார்கள்.
   - சாலைகள்: பிரதான சாலைகள் பவுலின் ஊழியத்திற்கு உதவியாக இருந்தது.
   - முதல் மிஷினரி பயணம் - கடல் மார்க்கம்
     இரண்டு மற்றும் மூன்றாம் பயணம் - சாலை மார்க்கத்தை பயன்படுத்தினார்.
3. கிளாடியஸ்
   - யூதர்களை ரோமாபுரியை விட்டு வெளியேற்றியவன். காரணம் யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் அடிக்கடி சண்டை (புரிந்துகொள்ளாததின் நிமித்தமாக) ஏற்ப்பட்டதால்…
   - அநேக யூதர்கள் பல இடங்களுக்கு சிதறி சென்றனர் (ஆனால் எருசலேமுக்கு போகவில்லை)
   - ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கிலிலா கொரிந்துவுக்கு சென்று பவுலுக்கு உதவியாக இருந்தனர்.
4. நீரோ
   - ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களோடு நல்ல உறவு வைத்திருந்தவன் (பவலுக்கு கூட வீட்டுசிறை தந்தவன்). பிற்பாடு அரசியல் காரணங்களுக்காக கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக செயல்பட்டான்.
   - இவன் புது ரோமாபுரியை உருவாக்க நினைத்து, பழைய ரோமாபுரியை தீக்கொழுத்தினான் பழியை கிறிஸ்தவர்கள் மீது போட்டான்.
   - மட்டுமல்ல கிறிஸ்தவர்களை உயிரோடு கொழுத்தி, அவர்களை கம்பத்தில் கட்டிபோட்டு விளக்காக பயண்படுத்தியவன்.

## B. யூதர்களின் பிண்ணனி

1. ஏரோது (Herod the great)
   - யூதர்களின் முதல் ஏரோது. அகஸ்துராயனின் நண்பன்.
   - யூதர்களின் தேவாலயத்தை புதுபித்ததின் நிமித்தமாக அவர்களுக்கு பிரியமானவனாக மாறினான்.

- ➢ கிறிஸ்து இவனது நாட்களில்தான் பிறந்தார். அவரை கொலைசெய்ய முயற்சித்தான்
- ➢ ஏரோதுக்கு பிற்பாடு அவனது ராஜ்யமானது தனது ஆறு பிள்ளைகளால் ஆறு பகுதிகளாக பிரிக்கப்பட்டது.

1. ஏரோது பிலிப் (லூக்கா 3:1-11)
2. அர்கெலாயு (மத்2:19-23)
3. அரிஸ்டோபுலஸ்
4. ஏரோது ஆன்டிபஸ் (மத்3:1)
   - ❖ இயேசு இவனை நரி என கூறுகிறார் (லூக்கா 13:33)
   - ❖ யோவான்ஸ்நானகனை சிரைசேதம் பண்ணியவன் (மாற்கு 6:26)
   - ❖ கிறிஸ்துவை கேலி செய்தவன், அவன் பார்க்க விரும்பினது கிறிஸ்துவை அல்ல அவருடைய அற்புதங்களை (லூக்கா 23:8).
   - ❖ தன் சகோதரனுடைய மனைவியை விவாகம் செய்தவன் (மாற்கு 6:17)
5. ஆன்டிபேட்டர்
6. ஏரோது பிலிப் 1
   - ❖ ஏரோதியாளின் கணவன். இவளுக்காக ஆன்டிபஸ் இவனை கொன்றான்

<u>அப்போஸ்தலர் நடபடிகளில் இன்னும் இரு ஏரோதை காணலாம்.</u>

1. <u>ஏரோது அகரிப்பா 1 (அரிஸ்டோபுலசின் மகன்)</u>
   - ➢ யாக்கோபை பட்டயத்தால் கொன்றவன் (அப் 12:1-24)
   - ➢ இவனும், மனாயீனும் ஒன்றாக அரண்மனையில் வளர்க்கப்பட்டவர்கள் (அப் 13:1)
2. <u>ஏரோது அகரிப்பா 2 (ஏரோது அகரிப்பா 1 ன் மகன்)</u>
   - ➢ பவுல் இவனுக்கு சுவிஷேசம் அறிவிக்கிறான் (அப் 26:28) என்னை கொஞ்சம் குறைய கிறிஸ்தவனாகிறதற்கு சம்மதிக்கிறாய்….
   - ➢ இவனுக்கு இரண்டு குமாரத்திகள் (பெர்னிஸ் மற்றும் துருசில்லா)
   - ➢ பெர்னிஸின் 16-வது வயதில் தகப்பன் இறந்துவிட்டார். பின்பு தனது மாமா சால்சிஸை திருமணம் செய்திருந்தாள். சால்சிஸின் மரணத்திற்க்கு பின் தன் சகோதரனாகிய ஏரோது அகரிப்பா 2 உடன் வாழ்ந்து வந்தாள் (தாய் வேறு ஆனால் தகப்பன் ஒன்றே)
   - ➢ துருசில்லா பெலிக்ஸை திருமணம் செய்திருந்தாள் (அப் 24:24).

## C. <u>யூதர்களின் மதரீதியான பிண்ணனி</u>

பவுலின் நாட்களில் அதிகமான மத பிரிவுகள் காணப்பட்டன.
பாபிலோனிய சிறையிருப்புக்கு பிற்பாடுதான் இந்த மதப்பிரிவுகள் தோன்றின.

### 1. பரிசேயர்

- பவுல் ஒரு பரிசேயன் (அப் 23:6)
- பரிசேயர் என்பதின் அர்த்தம் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் ஆனால் கிறிஸ்துவோ அவர்களை மாயக்காரர் என்றார் (மத் 16:3).
- கடவுள் தங்களுக்குத்தான் என்று சொந்தங்கொண்டாடுபவர்கள்
- நியாயப்பிரமாணத்திற்கு முக்கியத்துவம் தருபவர்கள்
- நியாயப்பிரமாணத்தோடு யூத வாய்வழிபாரம்பரியத்தையும் நம்புபவர்கள்
  - ➢ லூக்கா 18:11,12 – உபவாசம்
  - ➢ மாற்கு 7:1-9 – தசமபாகம், மற்றும் பல…
- இவர்கள் விசுவாசிக்கிற காரியங்கள்
  - ➢ ஆத்துமா அழியாது
  - ➢ சரீர உயிர்த்தெழுதல்
  - ➢ நியாயத்தீர்ப்பு (செய்த நன்மை தீமைக்கு பலன்)
  - ➢ தேவதூதன் மற்றும் பிசாசு

2. சதுசேயர்

- பரிசேயர்களின் கொள்கைக்கு எதிரானவர்கள்
- அரசியல் காரணங்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட பிரிவு
- மோசேயின் நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிப்பார்கள் ஆனால் யூதவாய்வழிபாரம்பரியத்தை புறக்கணிப்பார்கள்.
- லேவி கோத்திரம் இப்பிரிவை சார்ந்தவர்கள் (ஆசாரியர்கள் அல்ல)
- மெக்காபியர் காலத்தில் இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது (கிமு 170-160)

3. வேதபாரகர்

- வேதத்தை கற்றுக்கொடுப்பவர்கள் மட்டுமல்ல பிரதி எடுப்பவர்கள்
- வேதத்தை நன்றாக அறிந்தவர்கள் (எஸ்றா 7:6,10)
- நாளடைவில் வேதத்தை சொந்தமாக மொழிபெயர்த்தார்கள் (மத்15:1-9. 23:2-4)
- ஜெபஆலயங்களிலே முதன்மையானவர்களாக இருந்தார்கள்.
- பள்ளிகள் ஆரம்பித்து சீஷர்களை உருவாக்கினார்கள்

4. செலட்ஸ் (வைராக்கியமுள்ளவர்கள்)

ஏரோதுவின் நாட்களில் ஆரம்பிக்கப்பட்ட பிரிவு
ரோம அரசாங்கத்திற்கு வரி கட்ட எதிர்த்து நின்றவர்கள்
ஹலனேஷசனுக்கு எதிரானவர்களும் கூட

5. எசன்ஸ்

ஆவிக்குரிய வைராக்கியமுள்ளவர்கள்
மேசியாவின் வருகைக்கு காத்திருந்தவர்கள்
தங்களை தாங்களே பிரித்துக்கொண்டு தனிமையாக (சாது) வாழ்ந்தவர்கள்
யோவான்ஸ்நானகன் இவ்வகுப்பை சார்ந்தவனாக இருக்கலாம் என கருத்துண்டு.
இன்னும் பல பிரிவுகள் காணப்பட்டன.

## D. <u>ரோமர்களின் மதரீதியான பிண்ணனி</u>

அகஸ்துராயன் நாட்களில் ராஜாக்களை வணங்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது.
சாத்தானை வணங்கும் முறையும் இருந்தது

- சீமோன் என்னும் மாயவித்தைக்காரன் (8:9)
- எலிமா என்னும் மாயவித்தைக்காரன் (13:8)
- மாயவித்தைக்காரர்கள் அநேக மந்திர புஸ்தகங்களை எரித்தனர் (அப் 19:19)

## E. <u>கிரேக்கர்களின் மதரீதியான பிண்ணனி</u>

- லீஸ்திராவிலே பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுலை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள் (அதி 14).
- அத்தேனே பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருந்தது (அதி. 17)
- ஆசியாவிலேயே மிகப்பெரிய கோவிலான தீனாளின் ஆலயம் எபேசு பட்டணத்தில் இருந்தது (அதி. 19)

கிரேக்கர்கள் தத்துவங்களுக்கு பெயர்போனவர்கள்.

1. பிளாட்டோனிஷம் (ஆன்ம நேயம்)
    - இந்த உலகம் உண்மை அல்ல, இது மாயையான உலகம் நமது வாழ்க்கையும் மாயை.
    - எப்பொழுது உண்மையை தேடுகிறாயோ அப்பொழுது மெய்யான வாழ்வை கண்டுபிடிப்பாய்.
    - பிலாத்து இயேசுவிடம் கேட்கிறான்: சத்தியமாவது என்ன? (யோவான் 18:38)
2. நாஸ்டிசிஷம் (ஞானமார்க்கம்)
    - இரட்சிப்பை பெற்றுக்கொள்ள சிறப்பு ஞானத்தை அடையவேண்டும்.

- கடவுள் பரிசுத்தமானவர் ஆகவே அவர் தீமை நிறைந்த இந்த உலகத்தை உருவாக்கமுடியாது. எனவே கடவுள் மனிதனாக மாறி இந்த உலகத்தை உருவாக்கினார் என இக்கொள்கை கூறுகிறது.
- தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்பது இதன் கொள்கை (கொலோ 2:21,8)

3. எப்பிகுரியனிஷம் (அப் 17:18)
   - நாளை நம்முடையதல்ல ஆகவே இருக்கும்வரை நன்றாக அனுபவிக்கவேண்டும்.
   - ஆனால் இயேசு கூறுகிறார்: மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? (மத்-16:26)
4. ஸ்தோயிக்கர் (இன்ப துன்ப நடுநிலை கோட்பாடு)
   - கடவுள் ஒரு மனிதன் அல்ல அது ஒரு சக்தி. உலகத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது இந்த சக்தியே.
   - இயற்கை எல்லாம் நன்றாக போய்கொண்டிருக்கிறது ஆனால் மனிதன் அவைகளை அழிக்கிறான்.
   - இயற்கையை அழிக்காதே, இயற்கையோடு வாழு

## F. <u>சமுதாய பிண்ணனி</u>

- அடிமை சந்தைகள் காணப்பட்டன

## G. <u>மொழி பிண்ணனி</u>

- படித்தவர்கள் மத்தியில் பயன்படுத்தப்படும் மொழி லத்தின்
- பொதுவாக பேசுவதறக்கு பயணப்படுத்தும் மொழி கிரேக்கம்
- பாலஸ்தீனம் பகுதியில் பயண்படுத்தும் மொழி அராமிக்
- லூக்-23:38 இவன் யூதருடைய ராஜா என்று, கிரேக்கு லத்தீன் எபிரெயு எழுத்துக்களில் எழுதி, அவருக்கு மேலாக வைக்கப்பட்டது.

பவுல்

- பவுல் (ரோம பெயர்) என்பதின் அர்த்தம் சிறியவன் என்பதாகும்.
- சவுல் (எபிரெய பெயர்) என்பதற்கு கேட்டுப்பெற்றுக்கொண்டவன் என்று அர்த்தமாகும்.
  - ➢ நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன் (பிலி 3:6).
  - ➢ நல்மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்தவன் (அப் 23:1)
- பிறந்தது கிபி 1.
- பென்யமீன் கோத்திரத்தை சார்ந்தவன் (பிலி 3:5)
- கீர்த்தி பெற்ற தர்சு பட்டணத்தில் ரோம குடிமகனாக பிறந்தவன் (22:28, 21:39)
- தகப்பனார் ஒரு பரிசேயன் (அப் 23:6)
- தாயார் குறித்த எந்த தகவலும் இல்லை.
- எருசலேமில் பவுலின் சகோதரி இருந்ததாக பார்க்கலாம் (அப் 23:16). ஆனால் பவுல் எருசலேமுக்கு சென்றபோது பேதுருவின் வீட்டில் தங்கினதாகதான் பார்க்கமுடியும் (கலா 1:18) காரணம் தன் சகோதரி பெயர் கிறிஸ்தவர்களாக இருந்திருக்கலாம்.

பவுலின் கல்வி பருவம்

- யூதர்களின் பிள்ளைகளுக்கு (5 வயது வரை) முதல் பள்ளிக்கூடம் - வீடு
- 6 வயது ஆகும்போது ஜெபஆலயங்களுக்கு சென்று கற்றுக்கொள்வார்கள்.
- பவுல் தர்சு பட்டணத்தில் உள்ள ஜெபஆலயத்தில் படித்தவன்.
  - ➢ படித்தது – எபிரெய மொழி
  - ➢ பேசுவது – கிரேக்க மொழி

தர்சு பட்டணம் சிலிசியா நாட்டின் தலைநகர்

- 10 வயதில் மிஸ்னா (நியாயபிரமாண விளக்கம்) கற்றுக்கொடுக்கப்படும்.
- 13 வயதில் உயர்நிலை கல்விக்கு ஆயத்தமாவார்கள்.
    - ➢ தர்சு பட்டணத்தில் நல்ல பிரசித்திபெற்ற பல்கலைக்கழகம் இருந்தும் பவுல் எருசலேமுக்கு சென்று கமாலியேலிடம் கற்றுக்கொண்டான்.
    - ➢ பல்கலைக்கழகத்திற்கு பெயர்பெற்ற உலகின் மூன்று இடங்கள்
        - ❖ எகிப்து (அலெக்ஸ்சாண்டிரியா)
        - ❖ அத்தனே
        - ❖ தர்சு

பவுலின் வாலிபபருவம்

- ஒவ்வொரு யூதனும் தனது வாலிப பருவத்தில் ஒரு கைத்தொழிலை கற்றுக்கொள்ளவேண்டும். பவுல் கூடாரம் பண்ணுகிற தொழிலை கற்றிருந்தான் (18:3)
- தனது படிப்பை முடித்ததும் திரும்பவும் தர்சு பட்டணம் வந்து சிலிசியா முழுவதும் விருத்தசேதனத்தை குறித்து பிரசங்கித்து வந்தான் (கலா 5:11). இந்த சமயங்களில்தான் கிறிஸ்துவின் கலிலேயா மற்றும் யூதேயா ஊழியங்களும் மற்றும் கடைசியில் சபையின் பிறப்பும் காணப்பட்டது.
- பிற்பாடு அப்போஸ்தலர்களாலும், ஊழியர்களாலும் சபை வளர்ந்துகொண்டு வருகிறது.
- இச்சமயத்தில்தான் ஸ்தேவான் இரத்தசாட்சியாக மரிக்கிறான். அப்பொழுது பவுல் ஒரு வாலிபன் மட்டுமல்ல, சாட்சிகாரர்களுடைய வஸ்திரங்களை அவனுடைய பாதத்தில் வைத்திருந்தார்கள் (அப் 7:58, 22:20).
- ஸ்தேவானின் மரணத்திற்கு பவுலும் சம்மதித்திருந்தான் (8:1)
    - ❖ <u>ஸ்தேவானுடைய மரணத்திற்கு பின்பு…</u>
    - ➢ சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான் (8:3).
    - ➢ மரணபரியந்தம் துன்பப்படுத்தினேன் (22:4).
    - ➢ அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ் சொல்லக் கட்டாயப்படுத்தினேன் (26:11).
    - ➢ பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன் (பிலி 3:6)
    - ➢ நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமைசெய்கிறவனுமாயிருந்தேன் (1 தீமோ 1:13)
- விசுவாசிகள் சிதறப்பட்டு பல இடங்களுக்கு சென்று சுவிசேஷம் அறிவித்தனர் (8:4)
- ‘‘ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்’’ (7:60) - ஸ்தேவானுடைய இந்த ஜெபத்திற்க்காக சபையானது பவுலுக்காக ஜெபிக்க கடமைப்பட்டிருந்தது. பலன் பவுலின் மனமாற்றம்.

பவுலின் மனமாற்றம் (9:1-22)

- வச.2 - பவுல் தமஸ்குவிலுள்ள கிறிஸ்தவர்களை துன்பபடுத்தி, சிறைபிடித்து எருசலேமுக்கு கொண்டுவரும்படியாக பிரதான ஆசாரியரிடம் அதிகாரபூர்வமான கடிதம் வாங்கும்படியாக எருசலேமுக்கு வருகிறான் (22:5).
- வச.3 - கடிதம் வாங்கிவிட்டு திரும்பும் வேளையில் தமஸ்குவுக்கு அருகே வந்தபோதுதான் அவன் வாழ்க்கையில் அந்த மாற்றம் ஏற்பட்டது.
- இடம்: தமஸ்குவுக்கு அருகில்
- நேரம்: மத்தியான நேரம்
- தேவன் இடைபட்ட விதம்: வானத்திலிருந்து ஒளி மற்றும் ஒலி
    - ➢ பழைய ஏற்பாட்டில் தேவன் ஜனங்களிடம் அநேகமுறை இப்படிப்பட்ட விதத்தில் இடைபட்டுள்ளார்.
- ஒளியை எல்லாரும் பார்த்தனர் ஆனால் சத்தத்தை கேட்டது பவுல் மாத்திரமே (22:9).

- சுவிசேஷத்தின் ஒளி எல்லோருக்கும் ஆனால் சுவிசேஷத்தின் (ஊழியத்தின்) அழைப்பு சிலருக்கு மாத்திரமே.

## இரட்சிப்பில் பவுலின் அனுபவம்

- வானத்திலிருந்து ஒரு ஒளி (9:3)
- வானத்திலிருந்து பேரொளி (22:6)
- சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளி (26:13)
- தேவனிடம் நெருங்க நெருங்க ஒளியானது நமக்கு சாதாரணமானதாக தெரியாது.
    - சத்தத்தை கேட்டான் - வேதவசனத்தை கேட்பது
    - நீர் யார் - தேவனை பற்றி புரிந்துகொள்தல்
    - ஆண்டவரே - தேவன் என ஒத்துக்கொள்தல்
    - என்னசெய்ய வேண்டும் - ஒப்புக்கொடுத்தல்

- இப்பொழுது பவுலுக்கு பார்வை இல்லாமல் தமஸ்குவில் யூதா என்பவன் வீட்டிற்கு போகிறான். மூன்றுநாள் அங்கே தங்கியிருந்தான் (9:8,9,11).
- கர்த்தர் அனனியாவை பவுலிடம் அனுப்புகிறார் (9:10-12)
    - பவுலை குறித்த அனனியாவின் சிந்தை: <u>பொல்லாங்குகளைச் செய்தவன்</u> (9:13).
    - தேவனுடைய சிந்தை: புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் <u>தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்.</u> (9:15).
- அனனியா பவுலை ''சகோதரனாகிய பவுலே'' என்கிறான (9:17). துன்பபடுத்தினவன் சகோதரன் ஆகிறான் (இதுதான் கிறிஸ்தவ உறவு)
- தமஸ்குவிலே அனனியாவால் ஞானஸ்நானம் பெற்றான் (9:18).
    - பார்வையில்லாதவனாய் இருந்தான் – பாவியான நிலை,
    - அவன் பார்வையடைந்தான் - இரட்சிக்கப்பட்டான்
    - ஞானஸ்நானம் பெற்றான் -
    - போஜனம்பண்ணிப் பலப்பட்டான் - வேதவசனத்தால் பலப்படுதல்
    - சீஷருடனே தங்கியிருந்தான் - சகோதர ஐக்கியம்
    - கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று பிரசங்கித்தான் - சுவிசேஷ சாட்சி

## இரட்சிக்கப்பட்ட பவுலின் ஆரம்பநிலை (9:19,20)

- தமஸ்குவிலுள்ள சீஷருடனே தங்கியிருந்தான் (9:19)
- பின்பு யாருடனும் ஆலோசனை கேட்காமல் அரபி தேசத்திற்கு சென்றான் (கலா 1:17)
- கர்த்தருடைய வெளிப்பாட்டிற்காக இருக்கலாம் காரணம் தேவன் மோசேக்கு சீனாய் மலையில் தன்னை வெளிப்படுத்தினார். ஆகவே அவனும் அங்கு சென்று வெளிப்பாட்டை பெற்றிருக்கலாம்.

பவுலுக்கு சபையை குறித்து வெளிப்படுத்தின மூன்று இரகசியங்கள்

- புறஜாதிகள் யூதருடன் உடன்பங்காள் (எபே 3:3).
- சபையானது கிறிஸ்துவின் சரீரம் (எபே 5:32)
- சபையின் உயிர்த்தெழுதல் (1 கொரி 15, 1 தெச 4)

தனது மனந்திரும்புதலை குறித்து பவுல் சபைகளுக்கு சொல்லும்போது…

கொரிந்துக்கு…

- அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவன் (1:1)
- இயேசுகிறிஸ்துவை தரிசித்தவன் (9:1)

கலாத்தியாவுக்கு…


- இயேசுகிறிஸ்துவினாலே அப்போஸ்தலனாக்கப்பட்டவன் (1:1)
- கிருபையினால் அழைத்த தேவன் (1:15)

ரோமருக்கு…

- அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவன் (1:1)
- தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவன் (1:1)

தீமோத்தேயுவுக்கு…

- இயேசுகிறிஸ்து என்னை இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினவர்(1:12)




## தமஸ்குவில் பவுல்

- கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான் (அப் 9:20).
- இயேசுவே கிறிஸ்து என்று உறுதிப்படுத்தினான் (22)
- யூதர்கள் அவனைக் கொலைசெய்யும்படி ஆலோசனை பண்ணினார்கள் (23).
- தமஸ்குபட்டணத்து அரேத்தா ராஜாவினுடைய சேனைத்தலைவன் பவுலை பிடிக்க காவல்வைத்தான் (2 கொரி 11:32)
- ➢ உபத்திரவப்படுத்த வந்தவனுக்கு உபத்திரவம்.
- சீஷர்கள் இராத்திரியிலே அவனை, ஒரு கூடையிலே வைத்து, மதில்வழியாய் இறக்கிவிட்டார்கள் (அப் 9:25).
- பவுல் அங்கிருந்து புறப்பட்டு எருசலேமுக்கு வருகிறான் (9:26)

## எருசலேமில் பவுல்

- எருசலேம் சபையார் பயத்தினால் அவனை ஏற்றுக்கொள்ளவில்லை (9:26)
- தமஸ்குவில் உள்ள விசுவாசிகளை துன்பபடுத்த கடிதம் வாங்க எருசலேம் வரும்போது இருந்த வரவேற்ப்பு இப்போது இல்லை.
- பர்னபா அவனை அப்போஸ்தலரிடத்தில் அழைத்துக்கொண்டுபோய் அறிமுகப்படுத்துகிறான் (9:27)
- பேதுருவின் வீட்டில் 15 நாட்கள் தங்குகிறான் (கலா 1:18)
- இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபை சந்திக்கிறான் (1:19)
- எருசலேமில் சுவிசேஷத்தை அறிவிக்கிறான். அதினிமித்தம் கிரேக்கர்கள் கொலை செய்ய தேடுகிறார்கள் (அப் 9:29).
- இந்நிலையில் “எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ” என தேவனால் எச்சரிப்பை பெறுகிறான் (22:18-21).
- சகோதரர்கள் அவனை தர்சுவுக்கு (சொந்த ஊர்) அனுப்பிவிட்டனர் (9:30).

## அந்தியோகியாவில் பவுல்

- இப்பொழுது உபத்திரம் இல்லாததால் சபைகள் வளர்ந்து பெருகின (9:31). இந்த சமயத்தில்தான் சிதறிச் சென்ற விசுவாசிகளால் இங்கு சபை ஆரம்பிக்கப்படுகிறது (11:19-21).
- எருசலேம் சபையார் அந்தியோகியாவில் உள்ள விசுவாசிகளை உற்சாகப்படுத்த பர்னபாவை அங்கு அனுப்பிவைத்தனர். பர்னபா புத்திசொல்கிறான் (11:22,23).
- அறுவடையின் மிகுதியால் பர்னபா, பவுலை தேடும்படி தர்சு செல்கிறான். கண்டுபிடித்து அந்தியோகியாவுக்கு அழைத்துவருகிறான் (11:25)
- அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள் (11:26).

## அந்தியோகியா சபை

1. புதிய பெயர் கொடுக்கப்பட்டது – கிறிஸ்தவர்கள் (11:26)
   - ➢ கர்த்தருடைய வார்த்தையை கற்று அதன்படி நடந்தனர் ஆகவே கிறிஸ்தவர்கள் என்ற பெயர் வழங்கப்பட்டது.
   - ➢ 2 தீமோ 2:19 - கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது.
2. புதிய குணம் இருந்தது - யூதர்கள் மற்றும் புறஜாதிகள் இணைந்து இருந்தனர்
3. தரம் இருந்தது - தேவனுடைய கிருபை (11:23)
4. நல்ல ஆவிக்குரிய தலைவர்கள் இருந்தனர் (13:1,2)
   - <u>பர்னபா</u> – மற்றவர்களை உற்சாகப்படுத்த ஆயத்தமாய் இருந்தவன்
   - <u>நீகர் என்னப்பட்ட சிமியோன்</u> - மற்றவர்கள் பாரத்தை சுமக்க ஆயத்தமாய் இருந்தவன்
     - ▪ சிமியோன் (யூத பெயர்), நீகர் (புறஜாதி பெயர்) என்பதற்கு கருப்பு என அர்த்தம்.
     - ▪ ஆப்பிரிக்காவில் இருந்து வந்திருக்கலாம்.
     - ▪ கிறிஸ்துவுக்காக சிலுவை சுமந்தவன் இவனாக இருக்கலாம் (லூக்கா 23:26).
     - ▪ அலெக்சந்தருக்கும் ரூப்புக்கும் தகப்பன் (மாற்கு 15:21)
   - <u>சிரேனே ஊரானாகிய லூகி</u> - சுவிசேஷம் அறிவிக்க ஆயத்தமாய் இருந்தவர்கள்.
     - ▪ சீரேனே பட்டணத்தாருமாகிய சிலர் அந்தியோகியா பட்டணத்துக்கு வந்து சுவிசேஷம் அறிவித்தனர் (11:20)
   - <u>மனாயீன்</u> - கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் இழக்க ஆயத்தமாய் இருந்தவன்
     - ▪ அரண்மனையில் வளர்க்கப்பட்டவன் அதை இழந்தான்.
   - <u>சவுல்</u> - வாழ்க்கையை மாற்றிக்கொள்ள ஆயத்தமாய் இருந்தவன்
     - ▪ நியாயப்பிரமாணத்திற்கு ஆதரவாய் இருந்தவன் சுவிசேஷத்திற்கு ஆதரவாக மாறினான்.
     - ▪ பரிசேயன் பிரசங்கியாக மாறினான்
     - ▪ செனகெரிப் சங்கத்தின் அங்கத்தினராக இருந்தவன் இப்பொழுது சபையின் சங்கத்தினராக மாறினான்.
5. சபையில் பயிற்சி காணப்பட்டது
   1. ஊழியம்
      - கிரேக்க மொழியில் ''லிட்ரர்ஜியோ'' – தொடர்ந்து நடக்கும் ஊழியம்.

      புதிய ஏற்பாட்டில் 2 இடத்தில் மட்டுமே இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது
      - ➢ 13:2 – ஊழிய தொடர்பு
      - ➢ எபி 10:11 – பலியோடுள்ள தொடர்பு

      <u>சபையின் மூன்று முக்கியமான ஊழியங்கள்</u>
      - ➢ ஆராதனை - மேல்நோக்கி முன்னேறுதல்
      - ➢ ஊழியம் - வெளிநோக்கி முன்னேறுதல்
      - ➢ விசுவாசிகளை ஊன்ற கட்டுதல் - உள்நோக்கி முன்னேறுதல்
   2. உபவாசம் மற்றும் ஜெபம் - ஒன்றுபட்ட செயல்
   3. ஊழியர்களை அனுப்புதல்

      ஊழியர்களை அனுப்புதல் சபையே ஸ்தாபனம் அல்ல. இது பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதல் ஆகும்
      - ➢ வச.3 – சபை அவர்களை அனுப்பினது
      - ➢ வச.4 - பரிசுத்த ஆவி அனுப்பினார்

      சபை ஜெபத்துடன் அனுப்புதல் பரிசுத்த ஆவி அனுப்புதலுக்கு சமம்.

4. கொடுத்தல் - ஏழைகளுக்கு மற்றும் ஊழியத்திற்க்கு (11:26-30)


- அந்நாட்களிலே எருசலேமிலிருந்து சில தீர்கதரிசிகள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள். அவர்களில் ஒருவனாகிய அகபு என்பவன் எழுந்து, உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான்; அது அப்படியே கிலவுதியு ராயனுடைய நாட்களிலே உண்டாயிற்று. அப்பொழுது சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணஞ்சேகரித்து அனுப்பவேண்டுமென்று தீர்மானம்பண்ணினார்கள்.
  - காரணம் அதி 4. – எல்லாவற்றையும் விற்றுவிட்டனர்.
  - அதி.6 – விதவைகள் காணப்பட்டனர்.
- அப்படியே அவர்கள் சேகரித்து, பர்னபா சவுல் என்பவர்களுடையகையில் கொடுத்து, மூப்பரிடத்திற்கு (எருசலேமுக்கு) அனுப்பினார்கள்.
- இந்த காரியமானது பவுல் இரட்சிக்கப்பட்ட பின் 14 வருடம் கழித்து நடக்கிறது (கலா 2:1).
  - இரட்சிக்கப்பட்டது – கிபி 32
  - தமஸ்கு மற்றும் அரபியா பயணம் - கிபி 32-35
  - எருசலேமின் முதல் பயணம் - கிபி 35 (பேதுருவிடம் 15 நாட்கள் தங்கினது)
  - தர்சுவில் - கிபி 35-45 (ஏறக்குறைய 9 வருடம்)
  - அந்தியோகியா சபையில் - கிபி 45-46
  - எருசலேமின் இரண்டாம் பயணம் - கிபி 46 (பஞ்சத்தின் போது)
- பவுல் தன்னோடு தீத்துவை அழைத்துச்செல்கிறான்.
- தீத்து – கிரேக்கன், விருத்தசேதனம் செய்யாதவன். (கலா 2:3)
  - லூக்கா இதை குறிப்பிடவில்லை காரணம் அவர்களை (பவுல் மற்றும் பர்னபா) அனுப்புவது சபை – தர்ம ஊழியத்திற்காக.
  - கலாத்தியருக்கு இதை பவுல் தெரிவிப்பதற்கான காரணம் - இரட்சிப்பு நியாயப்பிரமாணத்திலேயும், விருத்தசேதனத்தினாலேயும் அல்ல என்பதை சபைக்கு எடுத்துரைக்க.
- பவுல் தர்ம ஊழியத்தை முடித்துவிட்டு அந்தியோகியாவுக்கு வருகிறான். கூடவே மாற்கு என்கிற யோவானும் வருகிறான் (12:25). பவுலின் முதல் ஊழிய பயணத்தின்போது உதவியாக இருந்தவன் (13:5).
- அவனது வீடு எருசலேமில் இருந்தது. வசதி படைத்தவனாக இருந்திருக்கவேண்டும் காரணம் அவர்களுக்கு மேல்வீடு இருந்ததாக பார்க்கிறோம் (12:12).

## பவுலின் முதல் ஊழிய பிரயாணம்

- பரிசுத்த ஆவியானவர் தமது சித்தத்தை அந்தியோகியா சபையானது உபவாசித்து ஜெபித்து வந்த வேளையில் தெரியப்படுத்துகிறார்.
- அந்தியோகியா சபையில் இருந்த பர்னபாவும் சவுலும் ஊழியத்துக்காக பரிசுத்தஆவியானவரால் அழைப்பை பெறுகின்றனர் (13:1,2).
- சபையார் அவர்கள்மேல் கைகளை (உதவி மற்றும் ஜெபத்தின் அடையாளம்) வைத்து, அவர்களை அனுப்பினார்கள் (13:3), எருசலேமிலிருந்து வந்த யோவானும் அவர்களுக்கு உதவியாக செல்கிறான் (13:5)
- அந்தியோகியாவிலிருந்து ஏறக்குறைய 25 கிலோமீட்டர் தூரமுள்ள செலூக்கியாபட்டணத்துக்கு வந்து, கப்பல் ஏறி, அங்கிருந்து சீப்புருதீவுக்குப் போனார்கள்.

1. <u>சீப்புருதீவு</u>
   - ஊழியத்தை ஆரம்பித்த முதல் இடம்.
   - இது ஒரு தீவு
   - இது ரோமாபுரியின் கட்டுப்பாட்டுக்குள்ளான நகரம்.
   - செர்கியுபவுல் என்னும் ஆளுநரால் ஆளப்பட்டது (13:7).
   - பர்னபாவின் சொந்த ஊர் (4:36)
   - உபத்திரவத்தின்போது சிதறிபோனவர்கள் சீப்புருதீவுக்கு வந்து சுவிசேஷம் அறிவித்து சபையை ஆரம்பித்தனர் (11:19).

**a.** <u>சாலமி</u>
   - யூதருடைய ஜெபஆலயங்களில் தேவவசனத்தைப் பிரசங்கித்தார்கள்.
   - அதிகமான யூதர்கள் இருந்திருக்கலாம் காரணம் ஜெபஆலயங்கள் என பண்மையில் சொல்லப்பட்டுள்ளது.




<u>ஜெபஆலயம்</u>

- சபை என்று அழைக்கப்படுகிறது
- இஸ்ரவேலா் சிறையிருப்பில் இருந்தபோது அவா்கள் செய்து வந்த பலிகளை செலுத்தமுடியாமல்போனது நாளடைவில் அதைகுறித்ததான உபதேசங்கள் கொடுக்கப்பட்டன. அதனுடைய விளைவாகதான் ஜெபிப்பதற்காக, ஐக்கியப்பட மற்றும் ஆராதிக்க இஸ்ரவேலா் கூடிவந்த இடமே ஜெப ஆலயம்.
- 400 வருட இடைப்பட்ட காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது.
- கண்டிப்பாக 10 பெரியவா்களாவது இருந்தால்தான் ஜெபஆலயம் கட்டமுடியும். அவா்களின் முன்னிலையில்தான் காரியங்கள் செய்யப்படவேண்டும்.
- பொதுவாக செவ்வக வடிவத்தில் காணப்படும்
- கூட்டம் நடத்த ஒரு சிறப்பான அறை உண்டு
- தோல் சுருளை உடைய உயா்ந்த ஆசனம் உண்டு
- கற்களாலான இருக்கைகள் உண்டு
- தலைவா்கள் மக்களை பாா்க்கும்படியான நிலையில் சிறப்பான முன்னிருக்கை உண்டு (மத் 23:6)

**b.** <u>பாப்போ</u>

- இது சீப்புருதீவின் தலைநகா்
- சொ்கியுபவுல் (ஆளுநா்) வசித்த இடம்

<u>சொ்கியுபவுல்</u>

- விவேகமுள்ளவன் (13:7)
- தேவவசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தவன்
- கா்த்தரையும், அவருடைய வாா்த்தைகளையும் விசுவாசித்தவன் (13:2).
- பவுலின் மூலமாக முதன்முதலாக இரட்சிக்கப்பட்டவன் (வேத குறிப்புபடி)

- லூக்கா முதன்முதலாக சவுலின் மற்றொரு பெயரான பவுலின் பெயரை குறிப்பிடுகிறாா் (13:9) காரணம் ஏற்கனவே சொ்கியுபவுல் இருப்பதால் இது சரியான சமயம் என நினைத்திருக்கலாம்.

<u>பா்யேசு அல்லது எலிமா (13:6,8)</u>

- இரு பெயரும் ஒருவருடையதே.
- இவன் ஒரு யூதன் (13:6)
- மாயவித்தைக்காரனும் கள்ளத் தீா்க்கதரிசியுமானவன்.
- பவுல் இவனை “பிசாசின்மகனே” என்று அழைக்கிறான் (13:10).
- அதிபதியின் விசுவாசத்தை திசைதிருப்பினவன் (13:8).
- பவுலுக்கு எதிா்த்துநின்றவன்.

- எங்கெல்லாம் தேவவார்த்தை அறிவிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் வரவேற்ப்பும், எதிர்ப்பும் இருக்கும்.
- பவுலினால் குருடனாக்கப்படுகிறான் (13:11)
- பவுல் செய்த முதலாம் அற்புதம் இது. கர்த்தருடைய வார்த்தையை உறுதிப்படுத்தும்படியாக இந்த அற்புதம் நடந்தது.

2. <u>பெர்கே</u>

- பவுலும் அவனோடே கூட இருந்தவர்களும் (பர்னபா மற்றும் யோவான்) பெர்கே பட்டணத்திற்கு வருகிறார்கள்.
- பெர்கே பட்டணம் பம்பிலியா மகாணத்தோடு சேர்ந்தது.
- இங்கே சுவிசேஷம் அறிவித்திருக்கலாம் லூக்கா ஏதும் விவரங்களை தரவில்லை. ஆனால் திரும்பி வருகிறபோது சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள் (14:24,25)
- யோவான் அவர்களை விட்டு பிரிந்து எருசலேமுக்கு போகிறான் (13:13)

<u>ஏன் யோவான் பிரிந்துசென்றான்</u>?

(வேதத்தில் காரணம் இல்லை ஆனால் சில அபிப்பிராயங்கள்)

1. தலைமைத்துவம் மாறினதால் இருக்கலாம்…(13:13)
   - ➢ பர்னபா யோவானின் இனத்தான் (கொலோ 4:10)
   - ➢ அற்புதம் நடக்கும்வரை பர்னபாவின் தலைமைத்துவம் இருந்தது. அற்புதத்திற்குபின் பவுலின் தலைமைத்துவத்தை காணலாம் (பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும்)
2. வீட்டு நினைப்பாக இருந்திருக்கலாம்…(12:12)
   - ➢ எருசலேமில் உள்ள தன் விதவையின் தாய்க்கு ஒரே மகன், வசதி படைத்தவனும் கூட.
3. மோசமான சூழ்நிலையினால் இருக்கலாம் …
   - ➢ பெர்கே மிகவும் மோசமான சேறு நிறைந்த பகுதி அந்த இடத்தின் மோசமான சூழ்நிலையினால் பவுல் வியாதிபட்டிருக்கலாம். பவுல் கலாத்தியருக்கு எழுதும்போது சரீர பலவீனத்தோடு வந்து உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன் என்கிறார் (கலா 4:13).
   - ➢ யோவான் ஒரு உதவிக்காரன் (13:5). இந்தநேரத்தில்தான் அவனுடைய உதவி பவுலுக்கு தேவை ஆனால் பிரிந்துவிட்டான். ஆகவேதான் இரண்டாம் ஊழியபிரயாணத்தின்போது அவனை பவுல் தன்னோடு அழைத்துசெல்லவில்லை. எப்படியோ அவனுடைய பிரிவானது ஊழியத்தை பாதிக்கவில்லை.
   - ➢ மோசமான (சூழ்நிலைகளை) பாடுகளை அனுபவிக்க ஆயத்தமில்லாதவனாக இருந்திருக்கலாம் ஆகவே யோவான் திரும்பிபோயிருக்கலாம்.

3. <u>பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியா (13:14-50)</u>

- ரோமர்களின் ஆளுகை உள்ள பகுதி
- பெர்கேவிலிருந்து 110 மைல் தூரம் மற்றும் கடல் மட்டத்திலிருந்து 3600 அடி உயரமுள்ள இடம்
- பவுல் மற்றும் பர்னபா ஓய்வநாளிலே ஜெபஆலயத்தில் பிரவேசித்து, உட்கார்ந்தார்கள்.
- நியாயப்பிரமாணமும் தீர்கதரிசனஆகமமும் (மோசேயின் புஸ்தகம்) வாசித்துமுடிந்தபின்பு, ஜெபஆலயத்தலைவர்கள்: நீங்கள் ஜனங்களை உற்சாகப்படுத்த வசனத்தை சொல்லலாம் என்றனர்.
- எங்கே சென்றாலும் ஜெபஆலயங்களுக்கு (யூதர்களுக்கு) சென்று பிரசங்கிப்பது பவுலின் வழக்கம் (13:5; 14:1; 17:1,10,17; 18:4,19; 19:8). காரணம் அதுவே தேவனுடைய திட்டமும்கூட (13:46; ரோமர் 1:16; 2:9,10)

<u>பவுலின் பிரசங்கம்</u>

1. இஸ்ரவேல் ஜனங்களோடு தேவனுடைய இடைபாடு (13:16-22)
   - ➢ இஸ்ரவேலை தெரிந்துகொண்டு எகிப்திலிருந்து விடுதலையாக்கினார் (வச.17)
   - ➢ வனாந்திரத்தில் 40 வருடங்களாக போஷித்தார் (வச.18)
   - ➢ வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை சொந்தமாக கொடுத்தார் (வச.19)
   - ➢ நியாயாதிபதிகளை, இராஜாக்களை ஏற்படுத்திக்கொடுத்தார் (வச. 20,21)
2. கிறிஸ்துவானவர் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இரட்சகர் (13:23-26)
   - ➢ இரட்சகரை எழும்பசெய்தார் (வச.23)
   - ➢ யோவான் அவரை குறித்து பிரசங்கித்தான் (வச.24,25)
   - ➢ முன்னமே இரட்சிப்பின் வசனம் கொடுக்கப்பட்டது (வச.26)

3. கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் (13:27-37)
    - இது சுவிசேஷமாக (நற்செய்தி) அறிவிக்கப்படுகிறது (வச.33)
4. கிறிஸ்துவின் மூலமாகதான் இரட்சிப்பானது கிடைக்கிறது (13:38,39)
    - பாவமன்னிப்பு (வச.38)
    - நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை (வச.39)
    - நீதிமானாகுதல் (வச.39)
    - நிபந்தனை: விசுவாசிக்கவேண்டும்.
5. கிறிஸ்துவை தள்ளாதபடி எச்சரிக்கை (13:40,41)

- ❖ வச.27 – ஜனங்கள் ஓய்வுநாள்தோறும் ஜெபஆலயத்தில் வாசிக்கப்படுகிற தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை அறியவில்லை.
- ❖ வச.39,40 – வேதவசனங்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

- ❖ புறஜாதியாரும் வசனங்களை கேட்க ஆர்வமாக இருந்தனர் (வச.42)
- ❖ அடுத்த ஓய்வுநாளிலும் பேசினர் (வச.44)

<u>சுவிசேஷம் அறிவித்ததின் விளைவு</u>

- அநேகர் (யூதர் மற்றும் யூதமார்க்கத்தமைந்தவர்கள்) விசுவாசிகளானார்கள் (வச.43)
- பவுலுக்கு விரோதமாக பேசி, தூஷித்தார்கள் மட்டுமல்ல துரத்திவிட்டனர் (வச.45,50)

- நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் விசுவாசித்தார்கள் (வச.48)
- சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள் (வச.52)
- ❖ தங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப்போட்டு, இக்கோனியாபட்டணத்துக்குப் போனார்கள்.
    - இது சீஷர்களுக்கு கிறிஸ்து சொன்னது (மாற்கு 6:11)
    - நியாயத்தீர்ப்புக்கு அடையாளம்

4. <u>இக்கோனியா (14:1-6)</u>
    - இக்கோனியா அந்தியோகியாவிலிருந்து கிழக்கே 96 கி.மீ தூரம்
    - ரோமர்களின் ஆளுகையில் இருந்த இடம்.
    - பவுல் ஜெபஆலயத்தில் பிரசங்கிக்கிறதின் விளைவு…
        - யூதரிலும் கிரேக்கரிலும் திரளான ஜனங்கள் விசுவாசித்தனர்.
        - விசுவாசியாத யூதர்கள் புறஜாதியாரை எழுப்பிவிட்டு பகையுண்டாக்கினார்கள்.
            - ஜனங்கள் பிரிந்து, சிலர் யூதரையும் சிலர் அப்போஸ்தலரையும் சேர்ந்துகொண்டார்கள் (14:4).
    - ஆனாலும் அநேகநாள் அங்கே தங்கி தைரியமாய் பிரசங்கித்தனர்.
    - அடையாளங்களும்அற்புதங்களும் செய்தனர்.
    - கல்லெறிய திட்டமிட்டு பிரச்சனையை உருவாக்கினர்.
    - இதை அறிந்து லீஸ்திராவுக்கு சென்றனர்.
5. <u>லீஸ்திரா</u>
    - லீஸ்திரா இக்கோனியாவிலிருந்து 30 கி.மீ தூரம்
    - இக்கோனியாவை விட குறைவான யூதர்கள் காணப்பட்டிருக்கலாம் காரணம் ஜெபஆலயத்தை குறித்து ஏதும் சொல்லப்படவில்லை.
    - பவுல் ஒரு சப்பாணியை குணமாக்குகிறான்.
        - அவனிடம் இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் காணப்பட்டது.
    - ❖ எங்கே விசுவாசம் காணப்படுகிறதோ அங்கே அற்புதம் நடக்கும். விசுவாசம் அற்புதத்திற்கு நேராக நடத்தும்.
    - ❖ இன்று மக்கள் முதலாவது எதிர்பார்ப்பது அற்புதம், அது ஒரு மனிதனை இரட்சிக்காது.

<u>அற்புதம் எதற்கு?</u>

- தேவசெய்தியை உறுதிப்படுத்தவும், அதை கொண்டுவருகிறவன் தேவனுடைய மனுஷன் என்பதை உறுதியெய்யவும்
- தேவனை மகிமைப்படுத்த வேண்டிய ஜனங்கள் பவுலையும், பர்னபாவையும் வணங்க ஆரம்பித்தனர்.
    - ❖ இன்றும் அற்புதத்தை ஜனங்கள் தவறாக கையாளுகிறார்கள்.
- பவுல் (மெர்க்கூரி) - அவர்களின் பிரதான கடவுள்

- பர்னபா (யூப்பித்தர்) - அந்த கடவுளுக்காக பேசுகிறவன். பட்டணத்துக்கு முன்னே யூப்பித்தருடைய கோவில் இருந்தது (14:13).

பவுலின் பிரசங்கம் (14:15-)

- நாங்களும் மனுஷர்தான்
- வீணான தேவர்களைவிட்டுவிட்டு ஜீவனுள்ளதேவனிடம் திரும்பும்படி அழைப்பு (14:15).
- நாம் நம் விருப்பபடி வாழ்ந்தோம் - அவர் நமக்கு நன்மை செய்தார் (14:17)
  கர்த்தர்
  - ஜீவனுள்ளவர்
  - சிருஷ்டிகர்த்தர்
  - நன்மை செய்கிறவர்
- அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து விசுவாசியாத சில யூதர்கள் வந்து, ஜனங்களை தூண்டிவிட்டு, பவுலைக் கல்லெறிந்து (இக்கோனியாவிலேயே பவுலை கல்லெறிந்து கொல்ல முயற்சித்தனர் - 14:5), அவன் மரித்துப்போனானென்று எண்ணி, அவனை லீஸ்திராவுக்கு வெளியிலே இழுத்துக்கொண்டு போனார்கள் (14:19).
- அவன் எழுந்து பட்டணத்திற்குள் பிரவேசித்தான், மறுநாளில் பர்னபாவுடனேகூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப்போனான்.

6. தெர்பை

- லீஸ்திராவிலிருந்து தெர்பைக்கு 32 கி.மீ
- அங்கு சுவிசேஷம் அறிவித்தனர், அநேகர் விசுவாசித்தனர் (14:21)
- யூதர்கள் இங்கு சென்று துன்பப்படுத்தவில்லை காரணம் பவுல் இறந்துவிட்டதாக நினைத்திருக்கலாம்.

ஊழியம் முடித்து திரும்பி வருதல்

- சென்ற வழியாகவே திரும்பி வந்ததின் நோக்கம் (14:22,23)
  - சீஷர்களை திடப்படுத்த...
  - மூப்பர்களை ஏற்படுத்த...
- பம்பிலியா நாட்டிற்கு வந்து, பெர்கே ஊரில் வசனத்தைப் பிரசங்கித்து, அத்தலியா பட்டணத்திற்குப் போனார்கள். அங்கே கப்பல் ஏறி, அந்தியோகியாவுக்கு வந்தார்கள் (14:24-26).
- ஏன் சீப்புரு தீவுக்கு போகவில்லை?
  நேரடியாக அந்தியோகியாவுக்கு கப்பல் கிடைத்திருக்கலாம்.
- அவர்கள் அந்தியோகியாவுக்கு வந்து சபையைக் கூடிவரச்செய்து (14:27),
  - தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளையும்,
  - தேவன் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத்திறந்ததையும் அறிவித்தனர்.
- முதல் மிஷினரி பிரயாணத்தில் சந்தித்த இடங்கள்
  - அந்தியோகியா, சீப்புரு தீவு (சாலமி,பாப்போ), பெர்கே, பிசிதீயாவிலுள்ள அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா, தெர்பை.
- மகாணங்கள்: சிரியா, சீப்புரு, பம்பிலியா, பிசிதீயா, கலாத்தியா.
- பயண தூரங்கள் (ஏறக்குறைய)
  - 1100 கி.மீ ரோடு பயணம்
  - 800 கி.மீ கடல் பயணம்
- அந்தியோகியாவில் சீஷருடனேகூட அநேகநாள் சஞ்சரித்திருந்தார்கள் (14:28).

இந்த சமயத்தில் நடந்த சில சம்பவங்கள்

1. பவுல் கலாத்தியா நாட்டில் உள்ள சபைகளுக்கு கடிதம் எழுதுகிறார்

- காலம்: முதல் மிஷினரி பயணம் முடிந்த உடன், எருசலேமின் ஆலோசனை கூட்டத்திற்கு முன்
- இடம்: அந்தியோகியா
- நோக்கம்: எருசலேமிலிருந்து யூதமார்க்கத்தை சேர்ந்த சிலர் வந்து வேறொரு சுவிசேஷத்தை பிரசங்கித்தனர் (இரட்சிக்கப்பட கிறிஸ்து மட்டும் போதாது விருத்தசேதனமும் அவசியம் என்பதே) இதற்கு கலாத்தியா சபையார் இணங்கினதால் பவுல் இந்நிருபத்தை எழுதுகிறார் (கலா 1:6,7; 3:1; 5:1)

2. <u>பேதுரு அந்தியோகியாவுக்கு வருகிறார் (கலா 2:11-21).</u>

- புறஜாதியாருடனே சாப்பிடுகிறார் (வச. 12).
- யாக்கோபினிடத்திலிருந்து சில யூதர்கள் வந்தபோது புறஜாதியாரைவிட்டு விலகியிருக்கிறார் (வச. 12).
- இது சுவிசேஷத்தின் சத்தியத்திற்கு விரோதமானது (வச. 14) எப்படியெனில் கிறிஸ்துவுக்குள் யூதனென்றும் இல்லை, புறஜாதியென்றும் இல்லை.
- பேதுருவின் இந்த செயலால் மற்ற விசுவாசிகளும், பர்னபாவும் பேதுருவோடு சேர்ந்து இழுப்புண்டனர் (வச. 13).
- பவுல் இதனை கண்டிக்கிறான் (வச. 14).
- ஒருவன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே அல்ல கிறிஸ்துவினாலே நீதிமானாக்கப்படுகிறான் என்பதை பவுல் விவரிக்கிறார் மட்டுமல்ல நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே என்கிறார் (வச.15,21).
- இந்த சூழ்நிலையில்தான் பிரச்சனைகளுக்கு தீர்வு காண அந்தியோகியா சபையார் பவுல் மற்றும் பர்னபாவை எருசலேமுக்கு அனுப்புகிறார்கள் (15:2,3)

<u>எருசலேமில் ஆலோசனைக்கூட்டம் நடைபெறுகிறது.</u>

- <u>முக்கிய நபர்கள்:</u> யாக்கோபு, பேதுரு, பவுல் மற்றும் பர்னபா
- முதலாவது பவுலும், பர்னபாவும் நடந்தவற்றை விவரிக்கின்றனர் (15:4).
- பரிசேய சமயத்தாரான விசுவாசிகளான சிலர் விருத்தசேதனம்பண்ணுகிறதும், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள் (15:5).
    - ➢ விசுவாசிகளாக இருந்தும் பாரம்பரியத்தை கடைபிடிப்பவர்கள்.
- ஆலோசனை தர்க்கமானது (வச. 6,7)
- பேதுரு <u>கொர்நேலியு வீட்டில் நடந்த தனது அனுபவத்தை</u> சொல்கிறான் (வச. 7-11)
- தேவன் புறஜாதிகளுக்குள்ளே செய்த <u>அடையாளங்கள் அற்புதங்கள் யாவையும் பர்னபாவும் பவுலும் விவரித்துச் சொன்னார்கள்</u> (வச.12) காரணம் யூதர்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் எதிர்பார்ப்பார்கள்.
- யாக்கோபின் செய்தியும் முடிவுரையும்…(வச 13-21)
- பழைய ஏற்பாட்டிலிருந்து கோடிட்டு பேசுகிறார் (வச.16,17, ஆமோஸ் 9:11,12)
- புறஜாதியாருக்கு பாரத்தை கொடுக்காமல் சிலவற்றிலிருந்து விலகியிருக்க தீர்மானம் எடுக்கப்படுகிறது.
    - ➢ விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும்
    - ➢ வேசித்தனத்திற்கும்
    - ➢ நெருங்குண்டு செத்ததிற்கும்
    - ➢ இரத்தத்திற்கும்
- எருசலேம் சபையார் இந்த காரியங்களை கடிதமாக எழுதி பவுல் மற்றும் பர்னபா கையில் கொடுத்து அனுப்பினார்கள் கூடவே பர்சபா என்று மறுபேர்கொண்ட யூதாவையும் சீலாவையும் (சகோதரரில் விசேஷித்தவர்கள்) அந்தியோகியாவுக்கு அனுப்பி வைத்தனர்.
- அவர்கள் அந்தியோகியாவக்கு வந்து, சபையைக் கூடிவரச்செய்து, நிருபத்தை ஒப்புவித்தார்கள். அதை அவர்கள் வாசித்து, அதனாலுண்டாகிய ஆறுதலுக்காகச் சந்தோஷப்பட்டார்கள் (15:30,31).
- யூதா சீலா என்பவர்களும் தீர்க்கதரிசிகளாயிருந்தபடியினாலே அநேக வார்த்தைகளினால் சகோதரருக்குப் புத்திசொல்லி, அவர்களைத் திடப்படுத்தி; சிலகாலம் அங்கேயிருந்து, பின்பு சகோதரரால் சமாதானத்தோடே அப்போஸ்தலரிடத்திற்கு அனுப்பிவிடப்பட்டார்கள் (15:32,33).
- சீலாவுக்கு அங்கே தரித்திருக்கிறது நலமாய்க் கண்டது (வச.34).
- பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிலே சஞ்சரித்து, வேறே அநேகரோடுங்கூடக் கர்த்தருடைய வசனத்தை உபதேசித்துப் பிரசங்கித்துக்கொண்டிருந்தார்கள் (வச.35).

## <u>பவுலின் இரண்டாம் ஊழிய பிரயாணம்</u>

<u>பவுல் மற்றும் பர்னபாவின் பிரிவு (15:36-39)</u>

- வச.36 - பவுல் தனது விருப்பத்தை பர்னபாவுடன் பகிர்ந்துகொள்கிறான்.

- வச. 37 - பர்னபா தனது விருப்பத்தை தெரிவிக்கிறான்.
- வச. 38 - இருவருக்கும் ஏற்பட்ட கருத்துவேறுபாட்டின் நிமித்தம் கோபம் வருகிறது பின்பு பிரிகிறார்கள்.
  <u>இருவரின் பிரிவினைக்கு காரணம் யார்?</u>
- யோவான் அல்ல - அவர்களின் சுயவிருப்பமும், விட்டுக்கொடுக்காத சுபாவமுமே.
- அவரவர் பார்வைக்கு இருவருடைய கருத்தும் சரியானதாக இருக்கலாம்.
- அந்த நேரத்தில் பிரிந்தாலும் அவர்களுடைய உறவில் எந்த ஒரு பிளவும் ஏற்பட்டதில்லை எப்படியெனில் பவுல் பின்நாட்களில் பர்னபாவை குறித்து குறிப்பிடுகிறார் (1 கொரி 9:6; கொலோ 4:10)
- மாற்கு எனப்பட்ட யோவானை குறித்து சொல்லும்போது எனக்கு பிரயோஜனமானவன் என கூறுகிறார் (2 தீமோ 4:11)
- எப்படியோ முதிர்ந்த அப்போஸ்தலர்கள் இப்படி வாதம் பண்ணுவது சரியல்ல.
- இந்த சம்பவத்திற்கு பிறகு பர்னபா மற்றும் மாற்குவை குழுவாக வேதத்தில் பார்ப்பதில்லை ஆனால் பவுல் மற்றும் சீலா குழுவினர் சபையாரால் ஊழியத்திற்கு அனுப்பபட்டு, தேவனால் பயன்படுத்தப்பட்டனர் (15:40).
  <u>சீலா</u>
- ரோம பெயர் சில்வான் (1 தெச 1:1)
- எருசலேம் சபையில் எல்லாராலும் பெயர்பெற்றவன்
- எருசலேம் சபையில் எடுக்கப்பட்ட தீர்மான கடிதத்தை வாய்மொழியாக சபைகளுக்கு அறிவிப்பவன் (15:27)
- தீர்க்கதரிசியும், நல்ல பிரசங்கியுமாக இருந்தவன் (15:32)

இரண்டாம் ஊழிய பிரயாணத்தின் ஆரம்பத்தில் சீரியாவிலும் சிலிசியாவிலும் திரிந்து, சபைகளைத் திடப்படுத்தினார்கள் (15:41), ஆக சபை பவுலை ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுவதற்கு முன்னே இப்பகுதிகளில் ஊழியத்தை செய்திருக்கலாம்.

- அதன்பின்பு அவன் தெர்பைக்கும் லீஸ்தீராவுக்கும் போனான் (16:1). இப்பகுதிகள் பவுலின் முதல் ஊழிய பிரயாணத்தில் சந்திக்கப்பட்ட இடங்கள்.

1. <u>லீஸ்திரா</u>

- லீஸ்திராவில் தீமோத்தியுவை சந்திக்கிறார்கள் (16:1)
  <u>தீமோத்தேயு (16:1,2)</u>
- பவுலின் முதல் ஊழிய பிரயாணத்தில் சந்திக்கப்பட்டவனாக இருந்திருக்கலாம்.
- தாய் விசவாசமுள்ள யூதஸ்திரீ, அவன் தகப்பன் கிரேக்கன்.
- லீஸ்திராவிலும் இக்கோனியாவிலுமுள்ள சகோதரராலே நற்சாட்சி பெற்றவன்.
- பவுல் மாற்குவுக்கு பதிலாக தன்னுடைய ஊழியத்திற்கு உதவியாக தீமோத்தியுவை சேர்த்துக்கொள்ள விரும்பி, அவனுக்கு விருத்தசேதனம் செய்தான் (16:3).
  <u>ஏன் பவுல் தீமோத்தியுவுக்கு விருத்தசேதனம் செய்தான்?</u>
  1. தீமோத்தியுவை யூதர்கள் ஏற்றுக்கொள்ளும்படியாக காரணம் பவுல் தன்னுடைய ஊழியத்தில் எங்கு சென்றாலும் ஜெபஆலயங்களுக்கு செல்வது வழக்கம்.
  2. இது தீமோத்தியுவுக்கு கொடுக்கப்பட்ட அடையாளமாக இருக்கலாம் காரணம் அவன் யூதனா அல்லது கிரேக்கனா என்ற குழப்பம் இருந்ததின் நிமித்தமாக.

<u>ஆவியானவருடைய தடைகள்</u>

- அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, <u>ஆசியாவிலே</u> (வடக்கு) <u>வசனத்தைச் சொல்லாதபடிக்கு தடைபண்ணப்பட்டார்கள்</u> (16:6)
- மீசியா தேசமட்டும் வந்து, <u>பித்தினியாநாட்டுக்குப் போகப்</u> (தெற்கு) பிரயத்தனம் பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் <u>போகவொட்டாதிருந்தார்</u> (16:7)
- ஆசியா மற்றும் பித்தினியாவில் ஊழியம் செய்வது பவுலின் விருப்பமாக இருக்கலாம் ஆனால் ஆவியானவரின் விருப்பம் அல்ல. ஆவியானவர் அவர்களை துரோவாவுக்கு வழிநடத்தினார். ஆவியானவரின் சித்தத்திற்கு அர்ப்பணித்து ஒப்புக்கொடுத்தார்கள்.
- அவர்கள் மீசியா பக்கமாய்ப் போய், துரோவாவுக்கு வந்தார்கள். இங்கே வசனத்தை பிரசங்கித்ததாக சொல்லப்படவில்லை (16:8).
  - ➢ அவர்கள் வந்தது – கிழக்கேயிருந்து
  - ➢ ஆவியானவர் போகவிடாமல் தடுத்தது – வடக்கு அல்லது தெற்கு பகுதிகளில்
  - ➢ ஆவியானவர் அனுமதித்தது – மேற்கே

- தடைகள் ஆவியானவராலும் வரும், பிசாசினாலும் வரும். நாம் பகுத்து ஆராய வேண்டும்.
    - ஆவியானவரால் வரும் தடை நன்மைக்கே
    - சாத்தானால் வரும் தடை தீமைக்கே




2. <u>துரோவா</u>
    - மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று (16:9).
    - ஆவியானவரின் வழிநடத்துதலை உறுதிப்படுத்திக்கொள்ளுகிறான் (16:10)
    - துரோவாவில் கப்பல் ஏறி மக்கெதோனியாவின் தலைநகரும், ரோமர் குடியேறினதுமான பிலிப்பி பட்டணத்துக்கு வந்து, சிலநாள் தங்கியிருந்தோம் (16:11,12).
    - இங்கே நான்காவது நபர் (லூக்கா) அவர்களோடு இணைகிறதை காணலாம்.
    - துரோவா லூக்காவின் சொந்த ஊராக இருக்கலாம்.
    - லூக்கா ஒரு மருத்துவர் (கொலோ 4:14)
    - அப்போஸ்தல நடபடிகளை எழுதியவர் (லூக்கா 1:1, அப் 1:1).
3. <u>பிலிப்பி</u>
    - இதனுடைய முந்தைய பெயர் கிரினிடஸ்
    - கி.பி 356-ல் மாசிடோனியனாகிய பிலிப்பு கைப்பற்றி அதற்கு தனது பெயரை வைத்தான்.
    - ஜெபஆலயம் இல்லை காரணம் குறைவான யூதர்கள்.

<u>இங்கே மூன்று சம்பவங்கள் நடக்கின்றன.</u>

1. லீதியாள் இரட்சிக்கப்படுகிறாள் - ஜெபம்பண்ணுகிற இடத்தில்…
2. குறிசொல்லுகிற பெண்ணின் மனமாற்றம் - ஜெபம்பண்ணுகிற இடத்திற்கு போகும்போது…
3. சிறைச்சாலைக்காரனுடைய குடும்பத்தினரின் இரட்சிப்பு - ஜெபம்பண்ணுகிறபோது…

   பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் பட்டணத்தின் வெளியே ஆற்றின் அருகே ஜெபிக்கும்படியாக கூடிவந்தனர் (16:13). பெண்கள் மட்டுமே கூடி வந்தனர்.

- இது இஸ்ரவேலர் பாபிலோனில் இருக்கும்போது செய்த வழக்கமாக இருந்தது (சங் 137:1)
    1. <u>லீதியாள்</u> (16:14,15)
        - தியத்தீரா (ஆசியா) ஊரை சேர்ந்தவள் (அந்நிய தேசத்தை சேர்ந்தவள்)
        - இரத்தாம்பரம் விற்கிறவள் (வியாபாரம் செய்பவள்)
        - தேவனை வணங்குகிறவள் (பக்தி உள்ளவள்)
        - கர்த்தருக்காக தனது இருதயத்தை மட்டுமல்ல தனது வீட்டையும் திறந்தவள் (16:14,15,40)
        - குடும்பமாக ஞானஸ்நானம் பெற்றாள்.

- பவுல் ஆசியாவில் ஊழியம் செய்ய விரும்பியபோது ஆவியானவரால் தடைசெய்யப்பட்டான் இப்போது ஆசியாவை சேர்ந்த லீதியாள் முதன்முதலாக இரட்சிக்கப்படுகிறாள்.
- எங்கே கர்த்தருடைய சித்தம் உண்டோ அங்கே நமது விருப்பமும் நிறைவேறும் (நீதி 16:3)

2. <u>குறிசொல்லுகிற பெண்</u> (16:16-18)
   - ➢ அசுத்த ஆவியை உடையவள்
   - ➢ தொழில் - குறிசொல்லுதல்

- இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று பவுல் மற்றும் அவனோடிருந்தவர்களை பார்த்து கூறினாள்.
- அவள் சொன்னது சரியே ஆனால் துன்மார்க்கன் தேவனுடைய நியாயங்களை எடுத்துரைப்பது நியாயமல்ல (சங் 50:16).
- பவுலின் கோபம் அந்த பெண்ணின் மீது அல்ல, அவளிடம் இருந்த அசுத்தஆவியையே துரத்தினான் அந்த பெண்ணை அல்ல.
  - ➢ கிறிஸ்து பேதுருவை அதட்டவில்லை அவனுடைய செயலையே அதட்டினார்.
- பவுலின் கோபம் அவளின் மனந்திரும்புதலுக்கும், சரீர சுகத்திற்கும் ஏதுவாக அமைகிறது. ஆனால் அவளின் எஜமான்களுக்கு எட்டிக்காயாக கசக்கிறது.
- அவளுடைய எஜமான்கள் ஆதாயம் அற்றுபோனதை அறிந்து அவர்களை அடித்து, துன்பப்படுத்தி சிறைச்சாலையில் வைத்தனர்.

ஏன் லூக்கா மற்றும் தீமோத்தேயு சிறையில் அடைக்கப்படவில்லை?

அந்த சமயத்தில் அவர்கள் எங்கே?

- யூதர்களாகிய இந்த மனுஷர் (வச.20) – அவர்கள் யூதர்களுக்கு விரோதமாகவே செயல்பட்டனர்.
  - ➢ தீமோத்தேயு பாதி யூதன், லூக்கா புறஜாதி
- சிறைச்சாலையிலிருந்து புறப்பட்டு லீதியாளிடத்திற்குப்போய், சகோதரரைக் கண்டு (வச.40) – ஒருவேளை அவர்கள் லீதியாளின் வீட்டில் தங்கியிருக்கலாம்.

3. <u>சிறைச்சாலைக்காரன்</u> (16:23-40)

- வச.23 - அநேக அடிகள் அடித்தபின்பு... சிறையில் அடைக்கப்பட்டனர்.
- பவுல் 2 கொரி 11:25 ல் மூன்றுமுறை மிலாற்றினால் (பிரம்பு) அடிபட்டேன் என்கிறார் அதில் இது ஒரு முறை.
  - ➢ முதன்முதல் ஐரோப்பாவில் சுவிசேஷம் அறிவித்ததற்கான பரிசு – சிறை.
- வச.24 - <u>உட்காவலறை</u> என்பது ஒரு இருண்ட, காவல் மிகுந்த பகுதியாக இருக்கலாம்.
- வச.25 - நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள் - *அவர்களுடைய துன்பத்தின் நடுவிலும் துதிக்கிறார்கள்* (5:41).
- வச.26 - <u>இயற்கைக்கு மாறான விடுதலை</u>. இதே அனுபவத்தை அப்போஸ்தலர்கள் மற்றும் பேதுரு சிறையில் இருக்கும்போதும் காணமுடியும் (5:18-20 12:3-11).

ஏன் சிறைச்சாலைக்காரன் தன்னைதானே தற்கொலை செய்துகொள்ள முயற்ச்சித்தான்?

- சமுதாயத்தில் எல்லாருக்கும் முன்பாக அவமானத்தோடு மரிக்க விருப்பம் இல்லை. காரணம் கைதி யாராவது தப்பித்து விட்டால் இவனது தலை எல்லாருக்கும் முன்பாக துண்டிக்கப்படும்.
  - ➢ பவுல் சிறையில்தான் இருக்கிறான் என்பதை சிறைச்சாலைக்காரனால் அறியமுடியவில்லை. ஆனால் சிறைச்சாலைக்காரன் தற்கொலை செய்ய முயற்சிக்கிறான் என்பதை பவுல் அறிந்திருந்தான்.
- சிறைச்சாலைக்காரனின் கேள்வி - இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்? <u>எப்படி இந்த கேள்வியை அவன் கேட்டிருக்க முடியும்?</u>
  - ➢ குறிசொல்லுகிற பெண் சொன்னதை வைத்தோ அல்லது எப்படியோ இவர்களை குறித்து கேட்டிருக்கலாம் மட்டுமல்ல சிறைச்சாலையில் இவர்கள் பாடினது இவனுக்கு ஆச்சரியத்தை கொடுத்திருக்கலாம்.
- இரட்சிப்புக்கு விசுவாசம் மட்டும் போதும் எந்த ஒரு செயலும் செய்யவேண்டியதில்லை என்பதை பவுல் திட்டமாக கூறுகிறார் (வச.31).
- சிறைச்சாலைக்காரன் கைதிக்கு பணிவிடை செய்கிறான் (வச.33,34)
- சுவிசேஷத்தின் வெற்றிக்கு அடையாளம் - சந்தோஷம் (வச.34)

- குடும்பமாக இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர்.

<u>குடும்பமாக கர்த்தரை ஏற்றுக்கொண்ட சிலர்…</u>

- ➢ கொர்நெலியு ((10:24,44)
- ➢ லீதியாள் (16:15)
- ➢ சிறைச்சாலைக்காரன் (16:31)
- ➢ கிறிஸ்பு (18:8)
- ➢ அரிஸ்தொபூல் (ரோமர் 16:10)
- ➢ நர்கீசு (ரோமர் 16:11)
- ➢ ஸ்தேவான் (1 கொரி 1:16)

வச.35-40 - பவுல் மற்றும் சீலா விடுதலையாக்கப்படுதல்

- அதிகாரிகள் அவர்களை பட்டணத்தை விட்டு போகும்படி அவர்களோடே தயவாய் பேசி அனுப்பிவைத்தனர் (வச.39)
  - ➢ காரணம் அவர்கள் ரோம பிரஜை.
- அவர்கள் அம்பிபோலி மற்றும் அப்பொலோனியா பட்டணத்தையும் கடந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்தார்கள் (17:1).
- இங்கே "நாங்கள்" என்ற பதம் மாறி "அவர்கள்" என்ற பதத்தை லூக்கா பயன்படுத்துகிறார் ஒருவேளை லூக்கா பிலிப்பி பட்டணத்தில் விசுவாசிகளுக்கு உதவியாக இருந்திருக்கலாம் (16:40).
- பிலிப்பி சபையார் பவுலுக்கு பொருளாதார நிலையில் உதவியாக இருந்தனர் (பிலி 4:15,16)

4. <u>தெசலோனிக்கே</u>

- ➢ பிலிப்பியிலிருந்து தெசலோனிக்கே ஏறக்குறைய 150 கி.மீ.
- ➢ இதனுடைய முந்தைய பெயர் - தெர்மா
- ➢ தற்போதைய பெயர் - சலோனிக்கே
- ➢ கசாண்டர் (தெசலோனிக்கேயாவின் கணவர்) தெர்மாவை முறியடித்து அதற்கு தனது மனைவி பெயரை (தெசலோனிக்கே) வைத்தான்.
- ➢ இது ஒரு வியாபார ஸ்தலம்.
- ➢ ஒரு ஜெபஆலயம் இருந்தது (17:1)
  - ❖ அதில் யூதர் மட்டுமல்லாத கிரேக்கர்களும் இருந்தனர் (17:1,4)
- ➢ உலகத்தைக் கலக்குகிறவர்கள் - இது பவுலுக்கும் அவனுடைய கூட்டாளிகளுக்கும் தெசலோனிக்கேயரால் கொடுக்கப்பட்டது (17:6).
- ➢ வாயினால் சுவிசேஷம் அறிவித்ததுமாத்திரமல்ல, செயலில் நல்ல நடக்கையுள்ளவர்களாகவும் வாழ்ந்துகாட்டினர் (1 தெச 1:5)

- யாசோனுடைய வீட்டில் தங்கியிருந்தனர் (17:5)
  - ➢ பவுலின் உறவினராக இருக்கலாம் (ரோமர் 16:21)
- மூன்று வாரங்கள் ஜெபஆலயத்தில் சுவிசேஷத்தை அறிவித்தனர் (17:2).
- வச.3 - <u>வேதவாக்கியங்களில்</u> அவரை குறித்து முன்சொல்லப்பட்டுள்ள கிறிஸ்துவின் <u>பாடு, மரணம், உயிர்த்தெழுதல்</u> ஆகியவற்றை கொண்டு <u>இயேசுவே கிறிஸ்து</u> என்று பிரசங்கிக்கிறான்.
- கிறிஸ்துவும் தமது ஊழியத்தை எம்மாவு சீஷர்களிடம் பிரசங்கித்த விதம்…
  - ➢ வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார் (லூக்கா 24:26,27).
  - ➢ வேதவாக்கியங்களை நமக்கு விளங்கக்காட்டினபொழுது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா? (லூக்கா 24:32).
  - ❖ வச.4 – விசுவாசித்தவர்கள் பவுலையும், சீலாவையும் சேர்ந்துகொண்டனர்.
  - ❖ வச.5 – விசுவாசியாதவர்கள் பொல்லாதவர்களைச் சேர்த்துக்கொண்டனர்.
- வச.5,6 - யாசோனுடைய வீட்டில் அவர்களை காணாமல் யாசோனை பிடித்துகொண்டுபோய் ஜாமீன் வாங்கிகொண்டு விட்டுவிட்டார்கள்.
- இவர்கள் மறைத்துவைக்கப்பட்டிருக்கவேண்டும் ஏனெனில் சகோதரர்கள் இராத்திரியிலே பவுலையும் சீலாவையும் பெரோயாவுக்கு அனுப்பிவிட்டார்கள் (17:10).

5. <u>பெரோயா</u> (17:10-15)

- தெசலோனிக்கேயிலிருந்து 96 கி.மீ

- ஜெபஆலயம் இருந்தது (17:10)

பெரோயாவின் ஜனங்கள் (17:11)

- வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டனர்
- தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்தனர்
    - ➢ பலன் - நற்குணசாலிகளாயிருந்தார்கள்.
- தெசலோனிக்கேயிலிருந்து யூதர்கள் வந்து ஜனங்களைக் கிளப்பிவிட்டார்கள் (17:13).
- உடனே சகோதரர் பவுலை அத்தேனே பட்டணம்வரைக்கும் அழைத்துக்கொண்டுபோய்விட்டனர்.
- சீலாவும் தீமோத்தேயும் அதிசீக்கிரமாகத் தன்னிடத்திற்கு வரும்படி அவர்களுக்கு கட்டளை கொடுத்தான்.
- சீலாவும் தீமோத்தேயும் பெரோயோவில் தங்கியிருந்தார்கள்.
    - ➢ சபையின் வளர்ச்சிக்கு உதவியாக இருந்திருக்கலாம்.

6. <u>அத்தேனே</u>

- பெரோயாவிலிருந்து சமுத்திரமுகத்திற்கு 32 கி.மீ
- கடல்வழியாக 402 கி.மீ
    - ❖ தற்போது…லூக்கா – பிலிப்பியில்
    - ❖ சீலா, தீமோத்தேயு – பெரோயாவில்
    - ❖ பவுல் - அத்தேனேயில்
    - ➢ இந்த பிரிவை பவுலால் தாங்கமுடியாமல் சீலாவும் தீமோத்தேயும் அதிசீக்கிரமாகத் தன்னிடத்திற்கு வரும்படி அவர்களுக்கு கட்டளை கொடுத்தான் (17:15)
- கிரேக்க தத்துவத்திற்கு பெயர் பெற்ற பட்டணம்.
- சாக்ரடீஸ், அரிஸ்டார்டில், புளுட்டோ ஆகியோரை உலகிற்கு வழங்கிய பெருமை இப்பட்டணத்திற்கு உண்டு.
- விக்கிரகங்களால் நிறைந்த பட்டணம் (17:16)
- ரோம ஆதிக்கத்திலிருந்தாலும் தங்களின் கிரேக்க பாரம்பரியத்தை விட்டுகொடுக்காதிருந்தனர் (யூதர்களை போல).
- மக்களின் பொழுதுபோக்கு – புதிதான காரியத்தை பேசுவதும், கேட்பதுமே (17:21,19)
- பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு, பவுல் ஆவியில் வைராக்கியமடைந்து, ஜெபஆலயத்திலும் (யூதரோடு) சந்தைவெளியிலும் (எதிர்ப்பட்டவர்களோடு) தினந்தோறும் சம்பாஷணைபண்ணினான் (17:16,17).
- ஞானிகளில் சிலர் அவனுடனே வாக்குவாதம்பண்ணினார்கள்.
  எப்பிகூரியர் (அப் 17:18) நாளை நம்முடையதல்ல ஆகவே இருக்கும்வரை நன்றாக அனுபவிக்கவேண்டும்.
  ஸ்தோயிக்கர் கடவுள் என்பது ஒரு சக்தி. உலகத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது இந்த சக்தியே.
- இயற்கையை அழிக்காதே, இயற்கையோடு வாழு

ஆனால் பவுலின் பிரசங்கம் இவர்களின் தத்துவங்களுக்கு மாறாக இருந்தது காரணம் பவுல் கிறிஸ்துவின் உயிர்தெழுதலைக் குறித்து பேசினான் (17:18). அவர்களோ…

- ➢ அந்நிய தேவதைகள்
- ➢ புதிதான உபதேசம்
- ➢ நூதனமான காரியங்கள் என்றனர்.

<u>அத்தேனே பட்டணத்தில் பவுலின் பிரசங்கம்</u>

- அவர்களின் பக்தியை பாராட்டி பேசுகிறான் (வச.22)
- அவர்களுக்குறியவைகளிலிருந்தே அவர்களுக்கு தெரியாததை அறிவிக்கிறான் (வச.23)

<u>தெய்வம் யார் என்பதை விளக்குகிறான்</u>

- நம்மை படைத்தவர் (வச.24,26)
- நம் எல்லாருடைய தேவைகளையும் சந்திக்கிறவர் (வச.25)
- நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே (வச.27)
- நாம் அவருக்குள் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் (வச.28)
    - ➢ அவர் வசிப்பதற்கு நம்மால் ஒரு இடத்தை கொடுக்கமுடியாது (வச.24)
    - ➢ மனுஷர் கைகளால் பணிவிடைகொள்ளுகிறதுமில்லை (வச.25).
    - ➢ பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்காது (வச.29)

- ❖ மனிதனுக்கு தேவனுடைய கட்டளை – மனந்திரும்புங்கள்
  - ▪ யோவான்ஸ்நானகன், இயேசு கிறிஸ்து முதற்கொண்டு பிரசங்கிக்கப்படுகிறது.
- ❖ மனுஷனுக்கு தேனுடைய எச்சரிக்கை – நியாயத்தீர்ப்பு
  - ▪ கிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால் அதற்கான அதிகாரத்தை உடையவராய் இருக்கிறார்.

<u>சுவிசேஷத்திற்கு கிடைத்த பலன்</u>

- சிலர் இகழ்ந்தார்கள்
- சிலர் நீ சொல்லுகிறதை இன்னொருவேளை கேட்போம்
- சிலர் அவனைப் பற்றிக்கொண்டு, விசுவாசிகளானார்கள்.
  - ➢ மார்ஸ்மேடையின் நியாயாதிபதிகளில் ஒருவனாகிய தியொனீசியு
  - ➢ தாமரி என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ, இவர்களுடனே வேறு சிலர்
- இதற்கிடையில் பெரோயாவிலிருந்து சகோதரர்கள் (சீலா மற்றும் தீமோத்தி) வந்தபோது, தெசலோனிக்கியரை உபத்திரவத்தில் உற்சாகப்படுத்தும்படியாக தீமோத்தியுவை அனுப்பிவைத்தனர் (1 தெச 3:2).
- பின்பு சீலா பெரோயாவுக்கு அனுப்பபட்டிருக்கலாம் ஏனெனில் பவுல் கொரிந்துவில் இருக்கும்போது இவர்கள் இருவருமே மக்கதோனியாவிலிருந்து வந்து பவுலை சந்திக்கிறார்கள் (18:5).

7. <u>கொரிந்து</u>

- அத்தேனேயிலிருந்து 90 கி.மீ
- அகாயாவின் தலைநகரம்
- கி.பி 146-ல் ரோமர்களால் அழிக்கப்பட்ட கொரிந்து கி.பி 46-ல் ஜீலியஸ் சீஷரால் திரும்பவும் கட்டப்பட்டது.
- கொரிந்து இஸ்துமஸ்-க்கு (தண்ணீர் விளையாட்டு) புகழ்பெற்ற பட்டணம்.
- செல்வ செழிப்புள்ள வர்த்தக நகரம்
- ரோமாபுரிக்கு அடுத்த முக்கியநகரமாக கருதப்பட்டது
- விபச்சாரம், வேசித்தனம் போன்ற சகலவித பாவங்களும் அருவருப்புகளும் மலிந்துகிடந்தன.

- ➢ பவுல் ஆக்கில்லா & பிரிஸ்கில்லா வீட்டில் தங்கியிருந்தான் (18:2)
  - ❖ யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப் போகும்படி கிலவுதியுராயன் தனது ஆட்சிகாலத்தின் ஒன்பதாம் வருஷமாகிய கி.பி 50-ல் கட்டளையிட்டபடியினாலே, இத்தாலியாவிலிருந்து (ரோமாபுரி) வந்திருந்தார்கள்.
  - ❖ அவர்கள் கூடாரம்பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள் (18:3)
  - ❖ தானும் அந்தத்தொழில் செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி, வேலைசெய்துகொண்டு வந்தான்.
- ➢ வேலைசெய்துகொண்டே ஊழியத்தையும் செய்கிறான் (18:4).
- ➢ தனியாக வருகிறான். மட்டுமல்ல பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் தங்கி ஊழியம் செய்தான். (1 கொரி 2:1-5)
- ➢ ஆரம்பத்திலேயே கொரிந்தைவிட்டு புறப்பட நினைத்தவன் (18:6) தேவனுடைய தரிசனத்தினால் அங்கே தங்கி ஊழியம் செய்கிறான்.
- ➢ 1½ வருடம் கொரிந்துவில் தங்கி ஊழியம் செய்கிறான் (18:11). இதுவரை வேறு எங்கும் இத்தனை அதிகமான காலம் தங்கி ஊழியம் செய்ததில்லை.

<u>மக்கெதோனியாவிலிருந்து சீலாவும், தீமோத்தேயும் வந்தபோது…</u>

- ❖ அதிக வைராக்கியத்தோடு பவுல் ஆவியில் வைராக்கியங்கொண்டு, இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்தினான் (18:5).
  (இது பவுல் தமஸ்குவுக்கு போகும்வழியில் கற்றுக்கொண்ட பாடம்).
- ❖ மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர் என் குறைவை நிறைவாக்கினார்கள் (2 கொரி 11:9)
- ❖ தீமோத்தேயு நற்செய்தி சொன்னதினாலே ஆறுதலடைந்தோம் (1 தெச 3:6,7).
- ❖ மட்டுமல்ல லூக்கா பிலிப்பி பட்டணத்தில் இருந்ததால் அந்த சபையாரும் பவுலுக்கு உதவி அனுப்பியிருந்தனர் (பிலி 4:15).
- ➢ இந்த சமயத்தில்தான் பவுல் தெசலோனியருக்கு முதலாம் மற்றும் இரண்டாம் நிருபத்தை எழுதுகிறார்.
- ➢ கொரிந்தியர் வசனத்திற்கு கீழ்படியாததை கண்டு "உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின்மேல் இருக்கும்; நான் சுத்தமாயிருக்கிறேன்; இதுமுதல் புறஜாதியாரிடத்திற்குப்

போகிறேன்'' என்று சொல்லி புறப்படுகிறான் (எச்சரிப்பின் சத்தத்தை கேட்டும் மனந்திரும்பாத பட்சத்தில் இரத்தப்பழிக்கு சுவிசேஷகன் காரணம் அல்ல. எசே 33:4).

<u>கொரிந்தில் மனம்மாறிய சிலர்</u> (18:7,8)

- யுஸ்து
- ஜெபஆலயத்தலைவனாகிய கிறிஸ்பு
- கொரிந்தியரில் அநேகர்... விசுவாசிகளானார்கள்.

➢ யூதர்கள் ஒருமனப்பட்டு, பவுலுக்கு விரோதமாய் எழும்பி, அவனை நியாயாசனத்துக்கு முன்பாகக் கொண்டுபோகிறார்கள் (18:12)
<u>குற்றச்சாட்டு:</u> வேதப்பிரமாணத்துக்கு விரோதமாய் போதிக்கிறான் (18:3)

❖ கல்லியோன் இதை குறித்து விசாரிக்க மனதில்லாதிருந்தான்

➢ கிரேக்கரெல்லாரும் ஜெபஆலயத்தலைவனாகிய சொஸ்தேனேயைப் பிடித்து, நியாயாசனத்துக்கு முன்பாக அடித்தார்கள்.

❖ அதைக்குறித்துக் கல்லியோன் கவலைப்படவில்லை.
(பவுலை நியாயாசனத்துக்கு முன்பாகக் கொண்டுவருவதற்கு இந்த சொஸ்தேனே காரணமாய் இருந்திருக்கலாம்)

- கொரிந்துவின் ஊழியத்தை முடித்துவிட்டு பவுல் ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாவுடன் எருசலேமுக்கு போக பிரயாணப்படுகிறான் (18:18).
- போகும்வழியில் பவுல் பிராத்தனையின் நிமித்தமாக கெங்கிரேயாவில் தலைச்சவரம் பண்ணிக்கொள்கிறான்(18:18).
    - ➢ கெங்கிரேயா கொரிந்துவிலிருந்து 12 கி.மீ தூரமுள்ள துறைமுகப்பட்டணம்.
    - ➢ பவுலின் ஊழியத்தின் பயனாக இங்கு ஒரு சபை ஆபம்பிக்கப்பட்டுள்ளது. அந்த சபைக்கு ஊழியக்காரி சகோதரி பெபேயாள் (ரோமர் 16:1)
- அங்கிருந்து அவர்கள் எபேசுவுக்கு வருகிறார்கள்.

8. <u>எபேசு</u>

- அவர்கள் எபேசுவுக்கு வந்தபோது நல்ல ஆதரவு இருந்தாலும் அவன் அங்கே தங்கவில்லை. காரணம்...பண்டிகையின்போது எருசலேமில் இருக்கவேண்டும் என்பது பவுலின் விருப்பமாக இருந்தது.
- தேவனுக்குச் சித்தமானால் திரும்பி உங்களிடத்திற்கு வருவேனென்று சொல்லி, அவர்களிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, கப்பல் ஏறி, எபேசுவை விட்டுப் புறப்பட்டு, செசரியா பட்டணத்துக்கு வந்து, எருசலேமுக்குப் போய், சபையைச் சந்தித்து அந்தியோகியாவுக்குப் போனான். (பண்டிகை நாட்களை அவர்களோடு செலவுசெய்து, நடந்தவைகளை சொல்லியிருப்பான்).

இரண்டாம் ஊழிய பிரயாணம் முடிந்தது.

## <u>பவுலின் மூன்றாம் ஊழிய பிரயாணம்</u>




- ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் எபேசு சபையில் இருந்துவிடுகிறார்கள் (18:19).
- பவுல் அந்தியோகியாவில் சிலகாலம் இருந்தபோது கலாத்தியா நாட்டிலேயும், பிரிகியா நாட்டிலேயும் சுற்றித்திரிந்து, சீஷரெல்லாரையும் திடப்படுத்தினான் (18:23).

- அந்த சமயத்தில் அப்பொல்லோ எபேசுபட்டணத்துக்கு வந்தான் (18:24,25).
    - ஒரு யூதன்
    - அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவன்
    - சாதுரியவான்
    - வேதாகமங்களில் வல்லவன்
    - கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டவன்
    - யோவான் கொடுத்த ஸ்நானத்தைமாத்திரம் அறிந்தவன்
    - ஆவியில் அனலுள்ளவன்
    - கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக்கொண்டுவந்தவன்.
- ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக்காண்பித்தார்கள் (18:26).
- அதன்பின் அங்கிருந்து அவன் கொரிந்துக்கு செல்ல முற்படும்போது சீஷர்கள் அவனை ஏற்றுக்கொள்ளும்படி சகோதரர் அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள் (18:27).
- கொரிந்துவிலே இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங்களைக்கொண்டு திருஷ்டாந்தப்படுத்தினபடியால், கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தான் (18:28).
- பவுலின் மாதிரியை பின்பற்றி பிரசங்கிக்கிறான்.
- கொரிந்து சபையிலே அப்பொல்லோவுக்கென்று ஒரு கூட்டம் இருந்தது (1 கொரி 1:12), அந்த அளவுக்கு அவனது பிரசங்கம் அனைவரையும் கவரக்கூடியதாக இருந்தது.

1. <u>எபேசு</u>

தேவனுக்குச் சித்தமானால் திரும்பி உங்களிடத்திற்கு வருவேன் என்று கூறிசென்ற பவுல் இப்போது எபேசுவில்…

<u>எபேசு பட்டணம்</u>

- ரோமர்களின் ஆதிக்கத்தில் இருந்த ஆசியாவில் உள்ள முக்கியமான நகரமாகும்.
- இதனுடைய தற்போதைய பெயர் - துருக்கி
- இங்கு துறைமுகம் இருப்பதால் வணிகத்திற்கு பெயர்பெற்ற நகரமாக விளங்கியது.
- மத ரீதியாகவும் மிகவும் பெயர்பெற்ற நகரம்
    - ரோமர்களின் கடவுளான தியானாள் என்பவளுக்கு மிகப்பெரிய கோயில் ஒன்று இருந்தது.
    - கிரேக்கர்கள் அக்கடவுளை அர்த்தமீஸ் என்று அழைத்தனர். இவள் ஆசியாவின் செழிப்பிற்கான கடவுளாக கருதப்பட்டாள்.
    - இந்த ஆலயம் இரண்டுமுறை அழிக்கப்பட்டது. கி.மு 550ல் இரண்டாம் முறை கட்டப்பட்ட ஆலயமானது உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாக கருதப்பட்டது. இந்த கோயில் கி.மு 356ல் தீக்கிரையாக்கப்பட்டது.
    - மூன்றாம்முறை கட்டுவதற்கு 30 வருடங்கள் ஆனது.
    - மொத்த கோயிலின் அளவு 234x418 அடி.
    - இக்கோயில் 127 தூண்களால் ஆனது. தூண்களின் சுற்றளவு 6 அடி; 60 அடி உயரமுள்ளது.
    - கோயில் முழுவதும் பளிங்கு கற்கள் பதிக்கப்பட்டிருந்தது.
- ஜெபஆலயமும் இருந்தது (19:8).
- 50000 மக்கள் அமரக்கூடிய அளவில் உள்ள மிகப்பெரிய அரங்கம் ஒன்று உள்ளது.
- மிருகங்களோடு சண்டை போடும் போட்டியானது அவர்களிடம் காணப்பட்ட வழக்கமாயிருந்தது.

<u>எபேசுவில் பவுலின் ஊழியம்</u>

- பவுல் எபேசுவில் நான் மூன்றுவருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே தங்கி ஊழியம் செய்தான் (20:31)
- 19:1-7 – அப்பொல்லோவின் ஊழியத்தினிமித்தம் சந்திக்கப்பட்ட 12 சீஷர்களுக்கு கிறிஸ்துவைக்குறித்தும், ஞானஸ்நானத்தைக் குறித்தும் விளக்கி அறிவிக்கிறான்.
- இதில் முதல் மூன்று மாதங்கள் ஜெபஆலயத்தில் பிரவேசித்து, தைரியமாய்ப் பிரசங்கித்து யூதர்கள் மத்தியில் ஊழியம் செய்தான் (19:8)
- சில யூதர்கள் கடினப்பட்டு இந்த மார்க்கத்தை நிந்தித்தபோது, அவன் அவர்களை விட்டு விலகி, சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு, இரண்டு வருஷகாலம் திறன்னு

என்னும் ஒருவனுடைய வித்தியாசாலையிலே அநுதினமும் சம்பாஷித்துக்கொண்டுவந்தான் (19:9,10).

- இதினிமித்தம் ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள் (19:10).
- பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார் (19:11,12).
  - வியாதிகள் சுகமாயின
  - அசுத்த ஆவிகளும் துரத்தப்பட்டன.
- மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் மந்திர புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் தொகை 50000 வெள்ளிக்காசாக இருந்தது (19:19).
  - 19:13-16 - தேசாந்தரிகளாய்த்திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் (பிரதான ஆசாரினாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனுடைய குமாரர் ஏழுபேர்) சிலர் பொல்லாத ஆவிகளை துரத்த முயன்றும் தோல்வியடைந்தனர்.
- ஊழியத்தின் வளர்ச்சி ஒருபுறம் இருக்க அதேசமயம் பவுல் அநேக பிரச்சனைகளையும் சந்திக்க நேர்ந்தது (பெந்தெகொஸ்தே பண்டிகை வரைக்கும் எபேசு பட்டணத்தில் இருப்பேன் என கொரிந்தியருக்கு எழுதுகிறார் ஏனெனில் திறந்தவாசல் இருப்பதால் அதேசமயம் விரோதஞ்செய்கிறவர்களும் இருந்தனர் (1 கொரி 16:8,9).
  - துஷ்டமிருகங்களுடனே போராடினான் (1 கொரி 15:32)
  - பவுலுக்கு விரோதமாய் செயல்பட்ட யூதர்கள் (19:9; 20:19)
  - தெமேத்திரியு என்னும் பேர்கொண்ட ஒரு தட்டான் பவுலுக்கு விரோதமாய் எழும்புகிறான் (19:24-)
- எபேசுவுவிலே ஆக்கில்லா&பிரிஸ்கில்லா பவுலுக்கு நேரிட்ட பிரச்சனைகளில் தங்கள் பிராணனையும் எண்ணாமல் கழுத்தைக் கொடுத்திருக்கலாம் (ரோமர் 16:3,4)
- பவுல் எபேசுவிலிருந்தபோது...
  - கொரிந்துவில் ஊழியம்செய்துவந்த அப்பொல்லோவும் (1 கொரி 16:12),
  - குலோவேயாளின் வீட்டாரும் (1 கொரி 1:11),
  - பின்னாளில் இரட்சிக்கப்பட்ட கொரிந்து பட்டணத்து ஜெபஆலயதலைவனான சொஸ்தனேயும் (1 கொரி 1:1; அப் 18:17)

  எபேசுவுக்கு வந்து கொரிந்தியரை குறித்து பவுலுக்கு அறிவித்திருக்கவேண்டும். அதனால் கவலையடைந்த பவுல் கொரிந்தியருக்கு முதல் நிருபத்தை எழுதுகிறார்.
- கேள்விப்பட்ட காரியங்களுக்காக பதில் எழுதியதுமட்டுமல்லாமல் அப்பொல்லோவை கொரிந்துவுக்கு செல்லுமாறு கேட்டுக்கொள்ளும்போது மறுத்துவிடுகிறான் (1 கொரி 16:12).
- இந்த கடிதத்தை தீமோத்தேயு மற்றும் எரஸ்துவின் கையிலே கொடுத்தனுப்பினான் (19:22; 1 கொரி 4:17). போகும் வழியில் மக்கெதோனியாவிலுள்ள சபைகளையும் சந்திக்கவேண்டும் என்ற பவுலின் விருப்பத்தால் அவர்கள் இருவரும் மக்கெதோனியா வழியாக கொரிந்துவுக்கு வருகிறார்கள்.
- எரஸ்து கொரிந்துவிலே இருந்துவிட்டான் (2 தீமோ 4:20)
- 1 கொரி 5:9 – முதல் நிருபத்திற்கு முன்பு இன்னொரு கடிதத்தை பவுல் எழுதியிருக்கலாம்.
- தீமோத்தேயு மற்றும் எரஸ்துவை அனுப்பிய பின்பு சிலநாட்களுக்கு பின்பு பவுல் தீத்துவையும் அவனோடுகூட மற்றொரு சகோதரனையும் அனுப்புகிறார் (2 கொரி 12:18)

  <u>தீத்து கொரிந்துவுக்கு சென்றதின் முக்கிய காரணம்</u>
- கொரிந்தியரிடம் தர்ம ஊழியத்தை ஆரம்பிக்க விருப்பப்பட்டான் (2 கொரி 8:6,16). ஆகவே பவுல் தீத்துவை கொரிந்துவுக்கு போகசொன்னபோது தன் மனவிருப்பத்தின்படியே சென்றான் (2 கொரி 8:17).

  <u>உடன் சென்ற மற்றொரு சகோதரன் பெயர் குறிப்பிடவில்லை ஆனால்...</u>
- சுவிசேஷ ஊழியத்தில் எல்லாச் சபைகளிலும் புகழ்ச்சிபெற்றவன் (2 கொரி 8:18)
- பவுலின் ஊழிய வழித்துணையாயிருக்கவும், தர்ம பணத்தைக் கொண்டுபோகவும் சபைகளால் ஏற்படுத்தப்பட்டவன் (2 கொரி 8:19)

2. <u>துரோவா</u>

- பவுல் எபேசுவில் ஊழியத்தை முடித்துவிட்டு மக்கெதோனியாவுக்கு புறப்பட்டான்.
- போகும்வழியில் துரோவாவிற்கு வருகிறார். அங்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி திறந்த வாசல் இருந்தது (2 கொரி 2:12)
- ஆனால் தீத்து இல்லாததால் பவுலின் ஆவிக்கு அமைதலில்லாதிருந்தது (2 கொரி 2:13).

- ஒருவேளை பவுல் எழுதிய கடுமையான கடிதம் கொரிந்தியரை எந்த அளவுக்கு பாதித்திருக்கும் என்பதை தீத்துவின் மூலம் பவுல் அறிய விருப்பம் கொண்டிருக்கலாம் ஆகவே தீத்துவை கொரிந்துவுக்கு போய்விட்டு உடனே வரச்சொல்லியிருக்கலாம்.

3. <u>மக்கெதோனியா</u>

- தீத்துவுக்காக காத்திருக்காமல் மக்கெதோனியாவுக்கு வருகிறான் (2 கொரி 2:13)
- இந்த சமயத்தில்தான் பவுல் இல்லிரிக்கம் வரைக்கும் சுவிசேஷம் அறிவித்திருக்கவேண்டும் (ரோமர் 15:19)
- பவுல் 2 கொரிந்தியர் நிருபத்தை மக்கெதோனியாவிலிருந்து எழுதியிருக்கலாம். காரணம் தீத்துவை பவுல் மக்கெதோனியாவில் சந்திக்கிறார் (2 கொரி 7:5,6).
- மட்டுமல்ல தீத்துவின் வருகை பவுலுக்கு ஆறுதலை அளித்தது காரணம் கொரிந்தியரை குறித்து நற்செய்தி கொண்டுவந்திருந்தான் காரணம் பவுல் எழுதின கடுமையான நிருபம் (2 கொரி 2:3-4; 7:7-12) கொரிந்தியரிடம் மாற்றத்தைக் கொண்டுவந்தது.
- கொரிந்தியரை உற்சாகப்படுத்துவதற்காக மக்கெதோனியரின் தர்ம காரியத்தை பவுல் குறிப்பிடுகிறார் (1 கொரி 8:1-5; ரோமர் 15:25-28)
  - ➢ உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில் கொடுத்தார்கள்
  - ➢ கொடிய தரித்திரத்திலே கொடுத்தார்கள்
  - ➢ பரிபூரண சந்தோஷத்திலே கொடுத்தார்கள்
  - ➢ மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்.
  - ➢ திராணிக்கு மிஞ்சி கொடுத்தார்கள்
  - ➢ கொடுப்பதற்கு யாரும் அவர்களை வற்புறுத்தவில்லை
  - ➢ பெற்றுக்கொள்ளும்படியாக எங்களை வற்புறுத்தினார்கள்
- தர்ம பணத்தை ஆயத்தபடுத்துபடியாக ஆலோசனையை தருகிறார் (2 கொரி 9:1-5)

<u>பவுல் கொரிந்தியருக்கு நான்கு கடிதங்களை எழுதியிருக்கிறார்</u>

- முதல் நிருபத்திற்கு முன்பு எழுதப்பட்ட கடிதம் (1 கொரி 5:9)
- முதல் நிருபம்
- கடுமையான நிருபம் (2 கொரி 2:3-4)
- இரண்டாம் நிருபம்

4. <u>கிரேக்க தேசம்</u>

- மூன்றுமாதம் தங்கி ஊழியம் செய்கிறார் (அப் 20:2,3)
- இந்த சமயத்தில்தான் ரோமாபுரியாருக்கு நிருபத்தை எழுதுகிறார் (ரோமர் 15:24-31; அப் 19:21; 20:1-3).
  - ➢ மூன்றாம் மிஷினரி பிரயாணத்தின் இறுதியில்... எருசலேமில் உள்ள விசுவாசிகளுக்கு உதவியாக தர்மபணத்தை எடுத்துச்செல்வதற்கு முன்பாக எழுதப்பட்டது.
- பின்பு, கப்பல் ஏறி, சீரியாவுக்குப்போக மனதாயிருந்தபோது, யூதர்கள் அவனுக்குத் தீமைசெய்யும்படி இரகசியமான யோசனைபண்ணினார்கள் (20:3).
- ஆகவே மக்கெதொனியா தேசத்தின் வழியாய்த் திரும்பிப்போகத் தீர்மானம்பண்ணினான் காரணம் எருசலேமில் உள்ளவர்களுக்காக சேகரித்த பணம்வேறு அவனிடம் இருந்தது (20:3).
- அவனுக்கு வழித்துணையாக சிலர் அவனோடு சென்றனர்.

  <u>மக்கெதொனியாவை சேர்ந்த மூன்றுபேர்</u>
  - ➢ பெரோயா ஊரானாகிய சோபத்தர் - ரோமர் 16:21ல் சொல்லப்பட்ட சொசிபத்தர் இருவரும் ஒருவராக இருக்கலாம்.
  - ➢ தெசலோனிக்கேயாவை சேர்ந்த அரிஸ்தர்க்கும் (19:29), செக்குந்தும் (இவனது பேர் வேறு எங்கும் சொல்லப்படவில்லை)

  <u>கலாத்தியாவை சேர்ந்த இரண்டுபேர்</u>
  - ➢ தெர்பையானாகிய காயு (19:29ல் சொல்லப்பட்ட காயு மக்கெதொனியாவை சேர்ந்தவன் ஆக இருவரும் ஒன்றல்ல).
  - ➢ லீஸ்தீராவை சேர்ந்த தீமோத்தேயு (16:1)
    - ❖ எபேசுவிலிருந்து பவுல் புறப்படுவதற்கு முன்பே மக்கெதொனியாவிற்கு பவுலால் அனுப்பப்பட்டவன் (19:22)
    - ❖ தீமோத்தேயு பிற சபைகளுக்கும் பவுலால் அனுப்பப்பட்டு ஊழியம் செய்துள்ளான்.

- ➢ கொரிந்து (1 கொரி 16:10,11)
- ➢ பிலிப்பி (2:19-23)

<u>ஆசியாவை சேர்ந்த இரண்டுபேர்</u>

- ➢ தீகிக்கு
  - ❖ பவுலுக்கும், ஆசியா நாட்டு சபைகளுக்கும் அதிக உதவியாக இருந்தவன் (எபே 6:21,22; கொலோ 4:7-9; 2 தீமோ 4:12)
- ➢ எபேசுவை சேர்ந்த துரோப்பீம் (21:29), இவன் ஒரு புறஜாதி.
- ➢ பவுல் மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டுவந்தவன் இவனே (2 தீமோ 4:20)

- இந்த ஏழுபேரும் பவுலுக்கு முன்னதாக போய் துரோவாவிலே காத்திருந்தனர் (20:5)
- இந்த ஏழுபேரும் பிலிப்பி பட்டணத்திற்கு வந்து லூக்காவிடம் விவரத்தை சொல்லிவிட்டு நெயோபோலிக்கு வந்து கப்பல் ஏறி துரோவாவிற்கு சென்றிருக்கவேண்டும் (16:11).
- எங்களுக்காக... என்று லூக்கா தன்னையும் சேர்த்து சொல்லுகிறார். அப்படியென்றால் பிலிப்பி பட்டணத்திலிருந்த லூக்காவும் இப்போது பவுலோடு இணைகிறார் (20:5).

5. <u>பிலிப்பி (20:6)</u>

- பவுல் புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களை (ஏழு நாட்கள்) பிலிப்பி பட்டணத்தில் செலவிடுகிறார்.
- பின்பு அங்கிருந்து கப்பல் ஏறி துரோவாவிற்கு வருகிறார்கள். இந்த பிரயாணத்திற்கு ஐந்து நாட்கள் ஆகிறது.

6. <u>துரோவா (20:7-12)</u>

- ஏழு நாள் தங்கியிருக்கிறார்கள்.
- வாரத்தின் முதல்நாளிலே, அவர்கள் கூடியிருந்த மேல்வீட்டிலே அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்.
- அப்பொழுது ஐத்திகு என்னும் பேர்கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து, பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரைமயக்கத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான்.
- உடனே பவுல் இறங்கிப்போய், அவன்மேல் விழுந்து, அவனை அணைத்துக் கொண்டு: கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான்.
- அந்த வாலிபனை அவர்கள் உயிருள்ளவனாகக் கூட்டிக்கொண்டுவந்து, மிகுந்த ஆறுதலடைந்தார்கள்.
- பின்பு ஏறிப்போய், அப்பம் பிட்டுப்புசித்து, விடியற்காலமளவும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து, பின்பு புறப்பட்டான்.
- பவுலுக்கு எப்படியாகிலும் பெந்தேகோஸ்தே பண்டிகையின்போது எருசலேமில் இருக்கவேண்டும் என்பதே அவனது ஆசை (20:16). ஆனால் இப்போது மீதியிருப்பது 31 நாட்களே.
  - ➢ புளிப்பில்லாத அப்பப்பண்டிகை - ஏழு நாட்கள்
  - ➢ பிலிப்பிலிருந்து துரோவா பிரயாணம் - ஐந்து நாட்கள்
  - ➢ துரோவில் - ஏழு நாட்கள்
    - ▪ 7+5+7=19; 50-19=31

<u>துரோவாவிலிருந்து மிலேத்துவை நோக்கி (20:13-16)</u>

- ➢ பவுல் ஆசோபட்டணம் வரைக்கும் கரைவழியாய்ப் போக மனதாயிருந்தான். நாங்கள் கப்பல் ஏறி, அந்தப்பட்டணத்தில் அவனை ஏற்றிக்கொள்ளும்படி முன்னாக அங்கே போயிருந்தோம்.
- ➢ நாங்கள் ஆசோபட்டணத்திலே் பவுலை ஏற்றிக்கொண்டு, மித்திலேனே பட்டணத்துக்கு வந்தோம்.
- ➢ மறுநாளிலே கீயுதீவுக்கு எதிராக வந்து
- ➢ மறுநாளிலே சாமுதீவு பிடித்து, துரோகில்லியோன் ஊர்த்துறையிலே தங்கி

- ➢ மறுநாள் மிலேத்துபட்டணத்துக்கு வந்தோம்.

7. <u>மிலேத்து</u>

- ஆசியாவிலே காலம்போக்காமல் சீக்கிரமாக பெந்தெகொஸ்தே பண்டிகைநாளிலே எருசலேமிலிருக்கவேண்டுமென நினைத்ததால்... மிலேத்துவிலிருந்து அவன் எபேசுவுக்கு ஆள் அனுப்பி, சபையின் மூப்பரை வரவழைத்தான் (20:16)
- எபேசுவில் ஊழியம் செய்துகொண்டிருந்தபோதுதான் கொரிந்துவுக்கு வந்துவிட்டார். ஆகவே இப்போது மூப்பர்களை அழைத்து அவர்களுக்கு ஆலோசனை கொடுக்கிறார்.
  மூப்பர்களுக்கான ஆலோசனை
  ➢ உங்களைக்குறித்தும், மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள் (20:28).
  பவுல் தலைமைத்துவத்திற்கு (மூப்பர்களுக்கு) கொடுத்த முக்கியத்துவம்.
  - ➢ அந்தியோகியா சபையார் தர்மபணம் சேகரித்து, பர்னபா சவுல் என்பவர்களுடையகையில் கொடுத்து, மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள் (11:30).
  - ➢ பவுல் முதல் ஊழிய பிரயாணத்தின்போது சபைகளில் மூப்பர்களை ஏற்படுத்தி வைத்ததை 14:23ல் காணலாம்.
  - ➢ பிலிப்பி சபைக்கு கடிதம் எழுதும்போது மூப்பர்களை (கண்காணிகளுக்கும்) குறிப்பிடுவதை காணவாம் (1:1)
  - ➢ எபேசுவுக்கு ஆள் அனுப்பி, சபையின் மூப்பரை வரவழைத்தான் (20:17,28)
  - ➢ தீமோத்தேயு மற்றும் தீத்துவுக்கு கடிதம் எழுதும்போது மூப்பர்களுக்கு இருக்கவேண்டிய தகுதிகளை குறித்து எழுதுகிறார் (1 தீமோ 3; தீத்து 1)

  எபேசுவில் பவுலின் ஊழியம்
  - ➢ மூன்றுவருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் புத்திசொன்னான் (20:31).
  - ➢ வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், சோதனைகளோடும் நான் கர்த்தரைச் சேவித்தேன் (20:19).
  - ➢ ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து வந்தேன் (20:20).
  - ➢ எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேன் (20:27)
  - ➢ ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை (20:33).
  - ➢ எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலைசெய்தது (20:34).
  - ➢ கொடுப்பதில் மாதிரியாக இருந்தான் (20:35)

  பவுலின் பிரிவு (20:22-25; 36-38)
  - ➢ ஆவியிலே கட்டுண்டவராய் எருசலேமில் தனக்கு என்ன நடக்கும் என்பதை அறியாதவராய் போகிறார்.
  - ➢ ஆனால் ஒன்றை அறிந்திருந்தார் பட்டணந்தோறும் கட்டுகளும் உபத்திரவங்களும் உண்டு என்பதை.
  - ➢ ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படாதவறாக எருசலேம் செல்கிறார்.
  - ➢ இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்கள்.
  - ❖ இவைகளைச் சொன்னபின்பு, அவர்களெல்லாரோடுங்கூட ஜெபம்பண்ணினான்.
  - ❖ அவர்களெல்லாரும் மிகவும் அழுது, அவன் சொன்ன வார்த்தையைக்குறித்து அதிகமாய்த் துக்கப்பட்டு,
  - ❖ பவுலின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்து, கப்பல்வரைக்கும் அவனுடனே கூடப்போய் வழியனுப்பினார்கள்.

<u>மிலேத்துவிலிருந்து தீருவை நோக்கி...(21:1-3)</u>

- ➢ அவர்கள் மிலேத்துவை விட்டுப் பிரிந்து, கோஸ்தீவையும்,
- ➢ மறுநாளில் ரோதுதீவையும் சேர்ந்து,
- ➢ அவ்விடம் விட்டுப் பத்தாரா பட்டணத்துக்கு வந்து, பெனிக்கே தேசத்திற்குப்போகிற ஒரு கப்பலைக் கண்டு, அதிலே ஏறிப்போனோம்.

- ➢ சீப்புருதீவைக் கண்டு, அதை இடதுபுறமாக விட்டு,
- ➢ சீரியாநாட்டிற்கு ஓடி, தீருபட்டணத்துறையில் இறங்கினோம்;

8. <u>தீரு (21:3-6)</u>

- தீருவில் கப்பலின் சரக்குகளை இறக்கவேண்டியதாயிருந்ததால் பவுல் மற்றும் அவனோடு இருந்தவர்கள் அவ்விடத்திலுள்ள சீஷரைக் கண்டுபிடித்து, அங்கே ஏழுநாள் தங்கினார்கள்.
- அவர்கள் பவுலை நோக்கி: நீர் எருசலேமுக்குப் போகவேண்டாம் என்று ஆவியின் ஏவுதலினாலே சொன்னார்கள்.
- ஏழு நாட்களுக்கு பின்பு, புறப்பட்டுப்போகையில், அவர்களெல்லாரும் மனைவிகளோடும் பிள்ளைகளோடுங்கூடப் பட்டணத்துக்குப் புறம்பே எங்களை வழிவிட்டனுப்பும்படி வந்தார்கள். அப்பொழுது கடற்கரையிலே நாங்கள் முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணினோம்.
- ஒருவரிடத்திலொருவர் உத்தரவு பெற்றுக்கொண்டபின்பு, நாங்கள் கப்பல் ஏறினோம்; அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப்போனார்கள்.

9. <u>பித்தொலோமாய் (21:7)</u>

- தீருபட்டணத்தை விட்டுப் பித்தொலோமாய் பட்டணத்துக்கு வந்து, சகோதரரை வினவி, அவர்களிடத்தில் ஒருநாள் தங்கினோம்.

10. <u>செசரியா (21:8-16)</u>

- மறுநாளிலே பவுலைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் புறப்பட்டுச் செசரியாபட்டணத்துக்கு வந்து, ஏழுபேரில் ஒருவனாகிய பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய வீட்டிலே பிரவேசித்து, அவனிடத்தில் தங்கினோம்.
- பிலிப்பு கந்தாகே மந்திரிக்கு சுவிசேஷம் அறிவித்துவிட்டு அவ்விடத்திலிருந்து பிரயாணம்பண்ணி, செசரியாவுக்கு வருகிறவரையில் சகல பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டுவந்தான் (8:40).
- பின்பு செசரியாவிலே ஏறக்குறைய 25 வருடங்களாக ஊழியத்தை செய்துவந்திருக்கலாம்.
- தீர்கதரிசனஞ்சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாகிய நாலு குமாரத்திகள் அவனுக்கு இருந்தார்கள்.
    - ➢ கர்த்தருக்காக சேவை செய்யும்படி விசேஷமாக பிரித்தெடுக்கப்பட்டவர்கள்.
- நாங்கள் <u>அநேகநாள் அங்கே தங்கியிருக்கையில்</u> (நாட்கள் குறிப்பிடவில்லை), அகபு என்னும் பேர்கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான். உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று சொன்னவன் இவனே (11:28)
- அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு: இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான்.
- இவைகளை நாங்கள் கேட்டபொழுது, எருசலேமுக்குப் போகவேண்டாமென்று, நாங்களும் அவ்விடத்தாரும் அவனை வேண்டிக்கொண்டோம்.
- அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்துபோகப்பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்குமாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்.
- அவன் சம்மதியாதபடியினாலே, கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவதென்று அமர்ந்திருந்தோம்.
- அந்த நாட்களுக்குப்பின்பு நாங்கள் பிரயாண சாமன்களை ஆயத்தம்பண்ணிக்கொண்டு எருசலேமுக்குப் போனோம்.
- செசரியாபட்டணத்திலுள்ள சீஷரில் சிலர் எங்களுடனேகூட வந்ததுமன்றி, சீப்புருதீவானாகிய மினாசோன் என்னும் ஒரு பழைய சீஷனிடத்திலே நாங்கள் தங்கும்படியாக அவனையும் தங்களோடே கூட்டிக்கொண்டு வந்தார்கள்.

11. <u>எருசலேம் (</u>(21:17-20)

- நாங்கள் எருசலேமுக்கு வந்தபோது, சகோதரர் எங்களைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள்.

- பவுல் சகோதரர் எல்லாரையும் அப்போஸ்தலனாகிய யாக்கோபினிடத்தில் அழைத்துக்கொண்டுபோகிறான்.
  - ➢ யாக்கோபு அப்போஸ்தலனாக கருதப்பட்டார் ஆனால் 12 பேரில் ஒருவர் அல்ல
  - ➢ இயேசுகிறிஸ்துவின் சகோதரன் (கலா 1:19)
  - ➢ யாக்கோபு நிருபத்தின் ஆசிரியர்
  - ➢ எருசலேம் சபையின் மூப்பர் (கலா 2:9)
- மூப்பரெல்லாரும் அங்கே கூடி வந்தார்கள். அவர்களை அவன் வினவி, தன் ஊழியத்தினாலே தேவன் புறஜாதிகளித்தில் செய்தவைகளை ஒவ்வொன்றாய் விவரித்துச்சொன்னான். அதை அவர்கள் கேட்டுக் கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.

<u>யூதர்களின் குணாதிசயம் (21:20)</u>

- யூதர்களுக்குள் அநேகம்பேர் விசுவாசிகளாயிருந்தாலும், அவர்களெல்லாரும் நியாயப்பிரமாணத்துக்காக வைராக்கியமுள்ளவர்களாயிருந்தார்கள்.

<u>பவுலை குறித்த அவர்களின் சிந்தை (21:21)</u>

- யூதரெல்லாரும் தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணவேண்டாம், முறைமைகளின்படி நடக்கவும் வேண்டாம் என்று சொல்லி, மோசேயை விட்டுப் பிரிந்துபோகும்படி போதிக்கிறான்.

<u>அப்போஸ்தலர்கள் பவுலுக்கு கொடுத்த ஆலோசனை (21:23-)</u>

- பிரார்த்தனை பண்ணிக்கொண்டவர்களாகிய நாலுபேர் எங்களிடத்தில் இருக்கிறார்கள். அவர்களை நீர் சேர்த்துக்கொண்டு, அவர்களுடனேகூடச் சுத்திகரிப்பு செய்துகெண்டு, அவர்கள் தலைச்சவரம்பண்ணிக் கொள்வதற்குச் செல்லுமானதைச் செலவுசெய்யும்.
- இது எப்படிப்பட்ட பிரார்த்தனை என்பது சொல்லப்படவில்லை. ஆனால் நான்கு மனிதர்களின் பிரார்த்தனையில் சில மதிப்புள்ள பலிகள் செலுத்தவேண்டியதாயிருப்பதால் இது நசரேய விரதமாயிருக்கவேண்டும், ஏனெனில் அவன் விரதம் கடைபிடிக்கும் நாளில் மரணம் நேரிட்டாலோ அல்லது விரதம் முடியும்போதோ அவன் கடைபிடிக்கவேண்டிய காரியங்கள் இதோடு ஒத்துபோககூடியதாக இருக்கிறது (எண் 6:9-17).
- இவர்கள் அதற்கான செலவுகளை செலுத்தமுடியாத ஏழைகளாய் இருந்திருக்கலாம்.
- பவுல், அப்போஸ்தலர்களின் வார்த்தையின்படி செய்தான் (21:26).

<u>பவுல் செய்தது தவறுதான் ஆனாலும் எதற்காக இதை செய்தார்?</u>

a. பவுலுக்கு ஒரு பிரார்த்தனை உண்டாயிருந்தபடியினால் கெங்கிரேயா பட்டணத்தில் தலைச்சவரம் பண்ணிக்கொண்டான் (18:18)
b. தீமோத்தியுவை பவுல் தன்னுடனே கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்று விரும்பி, அவனுடைய தகப்பன் கிரேக்கன் என்று யூதர்களெல்லாரும் அறிந்திருந்தபடியால், அவர்கள் நிமித்தம் அவனுக்கு விருத்தசேதனம்பண்ணினான் (16:3).
   - ➢ பதினாலு வருஷம் சென்றபின்பு (தர்மபணத்தை கொண்டுசெல்லும்போது), நான் தீத்துவைக் கூட்டிக்கொண்டு பர்னபாவுடனேகூட மறுபடியும் எருசலேமுக்குப் போனேன். ஆனாலும் என்னுடனேகூட இருந்த தீத்து கிரேக்கனாயிருந்தும் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளும்படிக்குக் கட்டாயம்பண்ணப்படவில்லை (கலா 2:1-3).
c. ஆனால் அந்த சமயத்தில் பவுல் தேவாலயத்திலே சுத்திகரித்துக்கொண்டவனாயிருந்திருக்கிறான் என்பதை பெலிக்ஸிடம் சொல்கிறதை காணலாம் (24:17,18)

<u>பவுலின் பார்வையில்...</u>

  - ➢ பவுல் யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப்போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப்போலவுமானேன் என்கிறார் (1 கொரி 9:20).
  - ➢ இந்நாள்வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்துவந்தேன் (23:1)
- பெந்தேகோஸ்தே பண்டிகை நாள் என்பதால் பல ஊர்களிலிருந்து யூதர்கள் அநேகர் வந்திருப்பார்கள் (2:9-11). பவுல் அப்போஸ்தவர்கள் சொன்ன இந்த காரியத்தை செய்தால்

பவுலும் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளுகிறவன் என்பதை யூதர்கள் அறிந்துகொள்வார்கள் என்பது அப்போஸ்தலர்களின் எண்ணம் (21:24).

- ஏற்கனவே பல இடங்களிலுள்ள யூதர்கள் அவனை கொலைசெய்ய திட்டம்பண்ணியிருந்தவர்களுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.
- அந்த ஏழுநாட்களும் நிறைவேறிவருகையில், ஆசியாநாட்டிலிருந்து வந்த யூதர்கள் அவனைத் தேவாலயத்திலே கண்டு, ஜனங்களெல்லாரையும் எடுத்துவிட்டு, அவன்மேல் கைபோட்டனர் (21:27).
- மட்டுமல்லாது இஸ்ரவேலரே, நம்முடைய ஜனத்திற்கும் வேதப்பிரமாணத்திற்கும் இந்த ஸ்தலத்திற்கும் விரோதமாக எங்கும் எல்லாருக்கும் போதித்து வருகிறவன் இவன்தான்; இந்தத் தேவாலயத்திற்குள்ளே கிரேக்கரையும் கூட்டிக்கொண்டுவந்து, இந்தப் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான் என்று சத்தமிட்டார்கள்.
- எபேசியனாகிய துரோப்பீமு என்பவன் முன்னே நகரத்தில் பவுலுடனேகூட இருக்கிறதைக் கண்டிருந்தபடியால், பவுல் அவனைத் தேவாலயத்தில்கூட்டிக்கொண்டு வந்திருப்பானென்று நினைத்தார்கள் (21:28,29).
    - ➢ துரோப்பீமு பவுலுக்கு வழித்துணையாக வந்தவன் (20:4)
  - ❖ எருசலேம் நகரமுழுவதும் கலக்கமுற்றது
  - ❖ ஜனங்கள் பவுலைப்பிடித்து, தேவாலயத்திற்குப் புறம்பே இழுத்துக்கொண்டுபோனர்கள்;
  - ❖ உடனே தேவாலய கதவுகள் பூட்டப்பட்டது.
  - ❖ யூதர்கள் அவனைக் கொலைசெய்ய எத்தனித்தனர் (21:30,31).

21:31-

- போர்ச்சேவகரின் சேனாபதிக்குச் செய்திவந்தது. உடனே அவன் போர்ச்சேவகரையும் அவர்களுடைய அதிபதிகளையும் கூட்டிக்கொண்டு, அவர்களிடத்திற்கு ஓடினான்; சேனாபதியையும் போர்ச்சேவகரையும் அவர்கள் கண்டபோது பவுலைஅடிக்கிறதை விட்டு நிறுத்தினார்கள்.
- அப்பொழுது சேனாபதி கிட்டவந்து அவனைப் பிடித்து, இரண்டு சங்கிலிகளினாலே கட்டும்படி சொல்லி: இவன் யார் என்றும் என்ன செய்தான் என்றும் விசாரித்தான்.
- அதற்கு ஜனங்கள் பலவிதமாய்ச் சத்தமிட்டார்கள்; சந்தடியினாலே நிச்சயத்தை அவன் அறியக்கூடாமல், அவனைக் கோட்டைக்குள்ளே கொண்டுபோகும்படி கட்டளையிட்டான்.
- அவன் படிகள்மேல் ஏறினபோது ஜனக்கூட்டம் திரண்டு பின்சென்று, இவனை அகற்றும் என்று உக்கிரமாய்க் கூப்பிட்டபடியினாலே, போர்ச்சேவகர் அவனைத் தூக்கிக்கொண்டு போகவேண்டியதாயிருந்தது.
- அவர்கள் பவுலைக் கோட்டைக்குள்ளே கொண்டுபோகிற சமயத்தில், அவன் சேனாபதியை நோக்கி: நான் உம்முடனே ஒரு வார்த்தை பேசலாமா என்றான். அதற்கு அவன்: உனக்குக் கிரேக்குபாஷை தெரியுமா?
- நீ இந்த நாட்களுக்குமுன்னே கலகமுண்டாக்கி, நாலாயிரங் கொலைபாதகரை வனாந்தரத்திற்குக் கொண்டுபோன எகிப்தியன் அல்லவா என்றான்.
    - ➢ ஜொதிபத்தர் இதை குறித்து எழுதுகையில் இவன் ஜனங்களை தவறாக நடத்தின கள்ளதீர்க்கதரிசி என்கிறார்.
- உத்தரவானபோது, பவுல் படிகளின்மேல் நின்று ஜனங்களைப் பார்த்துக் கையமர்த்தினான்; மிகுந்த அமைதலுண்டாயிற்று; அப்பொழுது அவன் எபிரெயுபாஷையிலே பேசத்தொடங்கினான்:
- பவுல் தனது பேச்சை ‘‘சகோதரரே, பிதாக்களே’’, என ஆரம்பிக்கிறான் (22:1). ஸ்தேவானும் தனது பேச்சை இவ்விதமாகவே ஆரம்பித்தான் (7:2). யூதர்களுக்குள்ளாக இது பரம்பரையாக குறிக்கும் ஒரு சொல்லாகும் (2:29). ஆனால் கிறிஸ்தவர்களுக்கிடையே இது கிறிஸ்துவினால் உண்டான ஐக்கியத்தை குறிக்கிறது (6:3; 10:23; ரோமர் 1:13)

<u>பவுல் தனது பிண்ணனியை குறித்து சொல்கிறான்</u>

1. கிறிஸ்துவை அறியும் முன்... (22:3,4)
    - ➢ நான் யூதன்
    - ➢ தர்சுபட்டணத்திலே பிறந்தவன்
    - ➢ எருசலேமிலே கமாலியேனின் பாதத்தருகே வளர்ந்தவன்
      கமாலியேல், சகல ஜனங்களாலும் கனம்பெற்ற நியாயசாஸ்திரி (பரிசேயன்) 5:34
    - ➢ வேதப்பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டவன்
    - ➢ தேவனுக்காக வைராக்கியமுள்ளவன்
    - ➢ சபையை துன்பபடுத்தினவன்

2. கிறிஸ்துவை அறிந்தபோது... (22:6-16)
    - ➢ வானத்திலிருந்து பேரொளி உண்டாகி, என்னைச் சுற்றிப் பிரகாசித்தது.
    - ➢ என்னுடனே பேசுகிற சத்தத்தைக் கேட்டேன்.
    - ➢ ஒளியின் மகிமையினாலே நான் பார்வையற்றுப்போனேன்
    - ➢ தமஸ்குவுக்கு வந்து பார்வையடைந்தேன்
    - ➢ கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம்பெற்றேன்.
3. கிறிஸ்துவை அறிந்த பின்... (22:17-21)
    - ➢ தேவாலயத்திலே ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கையில் அவரைத் தரிசித்தேன்.
    - ➢ நான் உன்னைத் தூரமாயப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன்

- இதுவரைக்கு மட்டுமே செவிகொடுத்தனர் காரணம் தேவன் தங்களுக்கு மட்டுமே; புறஜாதிகளுக்கு அல்ல என்ற எண்ணம் இருந்தது.
- சேனாபதி பவுலை சவுக்கால் அடித்துவிசாரிக்கச் சொன்னான் (22:24). ஒரு ரோமனை விசாரணையின்றி சவுக்கால் அடிப்பது என்பது ரோமசட்டத்திற்கு புறம்பானது (16:37). பவுல் ஒரு ரோமனாக இருந்தபடியால் அவனை விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்கிறான் (24:30).
    - ➢ ரோம குடியுரிமையை பிறப்பாலும் மற்றும் அதற்கான கிரயம் கொடுத்தும் பெற்றுக்கொள்ளலாம்.
    - ➢ பவுல் பிறப்பாலும் (தர்சு பட்டணம் ரோம ஆளுகைக்கு உட்பட்டது); சேனாபதி கிரயம் கொடுத்தும் பெற்றுக்கொண்டனர் (22:28).

<u>பவுலுக்கு கொடுக்க இருந்த தண்டனை என்பது...</u>

- ➢ மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன் என்று 2 கொரி 11:25 மற்றும் அப் 16:22,23ல் சொல்லப்பட்டது அல்ல.
- ➢ 2 கொரி 11:24ல் குறிப்பிட்டுள்ள ஒன்றுகுறைய நாற்பதடியும் (39) அல்ல.
- ➢ மத் 27:26ல் கிறிஸ்து ஏற்றுக்கொண்ட கசையடியாகும். இது மரத்தாலான கைப்பிடியோடுகூடிய சிறிய சிறிய கசைகள் கொண்டதாகும். கசைகளின் முனையில் உலோகம் அல்லது எலும்புகளாலான சிறு சிறு குண்டுகள் இருக்கும் அது தசைகளை பிய்த்துக்கொண்டு வரும்.

- பவுல் ரோமனாயிருந்தபடியினாலே அவனை அடித்து விசாரிக்கும்படி எத்தனமாயிருந்தவர்கள் உடனே அவனை விட்டுவிட்டார்கள். சேனாபதி அவனைக் கட்டுவித்ததற்காகப் பயந்தான்.
- பவுலின்மேல் யூதராலே ஏற்படுத்தப்பட்ட குற்றம் இன்னதென்று நிச்சயமாய் அறிய விரும்பி, மறுநாளிலே அவனைக் கட்டவிழ்த்து, பிரதானஆசாரியரையும் அலோசனைச் சங்கத்தார் அனைவரையும் கூடிவரும்படி கட்டளையிட்டு, பவுலை கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு முன்பாக நிறுத்தினான்.
- இப்போது பவுல் தன் தரப்பில் ‘‘இந்நாள்வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்துவந்தேன்’’ என்று தான் ஒரு நிரபராதி என்று கூறுகிறான் (23:1)
- அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய அனனியா விசாரிக்கப்படுவதற்கு முன் அவன் தன்னை எப்படி நிரபராதி என்று சொல்லமுடியும் என்று சொல்லி சமீபமாய் நின்றவர்களை நோக்கி: இவன் வாயில் அடியுங்கள் என்று கட்டளையிட்டான் (23:2).
    - ➢ இந்த அனனியா கி.பி 47-59 வரை பிரதான ஆசாரியனாக இருந்தவன்.
    - ➢ இவனுடைய தகப்பனுடைய பெயர் நெபாதேயுஸ் (Nebedaeus)
    - ➢ எங்கெல்லாம் ரோமர்களுக்கெதிராக புரட்சி எழும்புகிறதோ அங்கே இவன் தன்னுடைய மக்களை ஏவிவிடுகிறவனாக காணப்படுவான் (24:1).
- பவுல் அனனியாவைப்பார்த்து: வெள்ளையடிக்கப்பட்ட சுவரே என்கிறான் (23:3). இயேசுகிறிஸ்துவும் மத் 23:27ல் இதை குறித்து குறிப்பிடுகிறார் (புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்).
- எசே 13:10-12 - சமாதானம் இல்லாதிருந்தும் சமாதானமென்று சொல்லி, அவர்கள் ஜனத்தை மோசம்போக்குகிறார்கள்.
- தேவனுடைய பிரதானஆசாரியரை வைகிறாயா என்றதற்கு ‘‘இவர் பிரதான ஆசாரியரென்று எனக்குத் தெரியாது’’ என்கிறான் பவுல் (23:4,5) காரணம்...
    - ➢ பவுலுக்கு கண்பார்வை குறைவு இருந்திருக்கலாம் (கலா 4:15; 6:11)
    - ➢ சில சமயங்களில் மற்றவர்களும்கூட பிரதான ஆசாரியனுடைய இடத்தில் உட்காருவார்கள்.

- பவுலுக்கு இது முரண்பாடாக இருந்தது, காரணம் உண்மையான ஒரு பிரதான ஆசாரியன் இப்படிப்பட்ட கட்டளையை கொடுக்கமாட்டான்.

- ஆலோசனைச் சங்கத்தில் இரு கூட்டத்தார் (சதுசேயர்&பரிசேயர்) காணப்பட்டனர். சதுசேயர்கள் உயிர்தெழுதல் மற்றும் தூதர்கள் இல்லை என்று சொல்லுபவர்கள். ஆகையால் பவுல் ‘‘மரித்தோருடைய உயிர்தெழுதலைப்பற்றிய நம்பிக்கையைக் குறித்து நான் நியாயம் விசாரிக்கப்படுகிறேன்’’ என்று சத்தமிட்டுச் சொன்னான்.
- மிகுந்த கலகம் உண்டானபோது, பவுல் அவர்களால் பீறுண்டுபோவானென்று சேனாபதி பயந்து, போர்ச்சேவகர் போய், அவனை அவர்கள் நடுவிலிருந்து இழுத்துக் கோட்டைக்குக் கொண்டுபோகும்படி கட்டளையிட்டான் (23:10).
- இராத்திரியிலே கர்த்தர் ‘‘பவுலே, திடன்கொள்; நீ என்னைக்குறித்து எருசலேமிலே சாட்சி கொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டும்’’ என்றார் (23:11).
- 18:9 - கொரிந்துவிலே பவுலை திடப்படுத்துவதை காணலாம்.
- விடியற்காலமானபோது, யூதரில் சிலர் (நாற்பதுபேருக்கும் அதிகமானவர்கள்) ஒருமித்து, தாங்கள் பவுலைக் கொலைசெய்யுமளவும் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லையென்று சபதம்பண்ணிக்கொண்டார்கள் (12,13).
- இவர்கள் பிரதானஆசாரியர்களிடத்திலும் மூப்பர்களிடத்திலும் போய்: நீங்கள் ஆலோசனைச் சங்கத்தாரோடே கூடப்போய், அவனுடைய காரியத்தை அதிக திட்டமாய் விசாரிக்க மனதுள்ளவர்கள்போலச் சேனாபதிக்குக் காண்பித்து, அவர் நாளைக்கு அவனை உங்களிடத்தில் கூட்டிக்கொண்டு வரும்படி அவரிடத்தில் கேட்பீர்களாக. அவன் கிட்டவருகிறதற்குள்ளே நாங்கள் அவனைக் கொலைசெய்ய ஆயத்தமாயிருப்போம் என்றார்கள் (14,15).
- இந்தச் செய்தியை பவுலினுடைய சகோதரியின் குமாரன் பவுலுக்கு அறிவித்தான் (16).
- பவுல் நூற்றுக்கு அதிபதிகளில் ஒருவனை அழைத்து அறிவிக்கிறான்.
- நூற்றுக்கு அதிபதி அந்த வாலிபனை சேனாபதியினிடத்திற்குக் கூட்டிக்கொண்டுபோகிறான்.
- சேனாபதி அவனை தனியே அழைத்துக்கொண்டுபோய்: நீ என்னிடத்தில் அறிவிக்கவேண்டிய காரியம் என்னவென்று கேட்டான்.
- அதற்கு அவன்: யூதர்கள் பவுலின் காரியத்தை அதிக திட்டமாய் விசாரிக்க மனதுள்ளவர்கள்போல, நீர் நாளைக்கு அவனை ஆலோசனைச் சங்கத்தாரிடத்தில் கொண்டுவரும்படி உம்மை வேண்டிக்கொள்ள உடன்பட்டிருக்கிறார்கள். நீர் அவர்களுக்குச் சம்மதிக்கவேண்டாம்; அவர்களில் நாற்பதுபேருக்கு அதிகமானவர்கள் அவனை கொலைசெய்யுமளவும் தாங்கள் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லையென்று சபதம்பண்ணிக்கொண்டு, அவனுக்குப் பதிவிருந்து, உம்முடைய உத்தரவுக்காக இப்பொழுது காத்துக்கொண்டு ஆயத்தமாயிருக்கிறார்கள் என்றான்.
- அப்பொழுது சேனாபதி: நீ இவைகளை எனக்கு அறிவித்ததாக ஒருவருக்குஞ்சொல்லாதே என்று கட்டளையிட்டான் காரணம்...
  - அந்த வாலிபனுடைய பாதுகாப்பிற்காக இருக்கலாம்
  - அல்லது சேனாபதியின் திட்டம் (23:23,24 - தேசாதிபதியாகிய பேலிக்ஸிடம் அனுப்புதல்) வெளியே தெரியக்கூடாமல் இருப்பதற்காக இருக்கலாம்.
- பின்பு அவன் நூற்றுக்கு அதிபதிகளில் இரண்டுபேரை அழைத்து, செசரியாபட்டணத்திற்குப் போகும்படி இருநூறு காலாட்களையும், எழுபது குதிரைவீரரையும், இருநூறு ஈட்டிக்காரரையும் (மொத்தம் 470 பேர்), இராத்திரியில் மூன்றாம்மணி வேளையிலே, ஆயத்தம்பண்ணுங்களென்றும்;
- பவுலை ஏற்றி, தேசாதிபதியாகிய பேலிக்ஸினிடத்திற்குப் பத்திரமாய்க் கொண்டுபோகும்படிக்குக் குதிரைகளை ஆயத்தப்படுத்துங்களென்றும் சொன்னதுமன்றி, ஒரு நிருபத்தையும் எழுதினான்; அதின் விபரமாவது:
  - கி.பி 52ல் கிலவுதியுராயன் யூதேயாவுக்கு தேசாதிபதியாக பேலிக்ஸை நியமித்தான்.
- கனம்பொருந்திய தேசாதிபதியாகிய பேலிக்ஸ் என்பவருக்குக் கிலவுதியு லீசியா வாழ்த்துதல் சொல்லி அறிவிக்கிறது என்னவென்றால்: இந்த மனுஷனை யூதர் பிடித்துக் கொலைசெய்யப்போகிற சமயத்தில், நான் போர்ச்சேவகரோடேகூடப்போய், இவன் ரோமனென்று அறிந்து, இவனை விடுவித்தேன். அவர்கள் இவன்மேல் சாட்டின குற்றத்தை நான் அறியவேண்டுமென்று இவனை அவர்கள் ஆலோசனைச் சங்கத்துக்குமுன் கொண்டுபோனேன். இவன் அவர்களுடைய வேதத்திற்கடுத்த விஷயங்களைக்குறித்துக் குற்றஞ்சாட்டப்பட்டவனென்று விளங்கினதேயல்லாமல், மரணத்துக்காவது விலங்குக்காவது ஏற்ற குற்றம் யாதொன்றும் இவனிடத்தில் இல்லையென்று கண்டறிந்தேன். யூதர்கள் இவனுக்கு விரோதமாய்ச் சர்ப்பனையான யோசனை செய்கிறார்களென்று எனக்குத்

தெரியவந்தபோது, உடனே இவனை உம்மிடத்திற்கு அனுப்பினேன்; குற்றஞ்சாட்டுகிறவர்களும் இவனுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற காரியங்களை உமக்கு முன்பாக வந்து சொல்லும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டேன். சுகமாயிருப்பீராக, என்றெழுதினான்.

<u>செசரியாவிலே பவுல்</u>

- போர்ச்சேவர் தங்களுக்குக் கட்டளையிட்டபடியே, பவுலைக் கூட்டிக்கொண்டு, இராத்திரியிலே அந்திப்பத்திரி ஊருக்குப் போய், மறுநாளில் குதிரைவீரரை அவனுடனேகூடப் போகும்படி அனுப்பிவிட்டு, தாங்கள் கோட்டைக்குத் திரும்பினார்கள். அவர்கள் செசரியாபட்டணத்தில் சேர்ந்து, நிருபத்தைத் தேசாதிபதியினிடத்தில் கொடுத்து, பவுலையும் அவன் முன்பாக நிறுத்தினார்கள்.
    - ➢ செசரியா, யூதேயா மற்றும் சமாரியாவுக்கு ரோமர்கள் ஆளுகை செய்வதற்கான தலைநகராக காணப்பட்டது.
- தேசாதிபதி அதை வாசித்து: எந்த நாட்டானென்று கேட்டு, சிலிசியா நாட்டானென்று அறிந்தபோது: உன்மேல் குற்றஞ்சாட்டுகிறவர்களும் வந்திருக்கும்போது உன் காரியத்தைத் திட்டமாய்க் கேட்பேனென்று சொல்லி, ஏரோதின் அரமனையிலே அவனைக் காவல்பண்ணும்படி கட்டளையிட்டான்.

<u>பவுலின் மீதான குற்றச்சாட்டு</u>


- ஐந்துநாளைக்குப்பின்பு பிரதான ஆசாரியன் அனனியா மூப்பர்களோடும், நியாய சாதுரியனாகிய தெர்த்துல்லுவோடும் போய், பவுலுக்கு விரோதமாய்த் தேசாதிபதியினிடத்தில் குற்றஞ்சாட்டினார்கள் (24:1,2).
    - ➢ கொள்ளைநோயாகவும் (வச.5),
    - ➢ கலகம் எழுப்புகிறவனாகவும் (வச.5)
    - ➢ நசரேயருடைய மதபேதத்துக்கு முதலாளியாகவும் காணப்படுகிறான் (வச.5).
    - ➢ தேவாலயத்தையும் தீட்டுப்படுத்தப் பார்த்தான் (வச.6)

<u>பவுலின் வாதம்</u>

- நான் எருசலேமுக்குப் போனதுமுதல் இதுவரைக்கும் பன்னிரண்டு நாள்மாத்திரம் ஆயிற்று. இந்நாட்களிலே தேவாலயத்திலே நான் ஒருவரிடத்திலாவது தர்க்கம்பண்ணவில்லை
- ஜெபஆலயங்களிலாகிலும் நகரத்திலாகிலும் ஜனங்களுக்குள்ளே கலகமெழுப்பினதையும், இவர்கள் கண்டதில்லை.
- அநேக வருஷங்களுக்குப் பின்பு நான் என் ஜனத்தாருக்குத் தர்மப்பணத்தை ஒப்புவிக்கவும், காணிக்கைகளைச் செலுத்தவும் வந்தேன். அப்பொழுது அமளியில்லாமல் தேவாலயத்திலே சுத்திகரித்துக்கொண்டவனாயிருக்கையில், ஆசியா நாட்டாரான சில யூதர்கள் என்னைக் கண்டார்கள். அவர்களுக்கு என்பேரில் விரோதமான காரியம் ஏதாகிலும் உண்டாயிருந்தால், அவர்களே இங்கே வந்து, உமக்கு முன்பாகக் குற்றஞ்சாட்டவேண்டும்.
- நான் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக நின்றபோது அவர்கள் யாதொரு அநியாயத்தை என்னித்தில் கண்டதுண்டானால் இவர்களே அதைச்சொல்லட்டும்.
- ஒன்றை ஒத்துக்கொள்ளுகிறேன்; அதென்னவென்றால், மரித்தோர் உயிர்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கைகொண்டிருக்கிறதுபோல, நானும் நம்பிக்கைகொண்டிருக்கிறேன்.

<u>பேலிக்ஸ்</u>

- யூதமார்க்கத்தை நன்றாய் அறிந்தவன் காரணம் அவன் மனைவி துருசில்லா ஒரு யூதபெண்.
    - ➢ இந்த துருசில்லா ஏரோது அகரிப்பா-1 வின் குமாரத்தி
    - ➢ துருசில்லாவின் சகோதரன்தான் அகரிப்பா ராஜா (ஏரோது அகரிப்பா-2)
- நீதி, இச்சையடக்கம், நியாயத்தீர்ப்பு இவைகளை விரும்பாதவன்
- பவுலை விடுதலைபண்ணினால் தனக்கு பணங்கொடுப்பானென்று நம்பினான்.




<u>பேலிக்ஸ் பவுலுக்கு செய்தது</u>

- சேனாபதியாகிய லீசியா வரும்போது உங்கள் காரியங்களைத் திட்டமாய் விசாரிப்பேன்
  - ஆனால் லீசியா வரவேயில்லை. ஏற்கனவே லீசியாவால் தீர்க்கமுடியாத பிரச்சனையாக இருந்ததால்தான் பவுலை பேலிக்ஸிடம் அனுப்பிவைத்தான்.
- பவுலைக் காவல்பண்ணவும், கண்டிப்பில்லாமல் நடத்தவும், அவனை பார்க்கவருகிறவர்களை தடைசெய்யாதிருக்கவும் கட்டளையிட்டான்.
- யூதருக்குத் தயவுசெய்ய மனதாய்ப் பவுலைக் இரண்டு வருஷம் காவலில் வைத்துவிட்டுப்போனான்.
- இரண்டு வருஷம் சென்றபின்பு பேலிக்ஸ் என்பவனுக்குப் பதிலாய்ப் பொர்க்கியுபெஸ்து தேசாதிபதியாக வந்தான்.

## <u>பெஸ்துவுக்கு முன்பாக பவுல்</u> (25:1-12)

- பெஸ்து அதிபதியாகி மூன்றுநாளானபின்பு, செசரியாவிலிருந்து எருசலேமுக்குப் போனான்.
- அப்பொழுது பிரதான ஆசாரியனும் யூதரில் முதன்மையானவர்களும் அவனிடத்தில் வந்து, பவுலுக்கு விரோதமாகப் பிராதுபண்ணி, கொன்றுபோடும்படி சர்ப்பனையான யோசனையுள்ளவர்களாய், தங்கள்மேல் தயவுசெய்து, அவனை எருசலேமுக்கு அழைப்பிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள்.
- அதற்குப் பெஸ்து பிரதியுத்தரமாக: உங்களில் திறமுள்ளவர்கள் செசரியாவுக்கு வந்து, அந்த மனுஷனிடத்தில் குற்றம் ஏதாகிலும் உண்டானால், அந்தக் குற்றத்தை அவன்மேல் சாட்டட்டும் எனறான்.
- எருசலேமிலிருந்துவந்த யூதர்கள் அவனைச் சூழ்ந்துநின்று, தங்களால் ரூபிக்கக்கூடாத அநேகங் கொடிய குற்றங்களை அவன்மேல் சாட்டினார்கள்.
  a. வேதப்பிரமாணத்துக்கும்
  b. தேவாலயத்துக்கும்
  c. இராயருக்கும் விரோதமான குற்றச்சாட்டுகள் (17:7 - இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி, இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்கள்)

- யூதர்கள், இயேசு கிறிஸ்துவுக்கு விரோதமாகவும் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை சுமத்தினார்கள்.
    a. தன்னை தேவனுக்கு சமமாக்கினான்
    b. தேவாலயத்தை இடித்துபோடுங்கள் மூன்று நாட்களுக்குள் திரும்ப கட்டுவேன்.
    c. இராயனுக்கு வரிசெலுத்தக்கூடாது
- அதற்கு பவுல்: நான் யூதருடைய வேதப்பிரமாணத்துக்காகிலும், தேவாலயத்துக்காகிலும், இராயருக்காகிலும் விரோதமாக ஒரு குற்றமும் செய்யவில்லையென்று சொன்னான்.
    - நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது (ரோமர் 7:12)
    - யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப்போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப்போலவுமானேன் (1 கொரி 9:20)
    - இந்தத் தேவாலயத்திற்குள்ளே கிரேக்கரையும் கூட்டிக்கொண்டுவந்து, இந்தப் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான் (எபேசியனாகிய துரோப்பீமு என்பவன் முன்னே நகரத்தில் பவுலுடனேகூட இருக்கிறதைக் கண்டிருந்தபடியால், பவுல் அவனைத் தேவாலயத்தில்கூட்டிக்கொண்டு வந்திருப்பானென்று நினைத்தார்கள்) – அப் 21:28,29
    - எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன் (ரோமர் 13:1)
    - எவனுக்கு வரியைச் செலுத்தவேண்டியதோ அவனுக்கு வரியை செலுத்துங்கள் (13:7)
- அப்பொழுது பெஸ்து யூதருக்குத் தயவுசெய்ய மனதாய், பவுலை நோக்கி: நீ எருசலேமுக்குப் போய், அவ்விடத்திலே இந்தக் காரியங்களைக்குறித்து எனக்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்பட உனக்குச் சம்மதியா என்றான்.
- அதற்குப் பவுல்: நான் இராயருடைய நியாயசனத்துக்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்படவேண்டியது.
- நீ இராயருக்கு அபயமிட்டாயே; இராயரிடத்திற்கே போகக்கடவாயென்று உத்தரவு சொன்னான்.

## அகரிப்பாவுக்கு முன்பாக பவுல் (25:13-26:32)

- சிலநாள் சென்றபின்பு, அகிரிப்பா ராஜாவும் பெர்னீக்கேயாளும் பெஸ்துவைக் கண்டுகொள்ளும்படி செசரியாவுக்கு வந்தார்கள்.
- பெஸ்து பவுலின் சங்கதியை அகிரிப்பா ராஜாவுக்கு விவரித்து சொல்லுகிறான் (வச.14).
- அப்பொழுது அகிரிப்பா பெஸ்துவை நோக்கி: அந்த மனுஷன் சொல்லுகிறதை நானும் கேட்க மனதாயிருக்கிறேன் என்றான். அதற்கு அவன்: நாளைக்கு நீர் கேட்கலாம் என்றான் (வச.22).
- மறுநாளிலே அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் மிகுந்த ஆடம்பரத்துடனே வந்து சேனாபதிகளோடும் பட்டணத்துப் பிரதான மனுஷரோடுங்கூட நியாயஸ்தலத்தில் பிரவேசித்தார்கள். உடனே பெஸ்துவினுடைய கட்டளையின்படி பவுல் கொண்டுவரப்பட்டான்.
- ‘‘இவன் இனி உயிரோடிருக்கிறது தகாதது’’ - யூதஜனங்கள் (வச.24)
- இவன் மரணத்துக்குப் பாத்திரமானதொன்றையும் செய்யவில்லை - பெஸ்து (வச.25)
    - இவனைக்குறித்து இராயனுக்கு எழுதுகிறதற்கு காரியமொன்றும் இல்லை.
    - குற்றங்களை எடுத்துக்காட்டாமல் அனுப்புகிறது புத்தியீனமான காரியம்.
    - அகிரிப்பா ராஜாவே, இவனை விசாரித்துக் கேட்டபின்பு எழுதத்தக்க விசேஷம் ஏதாகிலும் எனக்கு விளங்கும்படி, இவனை உமக்குமுன்பாக கொண்டுவந்தேன் என்றான்
- அகிரிப்பா பவுலை நோக்கி: நீ உனக்காகப் பேச உனக்கு உத்தரவாகிறது என்றான்.
- தனது பழைய வாழ்க்கையைக் குறித்து பேசுகிறான் (4-11)
- கிறிஸ்து தன்னை சந்தித்த விதத்தை குறித்து பேசுகிறான் (12-18)
- மனமாற்றத்திற்கு பின்பு செய்து வந்ததை குறித்து பேசுகிறான் (19-20,23)

<u>பவுலின் சாட்சியை கேட்டபின் இருவரின் அறிக்கை...</u>

- <u>பெஸ்து:</u> பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது என்றான் (வச.24)
- <u>அகிரிப்பா:</u> நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான் (வச.28)
- இவன் மரணத்துக்கோ, கட்டுகளுக்கோ பாத்திரமானதொன்றையும் செய்யவில்லை (வச.31)
- இராயனுக்கு அபயமிடாதிருந்தானானால், இவனை விடுதலைபண்ணலாகும் (வச.32)

# <u>பவுலின் ரோமாபுரி பயணம் (அதி.27)</u>




- பவுலை ரோமாபுரிக்கு கொண்டுசெல்வதென்று முடிவுசெய்யப்பட்டு, பவுலோடு சேர்ந்து வேறுசிலரையும் அகுஸ்து பட்டாளத்தைச்சேர்ந்த யூலியு என்னும் பேர்கொண்ட நூற்றுக்கு அதிபதியினிடத்தில் ஒப்புவித்தார்கள்.
  - ➢ இது பவுலின் வாஞ்சையாக இருந்தது. தனது மூன்றாவது பிரயாணத்தின்போது கொரிந்துவில் இருந்தபோது ரோமாபுரியாருக்கு இந்த வாஞ்சையை கடிதம் மூலம் தெரியப்படுத்துகிறார்.
  - ➢ செசரியாவில் ஏறக்குறைய இரண்டு வருடங்களாக சிறையில் இருந்த பவுல் வெளியில் போய் ஊழியம் செய்யமுடியாவிட்டாலும் தனது சாட்சியை பேலிக்ஸ், பெஸ்து மற்றும் அகரிப்பாவின் முன்பாக பகிர்ந்துகொண்டார்.
  - ➢ அதற்கு முன்பாக எருசலேமில் யூத ஜனக்கூட்டத்திற்கு முன்பாக, சேனாபதி மற்றும் ஆலோசனை சங்கத்திற்கு முன்பாகவும் பகிர்ந்துகொண்டார்.
- யூலியு என்பவனுக்கு பயணவசதிகளை ஏற்படுத்தக்கூடிய பொறுப்பு கொடுக்கப்பட்டது. மட்டுமல்ல கைதிகளை ரோமாபுரிக்கு அழைத்துச்செல்வதும் அதில் அடங்கும்.
- வச.1 - நாங்கள் என்ற பதம் பயண்படுத்தப்பட்டிருப்பதால் இதில் லூக்காவும் அடங்கும்.
  - ➢ ‘‘நாங்கள்’’ என்ற பதம் முதலாவது 16:10ல் பயண்படுத்தப்பட்டிருக்கிறது அதாவது, இரண்டாம் பிரயாணத்தின்போது துரோவாவிலே லூக்கா பவுலோடு இணைந்தார்.
  - ➢ பிலிப்பி பட்டணத்தில் வந்தபோது அங்கே இருந்துவிட்டார் (16:1;17:1)
  - ➢ திரும்பவும் மூன்றாவது பிரயாணத்தின்போது பவுல் கொரிந்திலிருந்து எருசலேமுக்கு செல்ல பிலிப்பி பட்டணத்தின் வழியாக வந்தபோது லூக்கா பவுலோடு இணைந்து எருசலேம் செல்கிறார் (20:5;21:18)
  - ➢ இப்போது பவுலோடு சேர்ந்து ரோமாபுரிக்கு செல்கிறார் (21:1)
- வச.2 - மக்கெதோனியா தேசத்துத் தெசலோனிக்கே பட்டணத்தானாகிய அரிஸ்தர்க்கு எங்களுடனேகூட இருந்தான்.
  - ➢ தெசலோனிக்கே பட்டணத்தான்
  - ➢ மூன்றாவது பிரயாணத்தின்போது பவுலுக்கு வழித்துணையாய் வந்தவன் (19:29)
  - ➢ பவுலோடு சிறையில் இருந்தவன் (கொலோ 4:10)
  - ➢ பவுலோடு இணைந்து ஊழியம் செய்தவன் (பிலமோன் 1:24).
- கப்பலில் இருநூற்றெழுபத்தாறு பேர் இருந்தோம் (27:37).
- வச.2 - அதிரமித்தியம் ஊர்க்கப்பலில் ஏறி, ஆசியா நாட்டுக் கரைபிடித்தோடவேண்டுமென்று நினைத்துப் புறப்பட்டோம்.
  - ➢ அதிரமித்தியம் - ஆசியாவின் மேற்கு கடற்கரை பகுதியில் உள்ள துறைமுகம்.
- மறுநாள் சீதோன் துறைபிடித்தோம். யூலியு பவுலைப் பட்சமாய் நடப்பித்து, அவன் சீதோனில் உள்ள தன் சிநேகிதரிடத்திலே போய்ப் பராமரிப்படையும்படிக்கு உத்தரவு கொடுத்தான் (வச.3).

- பின்பு அவ்விடம்விட்டு புறப்பட்டு, எதிர்காற்றாயிருந்தபடியினால், காற்றினால் பாதிக்கப்படாதபடி சீப்புருதீவினால் பாதுகாக்கப்படும்படி அதின் ஒதுக்கிலே ஓடினோம்.
- பின்பு சிலிசியா பம்பிலியா நாடுகளின் (இன்றைய துருக்கி) கடல்வழியாய் ஓடி, லீசியா நாட்டு மீறாப்பட்டணத்தில் சேர்ந்தோம்.
- வச.6-8 - அங்கே இத்தாலியாவுக்குப் போகிற அலெக்சந்திரியாபட்டணத்துக் கப்பலை நூற்றுக்கு அதிபதி கண்டு, எங்களை அதில் ஏற்றினான்.
- காற்று எங்களைத் தடுத்தபடியினாலே, நாங்கள் அநேகநாள் மெதுவாய்ச் சென்று, வருத்தத்தோடே கினீதுபட்டணத்திற்கு (Cnidus) எதிரே வந்து, சல்மோனே (Salmone) ஊருக்கு எதிராய்க் கிரேத்தாதீவின் ஒதுக்கில் ஓடினோம்.
- கிரேத்தாதீவை வருத்தத்தோடே கடந்து, நல்ல துறைமுகம் (fair havens) என்னப்பட்ட ஒரு இடத்திற்கு வந்தோம்; லசேயபட்டணம் (Lasea) அதற்குச் சமீபமாயிருந்தது.
- வச.9-12 - வெகுகாலம் சென்று, உபவாசநாளும் கழிந்துபோனபடியினாலே (இது யூதர்களின் பாவநிவாரண நாளை குறிக்கிறது – Day of Atonement – செப்டம்பர் மாத கடைசி அல்லது அக்டோபராக இருக்கலாம்), <u>இனிக் கப்பல் யாத்திரை செய்கிறது மோசத்திற்கு ஏதுவாயிருக்குமென்று,</u> பவுல் அவர்களை நோக்கி: மனுஷரே, இந்த யாத்திரையினாலே சரக்குக்கும் கப்பலுக்கும் மாத்திரமல்ல, நம்முடைய ஜீவனுக்கும் வருத்தமும் மிகுந்த சேதமும் உண்டாயிருக்குமென்று காண்கிறேன் என்று சொல்லி, அவர்களை எச்சரித்தான்.
- அந்தத் துறைமுகம் மழைகாலத்திலே தங்குவதற்கு வசதியாயிராதபடியினால், அவ்விடத்தை விட்டுத் தென்மேற்கையும் வடமேற்கையும் நோக்கியிருக்கும் கிரேத்தாதீவிலுள்ள துறைமுகமாகிய <u>பேனிக்ஸ் என்னும் இடத்தில் சேரக்கூடுமானால் சேர்ந்து, மழைகாலத்தில் தங்கும்படி</u> அநேகம்பேர் ஆலோசனை சொன்னார்கள். நூற்றுக்கு அதிபதி பவுலினால் சொல்லப்பட்டவைகளைப் பார்க்கிலும் மாலுமியையும் கப்பல் எஜமானையும் அதிகமாய் நம்பினான்.
- வச.13-16 - தென்றல் மெதுவாயடித்தபடியால், தாங்கள் கோரினது கைகூடிவந்ததென்று எண்ணி, அவ்விடம்விட்டுப் பெயர்ந்து கிரேத்தாதீவுக்கு அருகாக ஓடினார்கள்.
- கொஞ்சநேரத்துக்குள்ளே யூரோக்கிலிதோன் என்னுங் கடுங்காற்று அதில்மோதிற்று.
- பவுலின் வார்த்தையைக் கேட்டிருந்தால் நல்ல துறைமுகத்திலேயே இருந்திருக்கலாம்.

<u>யூரோக்கிலிதோனால் ஏற்பட்ட பாதிப்புகள்</u> (15-21)

- கப்பல் அதில் அகப்பட்டுக்கொண்டு, காற்றுக்கு எதிர்த்துப்போகக்கூடாதபடியினால் பேனிக்ஸ் என்னும் இடத்திற்கு போகமுடியாமல் காற்றின் போக்கிலே கொண்டு போகப்பட்டோம்.

- கப்பலில் உள்ள படவுகளும் (ஆபத்தான பிரயாணத்தின்போது பயன்படுத்துவதற்காக வைக்கப்பட்டிருக்கும்) இக்காற்றினால் பாதிக்கப்பட ஆரம்பமானது. கிலவுதா என்னப்பட்ட ஒரு சின்ன தீவின் ஒதுக்கிலே ஓடுகையில் வெகு வருத்தத்தோடே படவை வசப்படுத்தினோம். ஆனாலும் ஒரு கட்டத்தில் படகையும் இழக்கநேரிட்டது (வச.32)
- பல உபாயங்கள் செய்து, கப்பலைச்சுற்றிக் கட்டி, சொரிமணலிலே விழுவோமென்று பயந்து, பாய்களை இறக்கி, இவ்விதமாய்க் கொண்டுபோகப்பட்டார்கள்.
- மறுநாளில் சில சரக்குகளைக் கடலில் எறிந்தார்கள்.
- மூன்றாம் நாளிலே கப்பலின் தளவாடங்களை எங்கள் கைகளினாலே எடுத்து எறிந்தோம்.
- அநேகநாளாய்ச் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்படாமல், மிகுந்த பெருங்காற்றுமழையும் அடித்துக் கொண்டிருந்தபடியினால், இனி தப்பிப் பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று.
- அநேகநாள் அவர்கள் போஜனம் பண்ணாமல் இருந்தனர். கோதுமை இருந்தும் சாப்பிடவில்லை (வச.38).

<u>பவுலின் ஆறுதலான வார்த்தைகள் (21-26)</u>

பவுல் அவர்கள் நடுவிலே நின்று: மனுஷரே, இந்த வருத்தமும் சேதமும் வராதபடிக்கு என் சொல்லைக்கேட்டு, கிரேத்தாதீவை விட்டுப்புறப்படாமல் இருக்கவேண்டியதாயிருந்தது. ஆகிலும், திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ்சொல்லுகிறேன். (அநேக சமயங்களில் நாம் தேவகட்டளையை மீறினாலும்கூட தேவன் நமக்கு ஆதரவாகவே இருக்கிறார்).

- கப்பற்சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது.

- தேவனுடைய தூதனானவன் இராத்திரியிலே பவுலுக்கு தரிசனமானதையும், தேவன்மீதுள்ள தனது நம்பிக்கையையும் விளக்குகிறான்.
  - பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்குமுன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார்
  - எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்.
- ஆயினும் நாம் ஒரு தீவிலே விழவேண்டியதாயிருக்கும் என்றான்.
- வச.27 - நல்ல துறைமுகத்தை விட்டு புறப்பட்டு பதினான்கு நாளாயிற்று.

<u>கப்பலாட்களின் எதிர்பார்ப்பும், தந்திரமும் (27-29)</u>

- ஆதிரியாக் கடலிலே அலைவுபட்டு ஓடுகையில், நடுஜாமத்திலே கப்பலாட்களுக்கு ஒரு கரை கிட்டிவருகிறதாகத் தோன்றிற்று. உடனே அவர்கள் விழுதுவிட்டு இருபது பாகமென்று கண்டார்கள்; சற்றப்புறம் போனபொழுது, மறுபடியும் விழுது விட்டுப் பதினைந்து பாகமென்று கண்டார்கள். பாறையிடங்களில் விழுவோமென்று பயந்து, பின்னணியத்திலிருந்து நாலு நங்கூரங்களைப்போட்டு, <u>பொழுது எப்போது விடியுமோ</u> என்றிருந்தார்கள்.
- அப்பொழுது கப்பலாட்கள் முன்னணியத்திலிருந்து நங்கூரங்களைப் போடப்போகிற பாவனையாய்ப் படவைக் கடலில் இறக்கி கப்பலை விட்டோடிப்போக வகைதேடினார்கள்.

<u>பவுலின் ஆலோசனை</u> (31-36)

- பவுல் நூற்றுக்கு அதிபதியையும் சேவகரையும் நோக்கி: கப்பலாட்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப் பிழைக்கமாட்டீர்கள் என்றான்.
- இந்தமுறை பவுலின் வார்த்தைக்கு நூற்றுக்கு அதிபதி செவிகொடுத்தான். போர்ச்சேவகர் படவின் கயிறுகளை அறுத்து, அதைத் தாழவிழவிட்டார்கள்.
- <u>பொழுது விடிகையில்</u> போஜம்பண்ணும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், நீங்கள் தப்பிப் பிழைப்பதற்கு அது உதவியாயிருக்கும்; உங்கள் தலையிலிருந்து ஒரு மயிரும் விழாது என்றான் (தைரியப்படுத்துகிறான்).
- இப்படிச் சொல்லி, அப்பத்தை எடுத்து, எல்லாருக்குமுன்பாகவும் தேவனை ஸ்தோத்திரித்து, அதைப் பிட்டுப் புசிக்கத்தொடங்கினான். அப்பொழுது எல்லாரும் திடமனப்பட்டுப் புசித்தார்கள் இது தேவபிள்ளைகளிடம் உள்ள பொதுவான நடைமுறை காரியமாகும் (லூக்கா 9:16; 24:30).
- திருப்தியாகப் புசித்தபின்பு அவர்கள் கோதுமையைக் கடலிலே எறிந்து, கப்பலை இலகுவாக்கினார்கள்.
- வச. 39-47 - <u>பொழுது விடிந்தபின்பு,</u> இன்னபூமியென்று அறியாதிருந்தார்கள். அப்பொழுது சமமான கரையுள்ள ஒரு துறைமுகம் அவர்களுக்குத் தென்பட்டது; கூடுமானால் அதற்குள் கப்பலையோட்ட யோசனையாயிருந்து, நங்கூரங்களை அறுத்துக் கடலிலே விட்டுவிட்டு, சுக்கான்களுடைய கட்டுகளைத் தளரவிட்டு, பெரும்பாயைக் காற்றுமுகமாய் விரித்து, கரைக்கு நேராய் ஓடி, இருபுறமும் கடல் மோதிய ஒரு இடத்திலே கப்பலைத் தட்டவைத்தார்கள்; முன்னணியம் ஊன்றி அசையாமலிருந்தது, பின்னணியம் அலைகளுடைய பலத்தினால் உடைந்துபோயிற்று.
- அப்பொழுது காவல்பண்ணப்பட்டவர்களில் ஒருவனும் நீந்தி ஓடிப்போகாதபடிக்கு அவர்களைக் கொன்றுபோடவேண்டுமென்று போர்ச்சேவகர் யோசனையாயிருந்தார்கள். நூற்றுக்கு அதிபதி பவுலைக் காப்பாற்ற மனதாயிருந்து, அவர்களுடைய யோசனையைத் தடுத்து, நீந்தத்தக்கவர்கள் முந்திக் கடலில் விழுந்து கரையேறவும், மற்றவர்களில் சிலர் பலகைகள் மேலும், சிலர் கப்பல் துண்டுகள்மேலும் போய்க் கரையேறவும் கட்டளையிட்டான்; இவ்விதமாய் எல்லாரும் தப்பிக் கரைசேர்ந்தார்கள்.
- நாங்கள் தப்பிக் கரைசேர்ந்தபின்பு, அந்தத் தீவின்பேர் மெலித்தா என்று அறிந்தோம் (28:1).

## <u>மெலித்தா</u>

- இந்ததீவானது ரோமர்களாலும், கிரேக்கர்களாலும் ‘மால்தா’ என்று அழைக்கப்படுகிறது.
- வச.2 - கிரேக்கமொழி பேசாதவர்களை கிரேக்கர்கள் ‘அந்நியர்’ (barbarous people) என்றே அழைப்பர் அதாவது கல்வி மற்றும் நாகரீகம் இல்லாதவர்கள் (ரோமர் 1:14).
- வச.2 - ‘அந்த வேளையிலே பிடித்திருந்த மழைக்காகவும் குளிருக்காகவும்’ - அக்டோபர் மாதத்தின் இறுதியோ அல்லது நவம்பர் மாதத்தின் ஆரம்பமாகவோ இருக்கலாம்.
- வச.11 - மூன்று மாதம் அந்த தீவிலே தங்கியிருந்தார்கள்.

<u>புபிலியு</u> (வச.7)

- இது ரோம பெயர்.
- தீவுக்கு முதலாளி - Chief man - புரொட்டோஸ்

உயர்பதவியில் உள்ளவர்களை குறிப்பதற்காக லூக்கா பயன்படுத்தும் சில பதங்கள்...

- 13:7 - ஆளுநர் – Proconsul - அந்திபட்டோஸ்
- 16:20 - நியாயாதிபதி - magistrates - ஸ்ட்ரடிக்கோய்
- 17:6 - பட்டணத்து அதிகாரிகள் - rulers of the city - பாலிட்ரசாஸ்
- 19:31 - ஆசியாநாட்டுத் தலைவர் - high-ranking officers of Asia - ஆசியர்கான்

- பவுலையும் அவனுடையவர்களையும் ஏற்றுக்கொண்டு, மூன்று நாள் பட்சமாய் விசாரித்தான்.

<u>மெலித்தா தீவின் மக்களுடைய சுபாவம்</u>

தீவின் முதலாளியைபோலவே ஜனங்களும்...

- அன்போடு வரவேற்றார்கள்
- தங்களோடு சேர்த்துக்கொண்டனர்.
- சூழ்நிலைக்கேற்றவாறு மாறுகிறவர்கள்.
  - பவுலை குற்றவாளியாக பார்க்கிறார்கள் - இந்த மனுஷன் கொலைபாதகன் (வச.4)
  - தண்டிக்கப்படவேண்டியவனாக பார்க்கிறார்கள் - (வச.4,6)
  - உயர்வாக நினைக்கிறார்கள் - தேவனென்று சொல்லிக்கொண்டார்கள் (வச.6).
    - ⇨ இன்றும் சூழ்நிலைக்கேற்றவாறு மக்கள் பேசுவார்கள். அதை கண்டுகொள்ளகூடாது.
- எங்களுக்கு அநேக மரியாதை செய்தார்கள்
- தீவைவிட்டு புறப்படும்போது எங்களுக்குத் தேவையானவைகளை தந்தார்கள்

<u>மெலித்தாவில் பவுலின் அற்புதம்</u>

- வச.8,9 - ஜுரத்திலும் இரத்தபேதியிலும் இருந்த புபிலியுவினுடைய தகப்பனை பவுல் ஜெபம்பண்ணி குணமாக்கினான்.
- தீவிலே இருந்த மற்ற வியாதிக்காரரும் வந்து, குணமாக்கப்பட்டார்கள்.

<u>மெலித்தாவிலிருந்து ரோமாபுரி நோக்கி...</u> (11-16)

- மூன்றுமாதம் சென்றபின்பு, அந்தத் தீவிலே மழை காலத்திற்குத் தங்கியிருந்த மிதுனம் என்னும் அடையாளமுடைய அலெக்சந்திரியாபட்டணத்துக் கப்பலிலே நாங்கள் ஏறிப் புறப்பட்டு, சீரகூசா பட்டணத்தைச் சேர்ந்து, அங்கே மூன்றுநாள் தங்கினோம்.
- பின்பு அவ்விடம்விட்டு, ரேகியுதுறைமுகத்துக்கு வந்து சேர்ந்தோம். மறுநாளில் தென்றற் காற்றெடுக்கையில் புறப்பட்டு, இரண்டாம் நாள் புத்தேயோலிபட்டணத்திற்கு வந்து, அங்கே சகோதரரைக் கண்டு ஏழுநாள் அவர்களிடத்தில் தங்கினோம். பின்பு ரோமாபுரிக்குப் போனோம்.
  - புத்தேயோலிபட்டணமானது எகிப்தின் அலெக்சாந்திரியா பட்டணத்திலிருந்து ஏற்றிவரப்படும் கோதுமையை இறக்கிவைக்கும் ஸ்தலமாகும்.
  - இத்தோடு பவுலின் கடல்வழி பயணமானது முடிவடைகிறது. இதற்குமேல் ரோமாபுரிக்கு ஏறக்குறைய 275 கி.மீ, அவர்கள் தரைவழியாகதான் பயணப்படவேண்டும்.
- ரோமாபுரியிலுள்ள சகோதரர்கள் நாங்கள் வருகிற செய்தியைக் கேள்விப்பட்டு, சிலர் அப்பியுபுரம்வரைக்கும், சிலர் மூன்று சத்திரம்வரைக்கும் எதிர்கொண்டுவந்தார்கள்; அவர்களைப் பவுல் கண்டு, தேவனை ஸ்தோத்திரித்துத் தைரியமடைந்தான்.
- இதுவரை பவுல் ரோமாபுரியாரை சந்தித்ததுகூட இல்லை ஆனால் அவர்களின் அன்பினால் பவுல் சந்தோஷப்பட்டான். பவுல் கொரிந்து பட்டணத்தில் இருந்தபோது எழுதின கடிதம் கொஞ்சநாளுக்கு முன்புதான் அவர்களுக்கு கிடைத்திருக்கும்.
- நாங்கள் ரோமாபுரியில் சேர்ந்தபோது, நூற்றுக்கு அதிபதி தன் காவலிலிருந்தவர்களைச் சேனாபதியினிடத்தில் ஒப்புக்கொடுத்தான்.
- பவுல் தன்னைக் காத்திருக்கிற சேவகனுடனே தனித்துக் குடியிருக்கும்படி (வீட்டுக்காவல்) உத்தரவு பெற்றுக்கொண்டு தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷம் தங்கியிருந்தான் (வச.30).
- ரோமரின் ஆளுகைக்குள்ளான நாடுகளிலிருந்து கொண்டுவரப்படும் கைதிகளை விசாரனைவரை பாதுகாக்க 500 படைவீரருள்ள ஒரு சிறப்புக்காவல் படையிடம் ஒப்படைக்கப்படுவர். ஆனால் பவுலை அழைத்துவந்த நூற்றுக்கு அதிபதி கொடுத்த நன்னடத்தை சான்று மூலமாக பவுலுக்கு இந்த சலுகை கிடைத்திருக்கவேண்டும்.

## <u>பவுல் ரோமாபுரி சிறையில் இருந்தபோது நடந்தவை</u>

பவுல் எங்கு சென்றாலும் சுவிசேஷம் அறிவிக்கும்படியாகதான் செல்வதுண்டு ஆனால் இப்போதோ சிறையில்...

பவுல் ரோமாபுரி சிறையில் இரண்டு வருடம் இருந்ததற்கு காரணம், பவுல் ரோமிற்கு வந்தபின் யூததலைவர்கள் இந்த விஷயத்தை அறிந்திருக்கவில்லை (28:17-21). எருசலேமிலிருந்தும் குற்றம்சாட்ட யாரும் வரவில்லை. ஆகவே வழக்கானது தீவிரம் காட்டாமல் நீரோவுக்கு முன் விசாரணைக் வர இரண்டு வருடமானது.

1. <u>பவுல் ரோமாபுரியிலுள்ள யூதர்களுக்கு வேதவசனத்தை விளக்குகிறான்</u> (28:17-28)

- மூன்றுநாளைக்குப்பின்பு, பவுல் யூதரில் பிரதானமானவர்களை வரவழைத்து அவர்களை நோக்கி: சகோதரரே, நம்முடைய ஜனங்களுக்கும் நம்முடைய முன்னோர்களின் முறைமைகளுக்கும் விரோதமானதொன்றையும் நான் செய்யாமலிருந்தும், கட்டப்பட்டவனாக எருசலேமிலிருந்து ரோமர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டேன். அவர்கள் என்னை நியாயம் விசாரித்தபோது மரணத்துக்கேதுவான குற்றம் ஒன்றும் என்னிடத்தில் காணாதபடியினால், என்னை விடுதலையாக்க மனதாயிருந்தார்கள். ஆனால் யூதர்கள் அதற்கு எதிர்பேசினபோது, நான் இராயனுக்கு அபயமிடவேண்டியதாயிருந்தது; ஆயினும் என்ஜனத்தார்மேல் யாதொரு குற்றஞ் சாட்டவேண்டுமென்று நான் அப்படிச் செய்யவில்லை. இந்தக் காரியத்தினிமித்தமே உங்களைக் காணவும் உங்களுடனே பேசவும் உங்களை அழைப்பித்தேன் என்றான்.
- அதற்கு அவர்கள்: உன்னைக்குறித்து யூதேயாவிலிருந்து எங்களுக்குக் காகிதம் வரவுமில்லை, வந்த சகோதரரில் ஒருவனும் உன்பேரில் ஒரு பொல்லாங்கை அறிவித்ததுமில்லை, அதைப்பற்றிப் பேசினதுமில்லை. ஆனால் நீ இந்த மதபேதத்துக்கு விரோதமாய்ப் பேசுகிறதாக நாங்கள் அறிந்திருக்கிறபடியால், இதைக்குறித்து உன்னுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டறிய விரும்புகிறோம் என்றார்கள்.
- அதற்காக அவர்கள் ஒரு நாளைக்குறித்து, அநேகம்பேர் அவன் தங்கியிருந்த வீட்டிற்கு அவனிடத்தில் வந்தார்கள். அவன் காலமே தொடங்கிச் சாயங்காலமட்டும் மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் இருந்து இயேசுவுக்கடுத்த விசேஷங்களை அவர்களுக்குப் போதித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துச் சாட்சிகொடுத்து விஸ்தரித்துப் பேசினான். அவன் சொன்னவைகளைச் சிலர் விசுவாசித்தார்கள், சிலர் விசுவாசியாதிருந்தார்கள்.
- இப்படி அவர்கள் ஒருவரோடொருவர் ஒவ்வாமலிருந்து, புறப்பட்டுப் போகையில், பவுல் அவர்களுக்குச் சொன்ன வாக்கியமாவது: நீங்கள் காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள், கண்ணாரக்கண்டும் பாராதிருப்பீர்கள். இவர்கள் கண்களினால் காணமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் இவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படிக்கு, இந்த ஜனத்தின் இருதயம் கொழுத்திருக்கிறது; காதுகளினால் மந்தமாய்க் கேட்டுத் தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்று இந்த ஜனத்தினிடத்தில் போய்ச் சொல்லு என்பதைப் பரிசுத்தஆவி ஏசாயா தீர்க்கதரிசியைக் கொண்டு நம்முடைய பிதாக்களுடனே நன்றாய்ச் சொல்லியிருக்கிறார். ஆதலால் தேவனுடைய இரட்சிப்பு புறஜாதியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்றும், அவர்கள் அதற்குச் செவிகொடுப்பார்களென்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றான்.
- யூதர்களோ தங்களுக்குள்ளே மிகவும் தர்க்கம் பண்ணிக்கொண்டு, போய்விட்டார்கள்.
- இதற்கு பின்பாக என்னென்ன சம்பவங்கள் நடந்தது என்பதை லூக்கா எழுதவில்லை. ஆனால் பவுலினால் எழுதப்பட்ட நிருபங்கள் வாயிலாக என்ன நடந்திருக்கலாம் என்பதை நாம் ஓரளவுக்கு யூகிக்கலாம்.

2. <u>பவுலுக்கு வேதனையை அதிகரிக்க சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது</u>

- மட்டுமல்ல தனது சிறையிருப்பை குறித்து வருத்தப்படவில்லை. பிலிப்பியருக்கு இப்படியாக எழுதுகிறார்(12-18): சகோதரரே, எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன்.
- அரமனையெங்குமுள்ளவர்களுக்கும் மற்ற யாவருக்கும் என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று வெளியரங்கமாகி, சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன்கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்.
  - ➢ சிலர் பொறாமையினாலும் விரோதத்தினாலும், சிலர் நல்மனதினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள்.
  - ➢ சிலர் என் கட்டுகளோடே உபத்திரவத்தையுங்கூட்ட நினைத்து, சுத்தமனதோடே கிறிஸ்துவை அறிவியாமல், விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள்.
  - ➢ சிலர் அன்பினாலே அறிவிக்கிறார்கள்.

இதனாலென்ன? வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது, எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்; அதனால் சந்தோஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப்படுவேன்.

3. <u>சிறையிலிருந்து பவுல் எழுதின கடிதங்கள்</u>

- மட்டுமல்லாது சிறையிலிருந்தபோது எபேசியர்(6:19), கொலோசெயர்(4:3,18), பிலிப்பியர் (1:7,14,16) மற்றும் பிலேமோன்(1) ஆகிய நான்கு நிருபங்களை எழுதியுள்ளான்.

4. <u>இராயனுக்கு முன் பவுல்</u>

- தேவன் பவுலுக்கு தரிசனமாகி ‘‘நீ இராயனுக்குமுன்பாக நிற்கவேண்டும்’’ (27:24) என்று சொன்னதுபோலவே பவுல் இராயனுக்கு முன்பாக நின்று தன்னுடைய சாட்சியை பகிர்ந்துகொண்டான்.

5. <u>ஒநேசிமுவின் மனமாற்றம்</u>

  - ➢ கொலேசேயிலிருந்து ரோமாபுரி சிறைக்கு வந்த பிலேமோனின் வீட்டு அடிமை.
  - ➢ ஒருவேளை பிலேமோனின் வீட்டில் ஏதாகிலும் திருடி அதினிமித்தமாக ரோமாபுரி சிறைக்கு வந்திருக்கலாம் (வச.18)
  - ➢ சிறையில் பவுலின் மூலமாக கர்த்தருக்கு நேராக வழிநடத்தப்படுகிறான் (வச.10)
  - ➢ ரோமசட்டபடி எஜமானிடமிருந்து தப்பி வந்த ஒரு அடிமை திரும்பவும் அவனுடைய எஜமானிடமே செல்லவேண்டும். ஆகவே பவுல் ஒநேசிமுவை தன்னோடு வைத்துக்கொள்ள விரும்பினாலும், பிலேமோனின் சம்மதமில்லாமல் செய்யகூடாது என்பதற்காக திரும்பவும் அவனிடமே அனுப்பிவைக்கிறான் (வச.11-14).
  - ➢ ஒநேசிமோடு சேர்ந்து தீகுக்குவையும் அனுப்பி வைக்கிறார் பவுல் (கொலோ 4:7-9). கொலோசேயர், பிலமோன் மற்றும் எபேசியர் நிருபங்களை கொண்டு வருகிறார்கள்.

### <u>தீகுக்கு</u>

- ❖ மூன்றாவது மிஷினெரி பிரயாணத்தை முடித்துவிட்டு ரோமாபுரிக்கு திரும்பும்போது இவனும் பவுலோடு இணைந்து வந்ததை 20:4ல் காணலாம்.
  - ❖ பிரியமான சகோதரன்,
  - ❖ உண்மையுள்ள ஊழியக்காரன்,
  - ❖ கர்த்தருக்குள் எனக்கு உடன்வேலையாள்
  - ❖ இருதயங்களைத் தேற்றுகிறவன்
- ➢ தீகுக்கு கொலோசேயில் கடிதத்தை கொடுத்துவிட்டு எபேசுவுக்கு சென்றிருக்ககூடும் (எபே 6:21; கொலோ 4:7-9).
- ➢ பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தை தீகிக்கு எடுத்துசென்றிருக்கக்கூடும் (2 தீமோ 4:12)
  - ❖ அநேகர் எபேசியருக்கு எழுதின நிருபமானது பொதுவாக எல்லா சபைகளிலும் வாசிக்கப்படும்படியாக எழுதப்பட்ட நிருபமாக கருதுகின்றனர்.
  - ❖ ஏனெனில் எபே 1:1ல் கூறப்பட்டுள்ள ‘எபேசுவிலே’ என்ற வார்த்தையானது அநேக கையெழுத்துப்பிரதிகளில் இல்லை.
  - ❖ கொலோ 4:16ல் கூறப்பட்ட ‘லாவோதிக்கேயாவிலிருந்து வரும் நிருபம்’ என்பது எபேசியருக்கு எழுதின நிருபம் என கருதப்படுகிறது.
  - ❖ எபேசியர் வாசித்தபின்பு லாவோதிக்கேயாவிற்கும் பின்பு கொலோசேக்கும் கொண்டுவரவேண்டும். அதுபோல கொலோசேயில் வாசிக்கப்படும் நிருபம் லாவோதிக்கேயாவிற்கு கொண்டுவரப்படவேண்டும் (கொலோ 4:16).

6. <u>பிலிப்பியர் எப்பாப்பிரோதீத்துவை ரோமாபுரிக்கு அனுப்புகின்றனர்</u>

  - ➢ எப்பாப்பிரோதீத்துவின் பெயர் பிலிப்பியர் நிருபத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.
  - ➢ இவன் யூதன் அல்ல; புறமதத்தை சார்ந்தவன் (பாப்பிரோ என்பது புறஜாதியாரின் பெண் கடவுளின் பெயர்களில் ஒன்று). ஆனால் எப்படியோ கிறிஸ்துவுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டவன்.
  - ➢ சொந்த ஊர் பிலிப்பியாகும். பவுலுக்கு பொருளாதார உதவிசெய்யும்படியாக பிலிப்பியர் எப்பாப்பிரோதீத்துவை ரோமாபுரிக்கு அனுப்புகின்றனர் (பிலி 4:18).
  - ➢ பிலிப்பி சபையார் பவுல், தெசலோனிக்கேயிலிருந்தபோதும் இரண்டொருதரம் உதவி செய்துள்ளார்கள் (பிலி 4:16).
  - ➢ உதவிதொகையை பவுலிடம் கொடுத்துவிட்டு கொஞ்சகாலம் அவனுக்கு உதவியாக ரோமாபுரியில் தங்கியிருக்கிறான். காரணம் என்னுடைய உடன்வேலையாள் என்று அவனைகுறித்து சொல்கிறார் (பிலி 2:25).
  - ➢ மட்டுமல்ல அச்சமயத்தில் எப்பாப்பிரோதீத்து மிகுந்த வியாதியினாலே கஷ்டப்பட்டு மரணப்படுக்கைக்கு சென்றிருக்கிறான். குணமானபின்பு இக்கடிதத்தோடு பிலிப்பிக்கு சென்றிருக்கிறான் (பிலி 2:26-30).

- ❖ என் சகோதரன், உடன்வேலையாள், உடன்சேவகன்,
- ❖ உங்கள் ஸ்தானாபதி, உங்கள் மேல் வாஞ்சையுள்ளவன், தான் வியாதிப்பட்டதை நீங்கள் கேள்விப்பட்டதினாலே மிகவும் வியாகுலப்படுகிறவனுமாயிருந்தான்.
- ❖ என் குறைச்சலுக்கு உதவிசெய்தவன்,

<u>ரோமாபுரியில் பவுலோடு இருந்த மற்ற சகோதரர்கள்</u>

ஒநேசிமு, தீகுக்கு, எப்பாப்பிரோதீத்து இவர்களை தவிர பவுலோடு இருந்த வேறுசிலர்.

1. லூக்கா
   - ➢ இவர் வைத்தியராக காணப்பட்டார் (கொலோ 4:14)
   - ➢ பவுலோடு இரண்டாம் மற்றும் மூன்றாம் மிஷினெரி பிரயாணத்தில் உடனிருந்தவர் (16:10-12; 20:5-21:17)
   - ➢ இப்போது ரோமாபுரியிலும் பவுலுக்கு துணையாக வந்திருந்தார் (27:1-28:16). பவுல் எழுதின சிறைச்சாலை நிருபத்தில் லூக்காவும் வாழ்த்து கூறுவதை காணலாம் (கொலோ 4:14; பிலமோன் 24).
   - ➢ மட்டுமல்ல ரோமாபுரியில் பவுல் இரண்டாம் முறையாக சிறையிலிருந்தபோதும் லூக்கா பவுலோடு இருந்ததை காணலாம் (2 தீமோ 4:11).
2. அரிஸ்தர்க்கு
   - ➢ மக்கெதோனியா தேசத்துத்து தெசலோனிக்கே பட்டணத்தான் (27:2). அவன் ஒரு யூதன் என்பதை, பவுல் விருத்தசேதனமுள்ளவன் என்று குறிப்பிடுவதன் மூலம் அறியலாம் (கொலோ 4:10,11).
   - ➢ பவுலின் மூன்றாவது மிஷினெரி பிரயாணத்தின்போது எபேசுவிலே மிகவும் கடினமான சூழ்நிலையில் பவுலோடு இணைந்தவன் (19:29).
   - ➢ பவுல் மூன்றாவது மிஷினெரி பிரயாணத்தை முடித்துவிட்டு ரோமாபுரிக்கு திரும்பும்போது இவனும் பவுலோடு இணைந்து வந்ததை 20:4ல் காணலாம். 27:2ல் பவுலோடு சேர்ந்து ரோமாபுரிக்கு பிரயாணமாய் செல்கிறான். இப்போது ரோமாபுரியில் பவுலோடு சிறையில் (கொலோ 4:10). தானாகவே முன்வந்து பவுலோடு சிறையில் இருந்திருக்கலாம் எப்படியோ பவுலுக்கு சிறையில் ஆறுதலாக இருந்துள்ளான் (கொலோ 4:11)
3. தீமோத்தேயு
   - ➢ பவுலுக்கு தீமோத்தேயுவை போல வேருயாரும் வெகு நெருக்கமாக இருந்தவர்கள் இல்லை. அநேக சமயங்களில் பவுல் அவனைக் குறித்து எழுதியுள்ளான்.
     - ▪ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும், எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய் (2 தீமோ 3:10,11)
     - ▪ என்னைப்போல அவனும் கர்த்தருடைய கிரியையை நடப்பிக்கிறானே (1 கொரி 16:10)
     - ▪ உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என்னைப்போல மனதுள்ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்திலில்லை (பிலி 2:20).
   - ➢ தீமோத்தேயுவின் ஊர் லீஸ்திரா (16:1). பவுலின் முதல் மிஷினெரி பயணத்தின்போது பவுலின் மூலமாக கர்த்தருக்குள் நடத்தப்பட்டிருக்ககூடும் காரணம் 1 தீமோ 1:2 மற்றும் 2 தீமோ 2:1ல் குமாரன் என்று குறிப்பிடுகிறார். இரண்டாவது பயணத்தின்போது அவனை தன்னுடன் ஊழியத்திற்கு உதவியாக அழைத்துச்செல்கிறான் (16:3).
   - ➢ பவுல் தீமோத்தேயுவுக்கு அநேக அறிவுரைகளை தனிப்பட்ட முறையில் அறிவுறுத்துகிறார்.
   - ➢ குமாரனாகிய தீமோத்தேயுவே, ... நீ நல்ல போராட்டம்பண்ணும்படி, ...விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு (1 தீமோ 1:18).
   - ➢ ... போதித்துவந்தால், விசுவாசத்திற்குரிய வார்த்தைகளிலும் நீ அநுசரித்த நற்போதகத்திலும் தேறினவனாகி, இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருப்பாய் (1 தீமோ 4:6).
   - ➢ உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு (1 தீமோ 6:20).
   - ➢ நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன் (2 தீமோ 1:6).
   - ➢ தீமோத்தேயுவும்கூட சிறையில் இருந்ததாகவும் பின்பு விடுதலையாக்கப்பட்டதாகவும் எபிரெயர் 13:23ல் காணலாம்.
   - ➢ ரோமாபுரியில் பவுலின் இரண்டாவது இறுதி சிறையிருப்பின்போது, தனக்கு மரணம் நேரிடப்போவதை அறிந்த பவுல், தீமோத்தேயுவை தன்னிடம் சீக்கிரமாக அழைப்பதை

காணலாம் (2 தீமோ 4:9). ஆனால் தீமோத்தேயு பவுலை சந்தித்தாரா இல்லையா என்பது தெரியாது.

4. மாற்கு
   - மேரியின் மகன் (அப் 12:12)
   - பர்னபாவின் உறவினன் (கொலோ 4:10)
   - பவுலோடும், பர்னபாவோடும் முதல் ஊழியபிரயாணத்தில் உதவியாளாக செயல்பட்டவன் (அப்13:5), ஆனால் பெர்கேவுக்கு வந்தபோது அவர்களைவிட்டு பிரிந்து எருசலேமுக்கு சென்றுவிட்டான் (13:13). இதற்காக பர்னபாவிடம் சண்டைபோடுகிறான் பவுல் (அப் 15:36-39)
   - ஆனால் பவுல் ரோமாபுரியில் இருக்கும்போது அவனோடு சேர்ந்து வேலைசெய்துள்ளான் (பிலமோன் 24)
   - பவுல் தனது கடைசி நாட்களில் மாற்கு தனக்கு உதவியாக இருந்தால் நலமாய் இருக்கும் என்று விரும்பினான் (2 தீமோ 4:11)
   - காலங்கள் மாறும்போது, நமக்கு விருப்பமில்லா மனிதர்களும் மாறலாம் என்பதற்கு மாற்கு ஒரு நல்ல மாதிரி.
5. யுஸ்து என்னப்பட்ட இயேசு
   - இவனை குறித்து அதிகமாக சொல்லப்படவில்லை. ஆனால் இவன் ஒரு யூதன் என்றும் ரோமாபுரியில் பவுலோடு உடன்வேலையாளாக இருந்து, ஆறுதலாக இருந்தவன் என்றும் கொலோசெயர் 4:11ல் வாசிக்கிறோம்.
6. எப்பாப்பிரா
   - கொலேசே பட்டணத்தைச் சேர்ந்தவன் (கொலோ 4:12)
   - ரோமாபுரியில் பவுலோடு இருந்த கிறிஸ்துவின் ஊழியக்காரன்.
   - கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக வல்லமையான கருவியாக காணப்பட்டவன் மாத்திரமல்ல கொலோசே சபையை நிரூபினவனாகவும் இருந்தான் (கொலோ 1:7)
   - லாவோதிக்கேயா, எராப்போலியா சபையையும் கண்காணிக்கிறவனாக இருந்திருக்கக்கூடும் (கொலோ 4:13)
   - இவன் கொலோசே பட்டணத்திலிலுள்ள சபையின் காரியங்களை பவுலுக்கு அறிவித்ததினிமித்தமாக பவுல் கொலோசேயர் நிருபத்தை எழுதியிருக்ககூடும் (கொலோ 1:7,8)
   - ஆவிக்குரிய மனிதனும், கொலோசேசபை மக்களுக்காக ஜெபிக்கிறவனாகவும் காணப்பட்டான் (கொலோ 4:12,13).
7. தேமா
   - பவுல் தனது நிருபத்தில் இவனது பெயரை மூன்று இடங்களில் குறிப்பிடுகிறார்
   - முதலாவது பவுல் ரோமாபுரி சிறையில் இருந்தபோது பவுலின் உடன்வேலையாளாக இருந்து பிலேமோன் நிருபத்திலும், கொலோசே நிருபத்திலும் தன்னுடைய வாழ்த்துதலை தெரிவிக்கிறதை காணமுடியும் (பிலமோன் 24; கொலோ 4:14)
   - பவுல் தனது கடைசி நிருபமாகிய 2 தீமோத்தேயு எழுதும்போது தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னைவிட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான் என்று குறிப்பிடுகிறார் (2 தீமோ 4:10).

## <u>பவுலின் விடுதலைக்கு பின்...</u>

- கி.பி 62ல் ரோம சக்கரவர்த்தியாகிய நீரோவால் விடுதலை செய்யப்பட்டான். ஆரம்பகால சபை வரலாற்றாசிரியரான 'யொசிபஸ்' கி.பி. 325ல் தன்னுடைய எழுத்தில் பவுல் ரோமாபுரியில் முதல் சிறையிருப்பின்போது சிரைச்சேதம் செய்யப்படவில்லை என்று எழுதுகிறார்.
- பவுல் விடுதலையாக்கப்பட்ட பின்பு பிலேமோனை (கொலோசே) மட்டுமல்ல, பிலிப்பு பட்டணத்தையும் போய் சந்திக்கவேண்டும் என்று ஆவலோடிருந்தார் (பிலமோன் 22; பிலி 1:22-26). ஆகவே தான் விடுதலையடைந்தவுடன் தன்னோடிருக்கும் தீமோத்தேயுவை பிலிப்பியரிடம் அனுப்புவேன் என வாக்குபண்ணினதுபோல (பிலி 2:19-23) அவனை பிலிப்பி பட்டணத்திற்கு அனுப்பியிருக்கவேண்டும். அதன்பின்பு பவுல் கொலோசே பட்டணத்திற்கு (பிலமோன் 22) போயிருக்கவேண்டும்.
- இது பவுலின் ஆவலாக இருந்தாலும் தனது விடுதலைக்கு பிற்பாடு, நேரே கொலேசே போகாமல் ஸ்பானியா நாட்டுக்கு சென்றதாகவும் சில வேதாகம வல்லுனர்கள் (கிளமன்ட்-AD.95; 1கிளமன்ட்5:5-7) கூறுகின்றனர் காரணம் இது அவரின் ஆரம்பகால திட்டமாக இருந்தது (ரோமர் 15:22-24,28). ஸ்பானியா (ஸ்பெயின்) தேசமானது கொலோசேக்கு நேர் எதிராக உள்ளது. ரோமிலிருந்து கப்பலில் செல்ல 4-10 நாட்கள் ஆகும். ஸ்பானியாவுக்கு சென்றுவிட்டு அதன்பின்பு கொலோசே சென்றுருக்கலாம் என்பது அவர்களின் கூற்று. ஆனால்

பவுல் ஸ்பானியாவிற்கு போகவேண்டும் என்ற விருப்பத்தை தெரிவித்த வேதாகமம் அவன் அங்கு சென்றானா? என்பதை குறித்து எதுவும் சொல்லவில்லை.

- கொலோசே பட்டணத்திலிருந்து இப்போது பவுல் எபேசுவுக்கு வருகிறார். இதற்கிடையே பிலிப்பி பட்டணத்திற்கு சென்ற தீமோத்தேயு மக்கேதோனியாவிற்கும் சென்று அங்குள்ள செய்திகளை சேகரித்துக்கொண்டு எபேசுவுக்கு வருகிறான். அவர்கள் எபேசுவிலிருந்தபோது நடந்த சம்பவங்கள்...
    - கன்னானாகிய அலெக்சந்தர் பவுலுக்கு தீமைசெய்தான் (2 தீமோ 4:14)
    - ஓநேசிப்போரு எபேசுவிலே பல உதவிகளை பவுலுக்கு செய்துள்ளான் (2 தீமோ 1:16-18)
    - பவுல் மக்கெதோனியாவுக்குப்போகும்போது தீமோத்தேயுவை எபேசு பட்டணத்திலிருக்க வேண்டிக்கொள்கிறான் (1 தீமோ 1:3). காரணம் கள்ளபோதகர்கள் சபைக்குள் நுழைவார்கள் என பவுல் அறிந்திருந்தார். (இமெநேயும் பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள் - 2 தீமோத்தேயு 2:17).
- பின்பு அங்கிருந்து மக்கெதோனியாவுக்குப்போகிறான் (1 தீமோ 1:3,4). இங்கிருந்து தீமோத்தேயுவுக்கு தன்னுடைய முதலாவது நிருபத்தை எழுதுகிறான் (1 தீமோ 1:14,15).

<u>கிரேத்தா</u>

- மக்கெதோனியாவில் ஊழியத்தை முடித்துவிட்டு புறம்படும்போது பவுல் தீத்துவை அழைத்துக்கொண்டு கிரேத்தா தீவுக்கு செல்கிறார்.
- அங்கே தீத்துவை விட்டுசெல்கிறார். காரணம்... (தீத்து 1:5)
    - குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும்,
    - பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தவும்.
- கிரேத்தாதீவார் ஓயாப்பொய்யர், துஷ்டமிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள் ஆகவே, அவர்கள் யூதருடைய கட்டுக்கதைகளுக்கும், மனுஷருடைய கற்பனைகளுக்கும் செவிகொடாமல், விசுவாசத்தினாலே ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி, நீ அவர்களைக் கண்டிப்பாய்க் கடிந்துகொள் (தீத்து 1:12-14) என்ற அறிவுரையை நிருபத்தில் எழுதுகிறார்.

<u>கொரிந்து</u>

- கிரேத்தாவிலிருந்து பவுல் கொரிந்துவுக்கு செல்கிறார் (2 தீமோ 4:20). அங்கிருந்து தீத்துவுக்கு கடிதத்தை எழுதி நியாயசாஸ்திரிகயாகிய சேனா மற்றும் அப்பொல்லோ கையில் கொடுத்து அனுப்புகிறார் (தீத்து 3:13).
- பவுல் அர்த்தெமாவையாவது தீகிக்குவையாவது (ஆசியா நாட்டை சேர்ந்தவன் - அப் 20:4) தீத்துவினிடத்தில் அனுப்ப தீர்மானித்திருந்தார். அந்த சமயத்தில் அவனை நிக்கொப்போலிக்கு தன்னிடத்தில் வரசொல்லுகிறார். காரணம் மழைக்காலத்திலே அங்கே தங்கும்படி தீர்மானித்திருந்தார் (தீத்து 3:12).

<u>மிலேத்து</u>


- கொரிந்துவிலிருந்து துரோவா போக தீர்மானித்த பவுல், அதற்கு முன்பாக சில காரணங்களால் மிலேத்துவிற்கு போகிறான். அங்கு சென்றதும் துரோப்பீமு வியாதிபடுகிறான். என்ன வியாதி என்று பவுலால் கணிக்கமுடியவில்லை. ஆகவே அவனை அங்கேயே விட்டுசெல்கிறான் (2 தீமோ 4:20).
- மிலேத்துவிலிருந்து மக்கெதோனியாவிற்கு கப்பலில் செல்கையில் கப்பல் துரோவாவிலே நின்றிருக்கக்கூடும்.

<u>துரோவா</u>

- தீமோத்தேயுவுக்கு தனது இறுதி காலத்தில் எழுதின கடிதத்தில் ‘‘துரோவா பட்டணத்திலிருக்கிற கார்ப்பு என்பவன் வசத்தில் நான் வைத்துவந்த மேலங்கியையும், புஸ்தகங்களையும், விசேஷமாய்த் தோற்சுருள்களையும் நீ வருகிறபோது எடுத்துக்கொண்டுவா’’ என்று குறிப்பிடுகிறார் (2 தீமோ 4:13). ஒருவேளை பவுல் அவைகளை துரோவாவிலே விட்டுசெல்லும்போது கோடைகாலமாக இருந்திருக்கலாம் அல்லது கைது செய்யப்படும்போது அவைகளை விட்டுசென்றிருக்கக்கூடும்.
- மக்கெதோனியாவில் பவுலின் ஊழியங்களைக் குறித்து அதிகமாய் வாசிக்கமுடியாது. அங்கிருந்து மழைக்காலத்தில் தங்குவதற்காக நிக்கொப்போலிக்கு வர முடிவுசெய்தான். அதுமட்டுமல்ல தீத்துவும் அச்சமயத்தில் அவனோடு இருக்க விரும்பினான் (தீத்து 3:12).
- நிக்கொப்போலியிலோ அல்லது மக்கெதோனியா நாட்டில் உள்ள துரோவாவிலோ வைத்து பவுல் கைதுசெய்யப்பட்டிருக்கலாம். காரணம் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம்

நிருபத்தில் மாரிகாலத்துக்குமுன் நீ வந்து சேரும்படி ஜாக்கிரதைப்படு என்று எழுதுகிறார் (2 தீமோ 4:13,21)

- இத்துடன் பவுலின் நான்காவது ஊழியப்பிரயாணம் முடிவடைகிறது. கடைசியாக பவுல் கைதுசெய்யப்பட்டு ரோமாபுரிக்கு கொண்டுசெல்லப்பட்டான். இது முதல் சிறையிருப்பின்போது இருந்த வீட்டுக்காவல் அல்ல. சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகன்போலக் கட்டப்பட்டு, துன்பத்தை அநுபவிக்கிறேன் (2 தீமோ 2:9) என்று குறிப்பிடுகிறார். மட்டுமல்ல முதல் சிறையிருப்பின்போது அவருக்கு துணையாக அநேகர் இருந்தனர். ஆனால் இப்போது பவுலின் கட்டுகள் அதிகமானதால் அநேகர் அவனை விட்டுச்சென்றனர் (2 தீமோ 4:10-12).
  - ➢ தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்.
  - ➢ கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கு சென்றான்.
  - ➢ தீத்து தல்மாத்தியா நாட்டிற்கு சென்றான்.
  - ➢ தீகிக்குவை பவுல் எபேசுவுக்கு அனுப்பி வைத்தான்.
  - ➢ லூக்காமாத்திரம் பவுலோடு இருந்தான். தீமோத்தேயுவிடம், நீ வரும்போது மாற்குவை அழைத்துவா என்று கூறுகிறார்.




ரோமாபுரியில் பவுலுக்கு உதவியாய் இருந்தவர்கள்

- ஐபூலு, புதேஞ்சு, லீனு, கலவுதியாள் மற்றும் பல புது விசுவாசிகள் அவனுக்கு ஆதரவாக இருந்தார்கள் (2 தீமோ 4:21).
- ஒநேசிப்போர் பவுலின் விலங்கைக்குறித்து வெட்கப்படாமல், அதிக ஜாக்கிரதையாய் பவுலை தேடிக் கண்டுபிடித்தான். அவன் எபேசுவிலும் பல உதவிகளை செய்திருக்கிறான் (2 தீமோ 1:16-18).
- பவுல் கடைசியாக வாழ்த்துதல் சொன்னது பிரிஸ்காளுக்கும் ஆக்கில்லாவுக்கும், ஒநேசிப்போருவின் வீட்டாருக்குமே (2 தீமோ 4:19).
- 2 தீமோத்தேயு நிருபத்தை எழுதிய கொஞ்சகாலத்துக்குள்ளாகவே பவுல் ரோமாபுரியிலுள்ள ‘ஆஸ்டியன் பாதை’ என்னும் இடத்தில் கி.பி.64ல் சிரச்சேதம் பண்ணப்பட்டான் (2 தீமோ 4:6).
- தீமோத்தேயு பவுலை சந்தித்தாரா என்பதற்கு சான்றுகள் இல்லை.